Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஆு சித்திரை மீ 08 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 றம்ழான் பிறை 24 (21—04—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 11

# பிரபா - பாலகுமாரன்
# $2\frac{1}{2}$ மணி நேரம் பேச்சு!

## வடமராட்சியில் வியாழன் இரவு நடந்தது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய பிரமுகரான திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரனும் கடந்த வியாழக்கிழமை இரவு சந்தித்துப் பேசினர்.

வடமராட்சியில் திரு. பிரபாகரன் தங்கியிருந்த ஓரிடத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும்—

பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமான நிலையில் சுமார் இரண்டரை மணிநேரம் நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் போது திரு. பிரபாகரனுடன், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி ஆகியோரும்—

திரு. பாலகுமாரனுடன் ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பியான திரு. பரராஜசிங்கமும் பங்குபற்றினர்.

நேற்று முன்தினமிரவு மாலை நல்லூரில் எழுச்சிக் கூட்டத்தில் டாக்டர் பாலசிங்கமும், திரு. யோகியும் கலந்துகொண்ட பின்னர், இந்தச் சந்திப்புக்காக வடமராட்சிக்கு விரைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பில் சில அடிப்படை விடயங்கள் பற்றி பேசப்பட்டதாகவும்—

சீர்கெட்டிருக்கும் இரு தரப்பு உறவுகளைச் சீராக்கும் விதத்தில் பேச்சுக்கள் அமைந்ததாகவும் —

பேச்சுவார்த்தைகள் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## விஜயம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஏப் 21

யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி வருகை தரவிருந்த புனர்வாழ்வு அமைச்சர் திரு. அதிகாரியின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

★ யாழ். மாவட்டத்தில்

## மூன்று மாத காலத்தில் மட்டும் 35 தற்கொலைகள்

யாழ்ப்பாணம். ஏப். 21

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதத்தில் 35 பேர் தற்கொலை செய்துள்ளார்கள் என்று யாழ். பொலீஸ் திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கூடுதலாக 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களும், யுவதிகளுமே இவ்வாறு தற்கொலை செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பெரும்பான்மையானவர்கள் பெற்றோரின் பேச்சுக்கு ஆளானதில் கோபமடைந்து இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் இந்தக் காலப் பகுதியில் தற்கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பியவர்களிலும் அனேகமானோர் இதே காரணத்துக்காகவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரியவந்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

''கடந்த காலங்களில் கொலைகளினால் இறப்பு வீதம் கூடியிருந்தது. ஆனால் இப்போது தற்கொலைகளினால் இறப்பு வீதம் அதிகரிக்கிறது'' என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

## இஸ்ரவேல் அதிகாரிகள் வெளியேறினர்

கொழும்பு, ஏப்ரல் 21

இஸ்ரவேல் நலன்காக்கும் பிரிவு நேற்றுடன் மூடப்பட்டது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இப்பிரிவு இயங்கி வந்தது.

நேற்று முன்தினம் இப்பிரிவின் அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறினர்.

இதனை அமெரிக்கத் தூதரகம் நேற்று இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு அறிவித்தது.

இஸ்ரவேலின் நலன் காக்கும் பிரிவை மூடிவிடுவது என்ற முடிவை ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி அறிவித்தார்.

## வவுனியாவில்

எதிர்வரும் மே தினத்தன்று கொழும்பில் நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கொண்டாட்டங்களில் வவுனியா மாவட்டத்திலிருந்து 200 ஆதரவாளர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ், சிங்கள முஸ்லிம் கலாசாரங்களையும், இங்கு நிலவும் ஒற்றுமையான சமூக சூழ்நிலையையும் பிரதிபலிக்கும் வகையிலான ஊர்திக் காட்சியும் மேதின ஊர்வலத்தில் பிரதிபலிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-164)

# கிழக்கிலங்கை விஞ்ஞான பீடம்
# சுமார் 14 கோடி ரூபா செலவில்!

## பிரிட்டிஷ் நிறுவனமும் உதவும்

கொழும்பு, ஏப்ரல் 21

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரைவில் விஞ்ஞான பீடம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இதற்காக சுமார் 14 கோடி ரூபா வரை செலவிடப்படவிருக்கிறது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் இதனை சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இதற்கு முன்னோடியாக ஆய்வு கூடம் அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இதற்காக 2 கோடி ரூபாவைச் செலவிடும்.

மற்றும் ''ஓ டி ஏ'' என்று அழைக்கப்படும் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி ஏஜென்சி 20 லட்சம் ஸ்ரேர்லிங் பவுணை (சுமார் 12கோடி ரூபா) ஆய்வுகூட உபகரணங்களுக்காக வழங்க முன்வந்துள்ளது. (இ-2)

## திங்கள் முதல் சுங்கப் பகுதி

கொழும்பு, ஏப் 21

முல்லைத்தீவு, மன்னார். தலைமன்னார் ஆகிய இடங்களில் உள்ள சுங்க அலுவலகங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல்மீண்டும் இயங்க உள்ளன.

இதற்காக சுங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (இ-2)

# மாகாண சபையைக் கூட்டும்
# திட்டம் இப்போதைக்கு இல்லை!

## ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள் தகவல்

கொழும்பு ஏப் 21

வடக்கு, கிழக்கு மாகாண சபையை உடனடியாக கூட்டும் முயற்சி எதிலும் ஈ. பி. ஆர். எல். எவ் வட்டாரங்கள் ஈடுபடமாட்டா.

ஈ. பி. ஆர். எல். எவ்வின் முக்கிய பிரமுகர் ஒருவர் கொழும்பில் வைத்து இத்தகவலை சஞ்சீவிக்கு வெளியிட்டார்.

ஒரிஸ்ஸாவில் உள்ள ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்களுடனும், வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இந்தியா சென்றிருந்த மாகாண சபையின் தவிசாளர் திரு. பொன். ராம் ராஜகாரியர் கொழும்பு திரும்பி விட்டார்.

ஆனாலும் மாகாண சபையை உடனடியாகக் கூட்டும் எந்த முயற்சியிலும் அவர் ஈடுபடமாட்டார்.

இலங்கை அரசுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்துக்கும் இடையில் நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதற்கான சூழ் நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் போக்கைப்பொறுத்தே மாகாண சபையைக் கூட்டுவதற்கு முயற்சி எடுப்பதா என்பது பற்றி தீர்மானிக்கப்படும் - இவ்வாறு அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார். (உ)

# புலிகளின் மேதினக் கூட்டம் மத்திய கல்லூரி மைதானத்தில்!

யாழ்ப்பாணம், ஏப். 21

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

கூட்டத்திற்கு முன்னர் நடைபெற இருக்கும் ஊர்வலங்களில் ஊர்திகள் பவனிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தொழிலாளர் தினத்தை மையமாகக் கொண்ட ஊர்திகளே அந்தப் பவனியில் இடம்பெறும்.

தெரிவு செய்யப்படும் மூன்று ஊர்திகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# அரசு - ஈ. பி. ஆர். எல். எவ் சந்திப்பு குறித்து கடிதம்

## 10 தினங்களில் ரஞ்சன் அனுப்புவாராம்

கொழும்பு, ஏப்ரல் 21

அமைச்சர்கள் - ஈ. பி. ஆர் எல். எவ். உத்தேச சந்திப்பு சம்பந்தமாக அந்த இயக்கத்துக்கு தான் 10 தினங்களில் கடிதம் ஒன்றை எழுத இருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி. ஒருவர் அனுப்பிய கடிதத்துக்கு பதிலாகவே மேற்படி கடிதம் அமையும் என்றும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார்.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் நிபந்தனையோ நியதியோ இன்றி பேச்சு வார்த்தைக்கு வருவார்களேயானால் அரசு பேசுவதற்குத் தயார் என்றும்–

பேச்சுவார்த்தையில் அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்தும், அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவும் கலந்து கொள்வர் என்றும் – செய்தி வெளியாகி இருந்தது என்பது தெரிந்ததே. (ஓ-எ)

# கோட்டையில் நேற்று பெரும் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 21

பல வருட கால இடைவெளியின் பின்னர் கோட்டைப்பகுதி நேற்று கலகலப்பாக இருந்தது.

கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த றிசேர்வ் பொலீஸ் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சையே கோட்டையை கலகலப்பாக்கியது. நேற்று அதிகாலையில் இருந்தே பெரும் கூட்டம் அங்கு திரண்டது.

றிசேர்வ் பொலீஸ் படையில் சேருவதற்காக இளைஞர்கள், யுவதிகள் என்று ஆயிரக்கணக்கில் கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் கூடினார்கள்.

ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்காக முண்டியத்துக் கொண்டு முன் சென்றனர்.

எப்படியாவது இந்த வேலை கிடைத்து விடவேண்டும் என்ற ஆதங்கத்தில் இளைஞர்கள் கூடியிருந்தனர். பொலீசாரால் கூட அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வேலை ஒன்றில் சேர்ந்துவிட வேண்டும் என்பதில் இளைஞர்கள் காட்டிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று கலந்துரையாடல்

### யோகி, பேராசிரியர்கள் கருத்துரை

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்தில் நேற்று சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் சரித்திர சான்றுகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரான திரு. யோகரட்ணம் யோகியும் கலந்துகொண்டார்.

திரு. யோகி ''தமிழ்ப் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு புத்திஜீவிகளின் பங்களிப்பு மிக மிக அவசியம்'' என வலியுறுத்திப் பேசினார். புத்திஜீவிகளின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை எடுத்துக்கூறிய அவர், இன்றைய அரசியல் நிலைபற்றியும் விரிவாக விளக்கினார்.

தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ரவி ''சமூக பொருளாதார அபிவிருத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு திறக்கும் நேரம்

21-04-1990
ஸஹர் முடிவு 4-26
நோன்பு திறக்கும்
நேரம் 6-19

## முல்லைத்தீவில் வியாழன் எழுச்சிப் பேரணி, கூட்டம்

### அன்னை பூபதியின் நினைவாக

முல்லைத்தீவு, ஏப்ரல் 21

அன்னை பூபதி நினைவாக நேற்று முன்தினம் முல்லைத்தீவில் எழுச்சிப் பேரணியும், மாபெரும் பொதுக் கூட்டமும் இடம்பெற்றன.

பேரணியில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவிகளின் பாண்ட் வாத்தியம் மற்றும் காவடி, கரகாட்டங்கள் ஆகியனவும் இடம்பெற்றன.

பேரணி முடிவில் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு அன்னையர் முன்னணித் தலைவி திருமதி சூ. மாத்தம்மா தலைமை வகித்தார்.

இதில் முல்லை மாவட்ட புலிகள் மக்கள் முன்னணி இராணுவப் பொறுப்பாளர் திரு. திவாகர், மாவட்டப் பொறுப்பாளர் திரு. மனோ, அரசியல்பொறுப்பாளர் திரு. கைலாஸ், முல்லைத்தீவுப் பொறுப்பாளர் திரு. முல்லைச்செல்வம் ஆகியோர் பூபதியின் தியாகங்கள் பற்றி உரையாற்றினர்.

கூட்ட முடிவில் அன்னை பூபதியின் நினைவாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (உ-92)

## பொலீஸ் தெரிவுக்கு

# யாழ்ப்பாணத்தில் மட்டும் 5,000 விண்ணப்பங்கள்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

நேற்று நடந்த 'றிசேர்வ்' பொலீஸாருக்கான நேர்முகப் பரீட்சையில் சுமார் 50 ஆண்களும் 14 பெண்களும் தெரிவாகினர்.

நேற்று சுமார் 140 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இதேவேளை நேற்று மட்டும் முன்னர் விண்ணப்பிக்காதவர்களும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களுமாக சுமார் 5 ஆயிரத்திற்கு அதிகமான ஆண்களும் பெண்களும் புதிதாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைபற்றிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## சுபநேரம்

சனிக்கிழமை சித்திரை 8
21-04-1990

சுபநேரம்:
03-01 முதல் 04-31 வரை

இராகுகாலம்
09-01 முதல் 10-31 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

# வெடிபோட்டு மீன்பிடிக்க விடுதலைப் புலிகள் தடை!

யாழ்ப்பாணம், ஏப். 21

வெடிபோட்டு மீன் பிடிப்பதை விடுதலைப் புலிகள் தடை செய்துள்ளனர். தடையை மீறி இச்செயலில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் விடுத்துள்ளார்.

கடல்வளத்தைப் பேணவும், தொழிலாளரின் எதிர்கால நலன் கருதியுமே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் எல்லாப் பகுதிகளிலும் இத்தடை உத்தரவு அமுலுக்கு வருவதாகவும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# கடைகளை இரவு 9 மணிவரை திறக்குமாறு கோரிக்கை

## யாழ் வர்த்தகர் சங்கமும் விடுத்தது

யாழ்ப்பாணம், ஏப். 21

வியாபார நிலையங்களை இரவு 9 மணிவரை திறந்து வைக்குமாறு யாழ். வர்த்தக சங்கமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அன்மையில் விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு தாம் முழு ஆதரவு வழங்குவதாகவும்–

அதன்படி வியாபார நிலையங்களை யாழ். நகரப் பகுதியில் இரவு 9 மணி வரை திறக்கும்படியும் வர்த்தக சங்கத்தினர் கேட்டுள்ளனர். (உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

CD 125T Benly 1987 Model [Motor Biycycle] Sports Bicycle 12 Speed Casia விற்பனைக்குண்டு. தொடர்பு: K. S. Velayuthapillai Thavady South Kokuvil காலை 8 மணி முதல் 12 மணி வரை பார்வையிடலாம். (12338)

4'', 3'' கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: No. 20 மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (3284)

## சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர் தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

## தேவை

குறிஸ்ட் ஹோட்டலுக்கு பார் கீப்பர், சமையல் ஆள், உதவியாளர், வெயிற்றர் உடன் தேவை. சவோய் குறிஸ்ட் ஹோட்டல், கிரிமலை றோட், (K.K.S சந்தியிலிருந்து 400 மீற்றர் தூரத்தில்) (3269)

Fridec வேலை றீவைண்டிங் வேலை பழக ஆர்வமுள்ளவர்கள் உடன் தேவை ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3286)

## ஆசிரியர் தேவை

G. C. E. (O/L) 1990 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றும் மாணவனுக்கு விஞ்ஞான பாடம் படிப்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. C/o No. 120, உதயன் யாழ்ப்பாணம். (12938)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, தமிழ்க் கிறிஸ்தவ 40 வயது வாலிபர், வெளிநாட்டு நிறுவனமொன்றில் தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்றும், மாதம் 5000/- சம்பளம் பெறும், 5' 4'' உயரமானவருக்கு 5' 2'' உயரமுள்ள அழகான மணப்பெண் தேவை. முதற் கடிதத்திலேயே முழு விபரத்தையும் அறிவிக்கவும். இல. 646, C/o உதயன். (3277)

## விபரம் தேவை

C. 90, 87 Sri 3580 இலக்க மோட்டார் சைக்கிளின் தற்போதைய உரிமையாளர் குட்டி இராமதாஸ் அல்லது இராமச்சந்திரன் என்பவருடைய விபரங்கள் தேவைப்படுவதால் தயவு செய்து தொடர்புகொள்ளவும். முகாமையாளர் K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. [12926]

## காணி விற்பனைக்கு

உடுவில் லவ் லேனில் 13 பரப்புக்காணி வீடுகட்ட, தொழிற்சாலை அமைக்க உகந்தது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். No. 678 C/o உதயன். (3290)

## முதலாம்பிள்ளை

நோர்வே தமிழ் நாதம் நடாத்திய வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு நாடக நூல்கள் கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/- 19 நாடகங்கள் விற்பனையாகின்றன (12324)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு [பிலிமத்] சேவற் குஞ்சுகள், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் முறையே ஒவ்வொரு செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3202)

## கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Lohmann) பிறவுண் சேவல் தனிக் கறுப்பு, சிகப்பு நிற சேவல், (பிலிமத்) கறுப்பு வரி சேவல், புறோயிலர் வான் கோழிக் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் (25-4-1990) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (3279)

## Marriage Centre

Master Numerology Marriage Centre திருமணம் ஆகாத ஆண், பெண் இருபாலாரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். நியூமரோலஜி சோதிட முறையில் பொருத்தம் பார்த்து அதிஷ்டகரமான திருமணம் செய்து வைக்கப்படும். Numerology Master, C. K. Srirajarajeaswaran Vaitheeswara Veethi, Valvettiturai (2888)

## Numerology Centre

நியுமரோலொஜி கலையின் அதிஷ்ட இரகசியங்களை அறிந்து கொண்டு நீங்களும் அதிஷ்டசாலிகள் ஆகலாம். உங்கள் சகல பிரச்சினைகளும் நீக்கி வைக்கப்படும். உங்கள் பிரச்சினைகள் என்ன? விபரத்திற்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Numerology Master, C. K. Srirajarajeaswaran, Vaitheeswara Veethl, Valvettiturai. [2887]

## கல்வி

O/L தொடக்கம் பல்கலைக் கழகம் வரையுள்ளவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். S. ஜெயராஜா கல்யாணி ஆங்கிலகல்வி நிலையம். 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (2873)

## Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/4209)

## WANTED PHARMACIST

Wanted a well experienced PHARMACIST for a leading Medical Stores in Jaffna Town. Apply with Particulars. No: 677, C/o Uthayan. (3280)

## A/L இரசாயனம்

Inorganic ஆரம்பம் சனி, 21-4-1990 சனி, ஞாயிறு 3 p.m. பிரிவு -2 செவ்வாய், புதன் 5 p. m. ஆசிரியர் சத்தீஸ், 108 Brown Road (3283)

## ஆங்கிலக் கல்வி தபாலிலும் நேரிலும்

ஆங்கில வகுப்புகள் பரீட்சைகளில் இலகுவில் சித்தியெய்தவும், பொதுவாக அறிந்திருக்கவும், தபால் மூலமும் நேரிலும் நடைபெறுகின்றன. நேரில் அல்லது சுயவிலாசமிட்டு முத்திரையொட்டிய தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும். 16/2, முதலாம் ஒழுங்கை, ரெம்பிள் றோட், (கத்தோலிக்க ஆச்சிரமம் அண்மையில்) யாழ்ப்பாணம். (3287)

## மணமகள் தேவை

யாழ். உயர் வேளாள குலத்தில் பிறந்தவரும் மேல் நாட்டில் படித்து கனடாவில் நிரந்தரமாக உயர் உத்தியோகம் வகிப்பவரும் செவ்வாய் குற்றமில்லாதவருமான அழகிய 30 வயது நிரம்பிய ஒரே ஒரு பிள்ளைக்கு படித்த அழகிய நல்ல நிறமுள்ள 25 வயது வரையுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் தேவை. தொடர்பு 538, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (12359)

## தவறிவிட்டது

3 லொறி அத்தாட்சி புத்தகங்கள் தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12937)

## கோழிக்குஞ்சுவிற்பனைக்கு

Hyline சிவப்பு கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச் சேவல் குஞ்சு புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும் இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்குண்டு. Lucky Farm House, mathavady Lane, Thirunelvely. (3291)

## புதிய வகுப்புகள்

25-4-90 பி. பி. 3 மணிக்கு S. ஜேம்ஸின் Spoken English வகுப்புகளும் S.K. ஜீவமோகனின் 9, 10, 11 ஆண்டுகளுக்குரிய கணித வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. தொடர்பு: ''A'' லெவல் சென்ரர், மணல்தறை லேன் கந்தர்மடம். (3292)

கிளிநொச்சி, கச்சேரி

# கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக் கச்சேரி, திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க்காட்டப்படும் கட்டிட வேலைக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1990 ஆம் ஆண்டு மே மாதம், 07 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரைக்கும், ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேவைப்படும் பதிவுத் தொகை மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம், மீளப்பெற முடியாத கொடுப்பனவு ஆகியன கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத்தொகை ரூபா. | மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா. | மீளப்பெற முடியாத கொடுப்பனவு ரூபா. |
|---|---|---|---|---|
| 01 | கிளிநொச்சி கச்சேரி பெண் ஊழியர்களுக்கானவிடுதி அமைத்தல் | 800, 000. 00 | 500/- | 250/- |

இவ் வேலைக்குரிய கேள்விப் பத்திரப் படிவங்களை மீளப்பெறக்கூடியதும், மீளப்பெறமுடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990-04-30 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்,
திணைக்களக் கேள்விச்சபை, தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும், அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி,
கிளிநொச்சி,

(சி/4458)

## மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்

# மல்லாகம் அணி வெற்றி.

யாழ்ப்பாணம் ஏப் 21 புதுவருட தினத்தை முன்னிட்டு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணிக்கும் அளவெட்டி அருணோதயன் அணிக்கும் இடையில் சினேகபூர்வமான, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது.

இப் போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி 113 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி 25 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 186 ஓட்டங்களை பெற்றது. அணித்தலைவர் சற்குணசீலன் 6 சிக்சர்கள் 3 பவுண்டறிகள் உட்பட 75 ஓட்டங்களையும், பொன்வில்லியஸ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து ஆடிய அளவெட்டி அருணோதயன் அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களையே பெற்றனர். மதி 38 ஓட்டங்களைப் பெற்றார்.

இவ்வாட்டத்தின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மல்லாகம் கி. அ. ச. அணியை சேர்ந்த சற்குணசீலனும், சிறந்த பந்து வீச்சாளராக மல்லாகம் கி.அ.ச. அணியை சேர்ந்த பொன்வில்லியசும், சிறந்த பந்து தடுப்பாளராக அளவெட்டி அருணோதயன் அணியை சேர்ந்த மதியும் தெரிவு செய்யப்பட்டனர். (க-மு)

## விளையாட்டுப் போட்டி

மானிப்பாய், ஏப்ரல் 21 சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இவ் விளையாட்டுப் போட்டிகளில் மானிப்பாய் கொத்தணி அதிபர் திரு. எஸ். கேசவராயன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுபோட்டிகளுக்கான ஒழுங்குகளை விளையாட்டு அதிகாரி திரு. பி. கிருபானந்தன் செய்திருந்தார். (ப-90)

## கௌரவிப்பு வைபவம்


தாவடி மத்திய சனசமூக நிலையம் நாதஸ்வர வித்துவான்களான கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரரைக் கௌரவித்துபட்டம் வழங்கும் வைபவம் ஒன்றைக் கடந்த 18 ஆம் திகதி நடத்தியது.

திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வலி. தெற்கு உதவி அரச அதிபர் திரு. ஏ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார்.

இந்த வைபவத்தில் மேற்படி சனசமூக நிலையம் நடத்திய பொது அறிவுப் போட்டிக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. தேவராசா நன்றியுரை கூறினார். (க)

# குறைந்த செலவில் வீடு






tile roofing
A main room
B bed room
C
D kitchen
E living.

This House Will Cost Above 2,0875/-

THE DESIGN DEVELOPMENTS LTD

இலகு முறையில் வீடு அமைப்பதற்கு பொருட்களையும் மேசன் கூலிகளையும் கணக்கிட்டு ஆலோசனைகளையும் தர உள்ளார்கள்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**ரஞ்சன் ஹாட்வெயர்ஸ்,**
யாழ்ப்பாணம் றோட்,
மானிப்பாய்.

**அபிராமி எலக்ரிக்கல்ஸ்,**
பலாலி றோட்,
திருநெல்வேலி.

[3328]

# SPOKEN ENGLISH

ஆங்கிலம் பேச வேண்டுமா? பிறரைப் போல் கூச்சமின்றி நீங்களும் ஆங்கிலத்தில் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்- மிக மிக புதுமையான உளவியல் முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள் எளிய அஞ்சல் வழி பயிற்சி - தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம். நூற்றுக்கணக்கான மாணவர்கள் கற்று இன்று ஆங்கிலம் பேசும் வல்லமையை அடைந்துள்ளனர்.

## International Association of Book–Keepers (London Exam)

இப்பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்படும் பயிற்சியாகும். இதில் ஆரம்ப, நடுத்தரம், இறுதிதரம் எனும் மூன்று பகுதியினருக்கும் ஆங்கில மொழியில் தபால் மூலம் கற்றுத் தரப்படும். இப்பரீட்சைகளுக்கு கடந்த 5 வருட பயிற்சி வினாவிடைகளும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

## Effective English with Grammar

க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கான விசேட பாடத்திட்டம். இக்கல்வித் திட்டத்தில் ஆறு மாத காலம் பயிற்சி செய்தவர்களுக்கு சாதாரண தர பரீட்சையில் திறமைச் சித்தி பெறக் கூடிய ஆங்கில பாடத்திட்டம். இதனை விட

## British Council – University of Cambridge first Certificate in English for Proficiency in English Certificate Examination

ஆகிய பரீட்சைகளுக்கும் இப்பாடத்திட்டம் வழி வகுக்கும். ஆங்கில இலக்கணத்தை மாணவர்களுக்கு மிகவும் இலகுவான வழியில் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அமைந்த பாடத்திட்டம் எம்மிடம் பேச்சு ஆங்கிலம் படித்த மாணவர்களுக்கு விசேட சலுகை எனவே எம்மிடம் படித்த மாணவர்கள் தங்கள் மாணவ இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

## Structured Basic Computer Programming

மாணவர்களுக்கு தமிழில் சாதாரணமாக விளங்கக் கூடிய முறையில் அமைந்த பாடத் திட்டம். பேசிக் கொம்பியூட்டர் புறோக்கிராமிங் மூன்று மாதத் திட்டம் இப்பாடத் திட்டத்தில் எல்லா மாணவர்களுக்கும், இலகுவில் விளங்கக் கூடிய முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய தபால் மூலம் கல்வித்திட்டம் இத்திட்டத்தில் சேருபவர் தமக்கு விரும்பும் இடத்தில் இக்கலையின் செய்முறைப் பயிற்சியை மேற்கொள்ளலாம். எமது பாடத்திட்டம் மாணவர்களுக்கு இலகுவில் விளங்க வைப்பதையே நோக்கமாகக் கொண்டது. இப்பாடத்திட்டத்திற்கு கட்டணம் ரூபா 150.00 மாத்திரமேயாகும். கொம்பியூட்டர் பற்றிய அறிவை வளர்க்க விரும்புபவரும் இத்திட்டத்தில் இணையலாம்.

## Method of Book-Keeping (தபால் மூலம் கல்வி)

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இதற்கு மொத்தக்கட்டணம் ரூபா 500.00 மாத்திரமே,

இன்று நாட்டில் கணக்கு பதிவாளர் (புக்கீப்பர்) கணக்கு லிகிதர் (எக்கவுன்ஸ் கிளார்க்), கணக்கு பரிசோதகர் (ஓடிட் கிளாக்) ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்ளுவதன் மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல் துறையில் இங்கிலாந்து (லண்டன்) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருட கால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடனே இப் பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப் பயிற்சியினை திறம்பட செய்து முடிப்பவர்கட்கு சிறந்த தொழிலினை தேடித்தரக் கூடிய சிறந்த சான்றிதழ் வழங்கப்படும்.

## SPOKEN SINHALA

சிங்களத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை - கவலை வேண்டாம். மூன்றே மாத காலத்தில் உளவியல் ரீதியில் மிகத் திறம்பட சிங்களம் பேசக்கூடியதாக கற்றுத் தேற முடியும். விபரங்களை அறிய விரும்புவோர் ''ஸ்போக்கன் சிங்ஹள'' என இடது பக்க தபால் மூலையில் எழுதி அனுப்பவும்.

## BUSINESS ENGLISH

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத் திட்டம் - இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விண்ணப்பப்படிவம் எப்படி தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்றாட பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

## புது அறிவொளி

வெளிவந்து விட்டது. எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ், பிரபல்ய புத்தக கடைகளில் கிடைக்கும். நேரடியாக பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து படிக்க விரும்பும் மாணவர்கட்கு பல விசேட வசதிகள் செய்துள்ளோம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:-

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX 162, COLOMBO.
SRI LANKA

[சி-4800]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபகீர்த்தியுடனேயே இந்தியா ஈழத்தை விட்டு வெளியேறியது

## நல்லூர் எழுச்சி விழாவில் பாலசிங்கம் உரை

யாழ்ப்பாணம் ஏப் 21 விடுதலைப்புலிகளை அழிக்கும் நோக்குடன் ஈழத்துக்கு வந்த இந்தியா அபகீர்த்தியுடனேயே ஈழத்தை விட்டு வெளியேறியது.

இவ்வாறு கூறினார் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம்.

நேற்று முன்தினம் நல்லூரில் எழுச்சி விழாவில் உரையாற்றிய அவர், விடுதலைப் புலிகளின் கடந்தகால வரலாற்றை தமது உரையில் தெளிவுபடுத்தி விளக்கினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

இந்திய ஆக்கிரமிப்புக்கும், அரசாங்கத்துக்கும், அட்டூழியங்களுக்கும் எதிராக தன்னுயிர் ஈந்த மகத்தான தியாகி அன்னை பூபதியை நினைவு கூருமுகமாக எழுச்சியுடன் கூடியுள்ளோம்.

இந்த நினைவு கூரும் நிகழ்வில் இந்திய யுத்தத்தின் பின்னணியைப் பற்றிய உண்மை நிலையை விளக்க வேண்டியது அவசியமானது.

பல இடங்களில் இந்திய வெளிநாட்டலுவல் அமைச்சர், அதிகாரிகள், ''றோ'' அமைப்பின் இயக்குநர் ஆகியோருடன் பேச்சு நடத்தியவன் நான் என்பதை சகலரும் அறிவீர்கள். நாம் சிக்கலான உறவைத் தான் அவர்களுடன் கொண்டிருந்தோம்.

### இந்திய புலிகள் யுத்தம் ஏன்?

இந்திய - புலிகள் யுத்தம் பற்றி ஒரு குழப்ப நிலை மக்களிடையே நிலவுகிறது. ஏன் மோதினார்கள்? தவிர்த்திருக்க முடியாதா? இந்த பேரழிவு ஏன்? என்று பல கேள்விகள் எழுந்துள்ளன.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை அடுத்து இந்தியா தமிழர் பிரச்சனையில் தலையிட்டது. இந்த தலையீடு இரண்டு வித பரிணாமத்துடன் இருந்தது. ஒன்று- ராஜதந்திர அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் நடத்தினார்கள். இரண்டு - தமிழ் ஈழத்தில் இயங்கும் தமிழ் அமைப்புக்களுக்கு ஆயுதம் வழங்கி சிங்கள இராணுவத்துக்கு எதிராக யுத்தம் செய்யத் தூண்டினார்கள்.

அன்று தம்பி பிரபா இந்தியாவிடம், ''பல ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம். ஓர் இயக்கத்துக்கு ஆயுதம் வழங்கி அந்த இயக்கத்தை வளர்க்க வேண்டும். பல இயக்கங்களை வளர்ப்பதன் மூலம் இயக்க மோதல்கள் ஏற்பட்டு மக்கள் அழிய வேண்டி வரும்'' என்று கூறி வந்தார்.

இதை இந்தியா செவிமடுக்கவில்லை. தமிழீழத்தில் தனியாக ஓர் இயக்கத்தை பலம் வாய்ந்ததாக உருவாக்க இந்தியா விரும்பாததே அதற்கு காரணம்.

மற்றைய இயக்கங்களுக்கு கூடுதல் உதவி வழங்குவதன் மூலம் புலிகளுடன் இயக்க மோதலைக் கொண்டு வந்து, புலிகளை அழித்து விடலாம் என்று திட்டமிட்டு தமக்கு தலையாட்டும் இயக்கங்களை இந்தியா வளர்த்து வந்தது.

''தமிழீழம்'' சுதந்திரம் பெறுவதை அன்றிலிருந்தி இன்றுவரை இந்தியா எதிர்த்து வருகிறது. தமது வல்லாதிக்கத்துக்கும், நாட்டுக்குள்ளும் இது பூகம்பத்தை ஏற்படுத்தும் என்ற சிந்தனையில் புலிகளுக்கும், அதன் இலட்சியமான தமிழீழத்துக்கும் எதிராகவே இந்தியா செயல்பட்டு வந்திருக்கிறது.

பலம் வாய்ந்த இயக்கமாக புலிகள் வளர்ந்து வந்த நேரத்தில் ''றோ'' மற்ற இயக்கங்களுக்கு கூடுதல் பயிற்சி அளித்து எம்முடன் மோத விட்டது. அதன் மூலம் புலிகளைப் பலவீனப் படுத்தி, அழித்து தலையாட்டும் பொம்மை இயக்கங்களை உருவாக்க முனைந்தது தான் எமக்குள் ஏற்பட்ட இயக்க மோதல்கள். ஆனாலும் புலிகளின் இலட்சிய தாகம் அதைப் பலம்வாய்ந்த இயக்கமாக்கியது.

85 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத் தாக்குதல்களின் போது புலிகளே போராடினார்கள். மற்றைய இயக்கங்கள் கொள்ளை, சரண்டல், சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டன. எம் கட்டுப்பாட்டில் குடா நாடும், மற்றைய பகுதிகளும் இருந்தன. இராணுவம் முகாமில் முடங்கிக் கிடந்தது.

### இந்தியா வகுத்த சூழ்ச்சித் திட்டம்

இந் நிலையில் இந்தியா சதி செய்ய சூழ்ச்சித்திட்டம் தயாரித்தது. வடமராட்சி தாக்குதல் எப்போது, என்ன நேரம் மேற் கொள்ளப்படும் என்றமுழு விபரமும் ''றோ'' அமைப்புக்குத் தெரியும். ஆனால் ''றோ'' எமக்கு பொய்த் தகவல் தந்தது- ''யாழ்-நகர் மீது ஸ்ரீலங்கா இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப்போகிறது. உங்கள் வீரர்களை நகர்ப் பகுதிக்கு நகர்த்துங்கள்'' என்று றோ கூறியது.

அதை நம்பிய நாம் குடா நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து எம் வீரர்களை யாழ். நகருக்கு நகர்த்தினோம். ஆனால் இதற்கு மாறாக வடமராட்சியை ஸ்ரீ லங்கா அரசு தாக்கிய போது நாம் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

அந்த நேரத்தில் நான் இந்தியாவில் இருந்தேன். பிரபா யாழ்ப்பாணத்தில் இருந்து எனக்குத் தகவல் தந்தார். ''ஆயுதங்கள் அவசரம் வேண்டும். இந்தியாவிடம் பெற்று உடன் அனுப்புங்கள்'' என்று. ஆனால் ஆயுதம் தர இந்தியா முன் வரவில்லை.

இந்த நிலையை வைத்து ''புலிகள் தமிழ் மக்களைக் காப்பாற்ற மாட்டார்கள், வடமராட்சி போல் எல்லாப் பகுதியிலும் நடக்கப்போகிறது'' என்று இந்தியாவும் ''றோ'' வும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன.

இறுதியில் இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம் செய்தது. அத்துடன் இராணுவமும் வந்தது.

எம்கருத்து கவனிக்கப்படாமல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அச்சமயம் பிரபாவையும், என்னையும், யோகி, திலீபன் ஆகியோரையும் ஏமாற்றி டில்லிக்கு அழைத்துச் சென்று ''கறுப்புப் பூனை'' காவலில் வைத்தார்கள்.



அன்ரன் பாலசிங்கம்

இந் நிலையில் ஒப்பந்தத்தைப்பற்றி மிரட்டிக் கூறி ஒப்பந்தத்தில் கையெழுத்து வைக்கும்படி கேட்டார்கள்.

இந்தியத் தூதர் டிக்ஸிற், வெளிவிவகார அமைச்சர் ''றோ'' அதிகாரிகள் ஒப்பந்தத்தை வாசித்துக் காட்டி ஒரு மணி நேரத்தில் ஏற்க வேண்டும் என்றனர். ''ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட இலங்கை போகிறார்'' என்றும் கூறினார்கள்.

40 ஆண்டுகால சிக்கலான வீர வரலாற்றுடன் போராடிய தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தை ஒருமணியில் தரவேண்டுமா என்று அவர்களிடம் பிரபா கேட்டார். சாட்டுக்காக அவசரமாகவாசித்தோம். ''ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனையான, 72 மணி நேரத்தில் எமது இராணுவத்தைக் கலைத்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றதை ஏற்கமுடியாது'' என்றோம்.

தியாகத்தின் அடிப்படையில் வளர்ந்த இயக்கம், எப்படி உப்புச்சப்பற்ற மாகாணசபையை ஏற்பது என்று கேட்டோம்.

பிரபா இந்த ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டார். ''நீங்கள் ஏற்காது விட்டால் ஆறு மாதம் என்ன, ஆறு வருடங்கள் இங்கு தங்க வேண்டி வரும்'' என்று மிரட்டினார்கள் ''என்னைக் கொன்றாலும் சரி மக்கள் நலன் பாதிக்கும் ஒப்பந்தத்தை ஏற்கமாட்டேன்'' என்று பிரபா கூறினார்.

### இதுதானா பரிசு?

பிரபாவின் நெருங்கிய நண்பரும், பல உதவிகளை வழங்கியவருமான தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். சுகவீனமாக இருந்த போதும் அவரை அவசர அவசரமாக சென்னையில் இருந்து அழைத்துவந்து எம்முடன் பேசவிட்டனர்.

அவரிடம் பிரபா, ''எப்படி அண்ணா இதை ஏற்பது? தமிழர் நலனில் அக்கறை கொண்டு இதை ஏற்க முடியாத நிலையில் உள்ளோம்'' என்று தெரிவித்தார்.

''எந்த முடிவைத் தம்பி எடுக்கிறாயோ அந்த முடிவை நான் ஆதரிப்பேன். உனது முடிவுதான் எனது முடிவும்'' என்று எம். ஜி. ஆர். கூறினார்.

பின்னர் ராஜீவ் காந்தியிடம் நாம் அழைத்துச் செல்லப் பட்டோம் ராஜீவ்பிரபாவைக் கட்டி அணைத்து''மாபெரும் வீரன்'' என்று கூறி மகிழ்ச்சி தெரிவித்தார். பின் ஒப்பந்தம் பற்றி பேசிய போது பிரபா- ''நான் ஒப்பந்தத்தை ஏற்க முடியாது அந்த ஒப்பந்தத்தில் பல குறைபாடுகளும், பலவீனங்களும் உள்ளன. 40 ஆண்டுப்போராட்டத்தில் 15 வருடங்கள் இரத்தம் சிந்தி எம்மக்கள் போராடியதற்கு இதுதானா பரிசு?'' என்று கேட்டார்.

''எப்படியாவது மாகாண சபையை ஏற்றுக் கொள்ளுங்கள் சமாதானமுயற்சிகள்மேற்கொண்டு கூடுதல் அதிகாரம் பெற்றுத்தருகிறேன். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாம். சிங்கள மக்களுக்கு கடைசிச் சந்தர்ப்பமாக இதை வழங்குவோம் உரிமை தராவிட்டால் தமிழீழத்துக்கு ஆதரவும் உதவியும் தருவேன் என்று ராஜீவ் கூறினார்.

வல்லரசு ஆதரவும் எமக்கு தேவை என்ற காரணத்தால் பகைக்கக் கூடாது. என்று கருதி சில சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்கிறோம் என்றோம்.

''இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கித் தருகிறோம். ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கத் தேவையில்லை. பழைய ஆயுதங்களைகொடுத்தால் போதும் இந்தியா உங்கள் பின்னால்நிற்கும்'' என்று அவர் உறுதி அளித்ததையடுத்து தமிழீழம் திரும்பினோம். சில ஆயுதங்களை ஒப்படைத்தோம். வாக்குறுதிகளைத் நிறைவேற்றுவார்கள் என்று காத்திருந்தோம்இடைக்கால அரசுவரவில்லை. அதே நேரம் சிங்களக் குடியேற்றம் அதிகளவில்நடந்தது. சிங்களப் பொலிஸார் வந்தனர் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டது. அமைதிப்படையாக எல்லைப் புறக் காவலில் இந்தியப்படை ஈடுபடும் என்று இந்தியா முன் கூறியதற்கு மாறாக பெருந்தொகை இராணுவம் வந்து சேர்ந்தது.

### இந்தியா மீது சந்தேகம்

இதிலிருந்துதான் இந்தியா மீது எமக்கு சந்தேகம் எழுந்தது. எம் உரிமைகளைப் பெற்றுத்தர இவர்கள் முனையவில்லை. எம்மை முற்றாக அடக்கவே வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்தோம்.

அதே நேரம் மற்ற இயக்கங்களுக்கு ''றோ'' பயிற்சி கொடுக்கிறது எம்மை அழிக்க திட்டம் வகுக்கிறது என்று நாம் இந்தியாவிடம் கூறியபோது இந்தியா அதை ஏற்கவில்லை.

இதை ஆட்சேபித்தே திலீபன உண்ணாவிரதம் மேற்கொண்டார். அச்சமயம் யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்ஸிற்றை வந்து திலீபனுக்கு ஆறுதல் வார்த்தை கூறும்படி பிரபா கேட்டார். அவர் பிடிவாதத்தாலும், அசம்பாவத்தாலும் வரமறுத்தார். திலீபன் வீரமரணம் அடைந்தான்.

அத்துடன் எம் 17 போராளிகளின் கைது விடயத்திலும் இந்தியா மௌனம் சாதித்தது. கிளர்ச்சி வெடித்தது. இந்தியாவுடன் நாம் நேரடியாக மோதவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டோம். இந்தியா தன் நலனிலும், இலங்கையைதன் வல்லாதிக்கத்தில் கொண்டுவரவும்- இராணுவ ரீதியில் புலிகளை அழிக்கவும்- கொண்டிருந்த திட்டம் அம்பலமானது.

இரண்டு வருடமாகப் போர் நடந்தது. இந்தியாவை எவ்வகையிலும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற அவசர தேவையின் நிமித்தம் ஜனாதிபதி எம்முடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு வந்தார். அரசியல், ராஜதந்திர அடிப்படையில் செயல்பட்ட இந்தியா அபகீர்த்தியுடன் புலிகள் - அரசு பேச்சுவார்த்தையுடன் வெளியேறியது.

உலக வரலாற்றில் வியட்நாம் போர் முதல் பல நாடுகளின் போர் எல்லாம் மற்றைய நாடுகளின் உதவியுடன் வெற்றி பெற்றன. எம் போர் எந்த நாட்டின் உதவியும் இன்றி போராளிகளின் கணக்கில் அடங்கா தியாகத்தாலும், மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாலும் இன்று வெற்றி பெற்றுள்ளது.

(கு)

## முக்கிய அறிவித்தல்

காலஞ்சென்ற சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான எங்கள் தந்தை பொன்னையா நவரத்தினம் அவர்களிடம் உறுதிகள், வழக்குகள் தொடர்பாக ஆவணங்களை கையளித்திருப்பவர்கள் அனைவரும் இம் மாத இறுதிக்குள் தினமும் மாலை 5 மணிக்குப் பின் வந்து உங்கள் ஆவணங்களை கையேற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள். இவ்விடயம் தொடர்பாக அனைவரும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[12357]


## OFFICE SPACE WANTED

கொழும்பில் பெயர் போன தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றின் யாழ். கிளை அலுவலகம் இயங்குவதற்கு ஏற்றதாக இடம் தேவை. ஏறக்குறைய 2000 சதுர அடி விஸ்தீரணம் உடையதாகவும், யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளும் அமைய வேண்டும். யாழ். பஸ்தரிப்பு சுற்றாடல் விரும்பத்தக்கது. எதிர்பார்க்கும் வாடகை, முற்பணம் ஆகிய முழு விபரத்துடனும் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

THE ADVERTISER,
NO. 12, MAGAZINE ROAD,
COLOMBO - 8
Telephone: 596183

(3330)


### நினைவில் இன்று

21-04-1990

- கவிஞர் பாரதிதாசன் நினைவு தினம்
- பாரசீகக் கவி அல்லாமா இக்பால் நினைவு தினம்

பிறப்பு: 22-02-1872
இறப்பு: 21-04-1938

## சப்பாத்துக்குள் டொலர் கடத்த முயன்றவர் கைது!

கொழும்பு, ஏப்ரல் 21 ஒரு லட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலரை சப்பாத்துக்களுக்குள் மறைத்துக் கொண்டு வந்த இளைஞர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் பிடித்தனர்.

இந்த இளைஞர் மாலைதீவில் இருந்து கொழும்பு வந்திறங்கிய போதே அகப்பட்டுக் கொண்டார்.

(உ-எ)

## அப்பர் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21 அகில இலங்கைத் திருமறை மன்றத்தினரால் இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் கோவிலில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடத்தப் படவுள்ளது.

## நயினை விகாரைக்கு பௌத்த யாத்திரீகர்கள்!

பிரசித்தி பெற்றநயினாதீவு ஸ்ரீ நாக விகாரைக்குப் பௌத்தயாத்திரீகர்கள்நீண்ட கால இடை வெளியின் பின் தற்போது வரத்தொடங்கியுள்ளனர்.

கடந்த வாரம் காலி, கண்டி, குருநாகல், மாத்தறை ஆகிய பகுதிகளில் இருந்து பௌத்த பிக்குகள் உட்பட நூற்றுக்கணக்கான பௌத்த யாத்திரீகர்கள் நாகதீபம் வந்து சென்றதாக தெரிவிக்கப் பட்டது. (உ-30)

# திருகோணமலையை எவரும் பறித்தெடுக்க நாம் அனுமதியோம்!

## முற்றவெளிக் கூட்டத்தில் மாத்தயா சூளுரை

திருகோணமலை ஏப் 21 திருகோணமலையைஎவரும் பறித்தெடுக்க நாம் அனுமதிக்க மாட்டோம்.

இவ்வாறு சூளுரைத்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமிமகேந்திரராஜா (மாத்தயா).

திருகோணமலை முற்றவெளியில் கடந்த புதனன்று நடைபெற்ற முன்னணியின் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மூதூர் அரசியல் பொறுப்பாளர் திரு. அரசன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

இக் கூட்டத்துக்கு வருகை தந்த திரு. மகேந்திரராஜா (மாத்தயா), திரு. காசிஆனந்தன், திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன், திரு. பதுமன், மகளிர் முன்னணிப் பிரமுகர்களான செல்வி சுந்தரி, கீதா ஜெயா ஆகியோர் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இக் கூட்டத்தில் திரு. மாத்தையா பேசுகையில் மேலும் சொன்னதாவது:-

வரலாற்றுக் கடமைகாரணமாகவே நாம் ஆயுதங்களைத் தூக்கினோம். அந்த ஆயுதங்களை கீழே வைப்பதானால் அதற்குச் சரியான காரணங்கள் இருக்க வேண்டும்.

திருமலையை எக் காரணங்கொண்டும் எவரும் பறித்தெடுக்க நாம் அனுமதிக்க மாட்டோம். திருமலை எமது பாரம்பரிய பூமி.

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை அரசாங்கம் ஏற்கும் வரை தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வே இல்லை.

தமிழ் பேசும் மக்களை பாதுகாக்கவே ஆயுதங்களைத் தூக்கினோம். எமது பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு காணப்பட்டு எமது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படும்வரைநாம் ஆயுதங்களை எக் காரணங்கொண்டும் கீழே போடமாட்டோம். எமது தலைவர் வே. பிரபாகரன் இதனை திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

இப்படித் திரு. மாத்தயா தெரிவித்தார். (உ-எ)

### கூட்டுறவுக் கிளைகள்

வட்டுக்கோட்டை, ஏப்ரல் 21 சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பல கிளைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து புதன்கிழமைகளில் பூட்டி வருகின்றன.

(க - 161)

### லக்ஷ்மண ஐயர் காலமானார்

கொழும்பு, ஏப்ரல் 21 தமிழ் அறிஞரும் முன்னாள் கல்வி பணிப்பாளருமான வித்வான் கி. லக்ஷ்மண ஐயர் அவுஸ்ரேலியா, சிட்னியில் கடந்த திங்கட்கிழமை காலமானார். (உ-எ)

### இடமாற்றத்துக்கு புதிய திட்டம் தயாராகுகிறது!

கொழும்பு. ஏப்ரல் 21 அரச ஊழியருக்கு என்று புதிய இடமாற்றத் திட்டம் ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டு மாகாண அமைச்சு தயாரித்து வருகிறது. (உ-எ)

### எச். டபிள்யு. ஜெயவர்தனா காலமானார்

கொழும்பு, ஏப்ரல் 21 ஜனாதிபதி சட்டத்தரணி எச். டபிள்யு. ஜயவர்த்தனா நேற்று காலை பெங்களூரில் மாரடைப்பால் தமது 74 வயதில் காலமானார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்தனாவின் இளைய சகோதரரான இவர் ஜே. ஆர். ஜயவர்தனா சகிதம் பெங்களூர் சென்றிருந்தார்.

(உ-க)

### சம்பந்தர் உருவச்சிலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21 ஸ்ரீ சட்டநாதர் கோயிலுக்கென சிற்பக் கலாநிதி திரு அ. பாஸ்கரனால் ஆக்கம் பெற்ற சம்பந்தர் உருவச் சிலை கந்தர்மடம் அரசடி வீதியில் அகில இலங்கைத் திருமறை மன்றப் பணியகத்தில் வைக்கப்பட்டு திருமறைப் பாராயணம் பெரிய புராண படனம், ஆகிய நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் சித்திரை திருவாதிரையன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ள இச் சிலை ஓரிரு நாட்களில் சட்டநாதர் கோயிலுக்கு கொண்டு செல்லப்படும்.

(-ப-)

### கொள்ளைச் சிப்பாய் கைது

கொழும்பு, ஏப் 21 கொழும்பில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற நகைக் கடைக் கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக முன்னாள் இராணுவ வீரர் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

இராணுவச் சீருடையில் சென்றே இந்த நபர்10 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது; (உ-எ)

## பதவி வெற்றிடம்

1. பதவி:

**கணக்காளர்**

2. கல்வித்தகமைகள்:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 5ஆம் சம்பளத் திட்டத்தில் நிதி முகாமையாளர் / கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 6ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஆ) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு முகாமை கணக்காளர் நிறுவன தேர்ச்சிச் சித்தி கட்டம் 1 அல்லது இல. தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவன நிதி முகாமையாளர் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

3. வயது: 25 தொடக்கம் 50 வரை
4. சம்பளம்: ரூபா 1755 — 2805 ......................(விசேடபடிகள் 75 x 6 - 100 x 6 தவிர்ந்த)
5. அனுபவம்:

அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் மூன்று வருடத்துக்கு மேல் விரும்பத்தக்கது.

இப்பதவிக்கான விண்ணப்பங்கள் 1990 ஆம்ஆண்டு வைகாசி மாதம் (May) 15 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிக்கான பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

முக்கிய குறிப்பு:

18-04-1990 பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுக்காக இங்கு குறிப்பிடப்பட்ட கல்வித்தகைமைகள் (அ), (ஆ) சேர்த்துக் கொள்ளவும்.

முகவரி:

**வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,**
தபாற் பெட்டி இலக்கம் - 41,
யாழ்ப்பாணம்.

[சி-4462]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷப்றா ஆதரவுடன் நல்லை ஆதீனம் நடத்தும்

## தேவார மனனப் போட்டி: இரண்டாம் நாள் இன்று

யாழ்ப்பாணம் ஏப் 90 ஷப்றா நிதி நிறுவனத்தின் ஆதரவுடன், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால் நடாத்தப்படும் தேவார மனப்போட்டி இன்று இரண்டாவது தடவை நடைபெறுகிறது.

போட்டியின் முதல்நாளான கடந்த புதன்கிழமை தெல்லிப்பளை, சாவகச்சேரி, பண்ணாகம், மயிலங்கூடல் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினார்கள். இன்று 21 ஆம் திகதி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடக்கும் போட்டி யாழ். மாநகரசபை எல்லை, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடக்கும் மூன்றாம் நாள் போட்டியில் வட்டுக்கோட்டை, நாராந்தனை, கைதடி, கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றுகிறார்கள்.

கிளிநொச்சி, முரசுமோட்டையைச் சேர்ந்தவர்களுக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவில் மண்டபத்தில் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை நடந்த முதல் நாள் மனனப் போட்டிக்குச் சமூகமளிக்காதவர்கள் இன்றும் நாளையும் நடக்கும் போட்டிகளில் பங்குபற்றலாம்.

போட்டியில் வெற்றிபெறுவோருக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (அ-7)

## உபவேந்தர் யாழ். வருவார்

கொழும்புத்துறை ஏப் 21 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் டி. எஸ் விஜயசேகர எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம் எதிர் நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர் இங்கு ஆலோசனைகள் நடத்துவார் என யாழ். பிராந்திய நிலைய உதவி நிர்வாகி திரு. க.கருணாகரன்தெரிவித்தார். (இ-30)

## 23ஆம் திகதி சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 21 யாழ். கல்வித்திணைக்கள முறைசாரக் கல்விப் பிரிவுக்கு அனுமதி பெறாதவர்களை, எதிர் வரும் 23 ஆம் திகதி கல்வித் திணைக்களத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுக்குச் சுமார் 10 ஆயிரம் பேர் வரையில் விண்ணப்பித்த போதிலும் சொற்ப எண்ணிக்கையினருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-3)

## அமெ. சென்றார்

சாவகச்சேரி,ஏப் 21 அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசாஇத்துறையில் ஓராண்டு காலப் புலமைப் பரிசில் பெற்று அண்மையில் அமெரிக்கா பயணமானார். (ப இ31)

## திறமையற்ற ஆசிரியர்களது பதவி தரம் குறைக்கப்படும்

கொழும்பு, ஏப்ரல் 21 கடமையுணர்ச்சியுடன் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கவும்திறமையற்ற விதத்தில் பணிபுரியும் ஆசிரியர்களை தரக் குறைப்புச் செய்யவும் கல்வி உயர்கல்வி அமைச்சு உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆசிரிய தொழிற்சங்கங்களின் அபிப்பிராயங்களை கல்வி அமைச்சு சேகரிக்க உள்ளது.

இசுருபாயாவில்நேற்று முன்தினம் நடந்த தொழிற் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

''பல ஆசிரியர்கள் கடமை நேரத்தில் கடமையில் இல்லாதிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு வகுப்புகளுக்கு ''டிமிகி''கொடுத்துவிட்டுச் செல்லும் ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்''— என்று அமைச்சர் சொன்னார். (உ-எ)

● யாழ் ஆஸ்பத்திரியில்

## சிற்றூழியர்கள் தெரிவுக்கு திங்கள் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம் ஏப்ரல் 21 யழ்—போதனா வைத்தியசாலைக்கு சிற்றூழியர்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

கொழும்பில் இருந்து வரும் சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் தலைமையிலான குழுவே நேர்முகப் பரீட்சைகளை நடாத்தவிருக்கிறது.

கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் விண்ணப்பித்தவர்களே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)


உ

மல்லாகம்

அருள்மிகு காளிகாதேவி ஆலய

வருடாந்த

சங்காபிஷேகத் திருவிழா

★ இன்று ★

அன்பின் கடலே அம்பிகையே - எமை
ஆண்டருள் புரிவாய் நம்பிக்கையே
இன்ப வாழ்வை ஈந்திடவே - உன் போல்
ஈடு இணை இங்கு யாருமில்லை
உண்மைப் பக்தர் வேண்டுதலை - தாயே
ஊக்க முடன் நிறைவேற்றி வைப்பாய்
என்றும் நீதிதனைக் காத்து - இங்கு
ஏங்கும் பக்தர் குறை தீர்ப்பாய்
ஐக்கியம் கொண்ட உயிர்களுக்கு - நீ
ஒரு பக்கத் துணையாய் உடனிருப்பாய்
ஓங்காரத்துள் நீயிருந்தாய் - உனை
ஔவைப் பாட்டி தொழுது நின்றாள்
அஃதே நின்தன் கருணையம்மா - நாம்
சரணம் அடைந்தோம் உன் அடியிலம்மா

மேற்படி ஆலய சங்காபிஷேகம்
சித்திரை மாதம் 8ஆம் திகதி (21-04-90)
சனிக்கிழமை நடைபெற உள்ளது

பிரசுரிப்பவர்: மு. அற்புததேவன்
எழுதியவர்: க. மனோகரன்
[சி-4461]


# ஐ.நா.அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், ஏப் 21 ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

இந்த குழுவுக்கு திரு. றொபேர்ட் இங்கிலண்ட் என்பவர் தலைமை வகிக்கிறார்.

குழுவினர் பனை அபிவிருத்திச் சபை, கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு உட்ப பல இடங்களுக்கு விஜயம் செய்வார்கள்.

சாவகச்சேரியில் 22 ஆம் திகதி இடம் பெறும் கலாச்சார நிகழ்ச்சியிலும் இவர்கள் பங்குபற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வாக்காளர் இடாப்பு; ஜூலையில் பதிவு வேலைகள்

கொழும்புத்துறை, ஏப்ரல் 21 யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்காளர் இடாப்புப் பதிவு செய்து புதுக்கி அமைக்கும் வேலைகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகுமென யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வாக்காளர் இடாப்புப் பதிவு, கடைசியாக 1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 1987 இன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் பழைய வாக்காளர் இடாப்புகளே பயன்படுத்தப்பட்டு வந்தன.

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதினெட்டு வயது வந்தோரும், இடம்பெயர்ந்துள்ளவர்களும் இடாப்புகளில் பதியப்படாமல் உள்ளது என தேர்தல் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-30)

கடந்த மூன்று மாதங்களில் மட்டும்

## தொலை தொடர்புச் சேவை மூலம் 76 கோடி ரூபா வருமானம்!

கொழும்பு. ஏப்ரல் 21 கடந்த மூன்று மாதங்களில் தொலைத் தொடர்புத் திணைக்களம் 75 கோடி 90 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இந்தப் பணத்தில் 52 கோடி 20 லட்சம் ரூபா வெளிநாட்டுச் செலாவணியாக நாட்டுக்குக் கிடைத்தது.

இத்தகவல்களை தபால், தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் அலிக் அலுவிஹார வெளியிட்டார்.

கடந்த ஆண்டு கடைசி மூன்று மாதங்களில் நிலுவையாக இருந்த தொலைபேசிக் கட்டணத்தில் 162 கோடி 30 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## அமைச்சுச் செயலாளராக முதன் முதலாக பெண் நியமனம்

கொழும்பு, ஏப் 21 அமைச்சு ஒன்றின் செயலாளராக முதன்முதலாக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

39 வயதான திருமதி தரணி சிராந்த விஜேசிங்கா விஜயதிலக என்பவரே அவர்.

சட்டத்தரணியான இவர் நீதி அமைச்சின் பதில் செயலாளர் பதவியுடன் சட்டத்துறை ற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் நீதி அமைச்சில் 16 வருட காலமாக சேவையில் இருந்திருக்கிறார். (ஒ-எ)

## இருந்தும் இல்லாத நிலையில் ஆஸ்பத்திரி எக்ஸ்றே கருவிகள்

யாழ்ப்பாணம் ஏப் 21 யாழ். போதனா வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள ''எக்ஸ்றே'' கருவிகளைத் திருத்துவதற்கு கொழும்பில் இருந்தே தொழில் நுட்பவியலாளர்கள் வர வேண்டுமாம்.

வைத்தியசாலையில் உள்ள ஐந்து ''எக்ஸ்றே'' கருவிகளில் நான்கு கடந்த பல மாதங்களாக பழுதடைந்த நிலையில் இருப்பதால் நோயாளர் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

அதாவது நோயாளர் பெரும்பாலும் வெளியே பணம் கொடுத்தே ''எக்ஸ்றே'' எடுக்க வேண்டியுள்ளது.

இந்தக் கருவிகளைத் திருத்துவதற்கு இங்கு முயற்சிக்கப்பட்ட போதிலும் பலன் கிடைக்கவில்லை என்று அறிய வந்தது.

கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர் வரும் வரை நான்கு கருவிகளும் பயனற்றுக் கிடக்கப் போகின்றன. இருந்தும் இல்லாத நிலை. (அ-3)

## அரசியல்வாதிகளிடம் இன்னும் 3 ஆயிரம் துப்பாக்கிகள்!

கொழும்பு, ஏப்ரல் 21 அரசியல்வாதிகளால் இன்னும் 3 ஆயிரம் துப்பாக்கிகள் ஒப்படைக்கப்படவேண்டியுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின முன்சண்ட தகவலை வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இதுவரை ஆயிரத்து 776 துப்பாக்கிகளே பாதுகாப்புப் பணியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சொன்னார்.

இதுவரை ஆயுதங்களை ஒப்படைத்தவர்கள் கண்காணிப்புக் குழுவினரா அல்லது கிளர்ச்சிக்காரர்களா? என்று கேட்டதற்கு—

அமைச்சர் ''அவர்கள் யார் என்று லேபல் ஒட்டியிருக்கவில்லை'' என்று பதிலளித்தார். [ஒ-எ]

## நாளை கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ஏப் 21 ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை வீடு திரும்புவதற்கும் புனரமைப்பதற்குமான நன்கொடைப் பணம் மக்கள் வங்கிப் பிரதான கிளையில் வைத்து வழங்கப்படவிருக்கிறது.

சரவெட்டி, சங்கானை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, (துர்க்காபுரம்), யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கே நாளை மேற்படி நன்கொடைப் பணம் வழங்கப்படவிருக்கிறது. (ற)

## 48 கூட்டுறவுச் சங்கங்கள் வங்குரோத்து நிலையில்!

கொழும்பு, ஏப்ரல் 21 நாட்டில் 48 கூட்டுறவுச் சங்கங்கள் வங்குரோத்து நிலையை அடைந்து இருப்பதாககூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது. (உ-எ)

## மாணவனின் கண்ணோடு கல்வியைப் பார்க்கும் லலித்!

கொழும்பு, ஏப்ரல் 21 கல்வித்துறையை மாணவனின் கண்ணோட்டத்திலேயே நான் முதலில் நோக்குகின்றேன்,

அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொத்மலையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பெற்றஒருமாணவனை இன்னொருதேசியபாடசாலையில் படிக்க அவன் படித்த தேசிய பாடசாலை நிர்வாகம் அனுமதிக்கவில்லை.

திறமையான மாணவனை இழக்க பாடசாலை அதிபர் விரும்பாததை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினையை நான் மாணவனின் நிலையில் இருந்தே பார்க்கிறேன்.

புலமைப் பரிசில் பெற்ற அந்த மாணவனை அவன் விரும்பிய பாடசாலையில் சேருவதற்கு அவன் படித்துக் கொண்டிருக்கும் பாடசாலை நிர்வாகம் ஏன் தடுக்கவேண்டும்?

கல்வித்துறை வளர்ச்சியை முதலில் மாணவன் நிலையில் இருந்தே நான் நோக்குகின்றேன். அதன்பிறகு ஆசிரியர் நிலையில் இருந்து பார்க்கின்றேன்.

மூன்றாவதாகப் பெற்றோர் தரப்பில் இருந்தும் நான்காவதாகவே கல்வித் திணைக்களத்திலிருந்தும் நான் அவதானித்து நடவடிக்கை எடுக்கிறேன் - என்று அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார். [ஒ-எ]

## இணக்கசபை

முல்லைத்திவு, ஏப்ரல் 21 விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் முல்லைத்தீவு தெற்குகரைச்சிக்குடியிருப்பு—உரைப்பிலவு இணக்கச் சபைக்கு பின்வருவோரை நியமித்தனர்.

தலைவர் திரு சி. சபாபதி செயலாளர் திரு. ஆ. கிருஷ்ணசாமி பொருளாளர் திரு: க. பகவதிராஜா

எட்டு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். (இ-92)

## மயானம் புனரமைப்பு

தாவடி மயானத்திலுள்ள மடம் மயான அபிவிருத்தி சபையின் தலைவர்திரு.எஸ். செல்லத்துரையின் முயற்சியால் புனர் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மயானத்தின் புனரமைப்புக்காக புனர்வாழ்வு புனரமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு தாவடி காந்தி சனசமூக நிலையத்தின் ஊடாக 43 ஆயிரம் ரூபாவைக் கொடுத்துதவியது. (க)

## யாழ்-பல்கலைக் -

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள்'' பற்றி எடுத்துக் கூறினார்.

கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, கலைப்பீடாதிபதி ந. பாலகிருஷ்ணன் ஆகியோருடன் பொருளியல்துறை' புவியியல்துறை, வரலாற்றுத் துறையைச் சேர்ந்த பல பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர்.

கலந்துரையாடலுக்கான ஒழுங்குகளை மறுமலர்ச்சிக் கழகம் செய்திருந்தது. (ஒ)

## கோட்டையில்- - - -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆர்வத்தையும் அவதானிக்க முடிந்தது. யாழ் மாவட்டத்தில் வேலையில்லாதோர் எண்ணிக்கை எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் நேற்றுக் கோட்டையில் கூடிய இளைஞர் - யுவதிகளின் எண்ணிக்கை பிரதிபலித்து.

அடகு நகைகளை மீளப் பெறச் சென்றவர்களும் நேற்று கோட்டைப் பகுதிக்குப் பெலிவூட்டினார்கள் அவர்களும் நூற்றுக்கணக்கில் வந்திருந்தனர். (அ-3)

## பாவற்குளம் பாடசாலை இராணுவ முகாம் நீக்கம்

வவுனியா,ஏப் 21 பாவற்குளம் பாடசாலையில் கடந்த சிலவருடங்களாக இருந்து வந்த இராணுவ முகாம் அண்மையில் அகற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்பாடசாலையை இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இராணுவ முகாம் நிலை கொண்டிருந்த காரணத்தால் இப்பகுதியில் மீளக்குடியமர்வு புனர் வாழ்வு வேலைகள்,மற்றும் இப்பகுதிக்கான மக்களின் கல்வி என்பன பாதிக்கப்பட்டிருந்தன இந்த முகாமை அகற்றுமாறு இப்பகுதி பொதுமக்களும் விடுதலைப் புலிகளும் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (உ-164)

## பொறுமைக்கும் எல்லை உண்டு; புத்தாண்டு விழாவில் கலைஞர்!

இருப்பதை வைத்து இனியவற்றைச் செய்கிறோம். இவ்வளவிற்குப் பிறகும் வேலைநிறுத்தம் கிளர்ச்சி என்றெல்லாம் ஈடுபடுவது என் பொறுமையை சோதிப்பதாகும். அதற்கும் ஒரு எல்லை உண்டு.

முதலமைச்சர் கருணாநிதி கடந்த வெள்ளிக்கிழமை புத்தாண்டுக்கு இலவச அரிசி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அரசு ஊழியர்கள் இதயசுத்தியுடன் பாடுபடவேண்டும்.

இல்லாவிடில் என்னதான் பெரிய திட்டங்களைத் தீட்டினாலும் அது போய்ச் சேர வேண்டியவர்களுக்கு போய்ச் சேராமல் இடையிலோ எங்கெங்கோ தங்கிவிடும்.

ஒரு பழைய கதை உண்டு. ஓர் அரசன் தனது அமைச்சர்களை அழைத்து, ''எவ்வளவு திட்டங்களைத் தீட்டியும் அவை மக்களுக்குப் போய்ச் சேரவில்லை] என்று குறைப்படுகிறார்களே? - என்று கவலை தெரிவித்தார்.

இதற்கு ஓர் அமைச்சர் செய்கையால் பதில் சொன்னார்.

ஓர் ஐஸ் கட்டியைக்கொண்டு போய் அரசன் கையில் அமைச்சர் கொடுத்தார்.

ஐஸ் கட்டியை என்ன செய்வது என்று அரசன் கேட்டான். அதற்கு அமைச்சர், ''ஒவ்வொரு அமைச்சர் கையிலும் வரிசையாகக் கொடுங்கள் என்று அரசனிடம் சொன்னான்.

அதன்படி ஐஸ் கட்டி அரசன் கையில் இருந்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கைகளுக்கு மாறி கடைநிலை ஊழியர் கைக்குப் போயிற்று.

கடைசியாகத் தான் அந்த பயனைப் பெறுகின்ற மனிதன் நின்று கொண்டிருந்தான்.

அரசன் கையிலே கொடுக்கப்பட்ட ஐஸ் கட்டி அதன் பயனைப் பெறுகின்ற மனிதனிடம் செல்லும் போது ஒரே ஒரு சொட்டுத் தண்ணீர் தான் மிச்சம் இருந்தது.

இப்படிப்பட்ட ஐஸ் கட்டி திட்டங்களாக நமது திட்டங்கள் ஆகி விடக்கூடாது.


இப்படி முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார். (எ)


எமது இன்றைய வெளியீடு

கார்த்திக் — சித்தாரா
★ உன்னைச் சொல்லி குற்றமில்லை ★
(உதயம் புகழ்) நாகர்ஜுன் — அமலா
★ பாசத்தை திருடாதே ★

'சுப்ப ஸோ' வீடியோ, ஒடியோ சென்ரர், யாழ்வீதி, யாழ்ப்பாணம். [12942]


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
விசுவநாதர் பொன்னம்பலம்
(ஒட்டோஸ் பொன்னம்பலம்)

மலர்வு: 21 - 01 - 1921
உதிர்வு: 01 - 05 - 1989

திதி: 21 — 04 — 1990

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஐயனார் கோவிலடி, மல்லாகம்.

[3333]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலாசாரத்தைப் பாதுகாப்பது எல்லோரதும் கடமையாகும்

## புதுவருட விழாவில் ஆதீன முதல்வர்

குருநகர் ஏப் 21

"தமிழ்க் கலாசாரத்தைப் பற்றிச்சிந்திப்பதற்காக, அனுபவிப்பதற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோம். தமிழ் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமை.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவால் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தமிழ் - சிங்களப் புத்தாண்டு விழாவில் ஆசியுரை வழங்குகையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப்பரமாச்சாரியஸ்வாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து ஆசி வழங்குகையில்: "பழையன கழிதலும் புதியன புகுதலுமாக ஓடிக்கொண்டிருக்கும் கால கட்டத்தில் வண்டிச்சக்கரம் போன்று சுழலும் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறி அமைகின்றன. தமிழ்விழா எப்படி அமையவேண்டும் என்பதற்கு இணங்க இவ் விழா அமைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வைபவம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. யாழ் - அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தம்பதிகள் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், யாழ் - கோட்டக்கல்வி அதிகாரி திரு. ரி. தியாகராசா, யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி திவ்விய சிரோன்மணிநாகராஜா, யாழ் - மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். வண. ஏ. சகாயநாதன் அடிகள், அல்ஹாஜ் மௌலவி எம். எம்நாகீப் ஆகியோர் ஆசி உரை வழங்கினர். திருமதி அன்ரன் அல்பிரட் பரிசில் வழங்கினார். செல்வி யசோதா நடராசா நன்றி தெரிவித்தார். (இ-51)


## பதவி வெற்றிடம்

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
மருதங்கேணி

### கணக்காளர் பதவி 104/10

1. கல்வித் தகைமைகள்:

அ) கூ. ச. ஊ. 9 ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்கு பதிவியலாளர், கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 10 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்கு பதவியலாளர் / கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் ஆறுவருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு, முகாமைக் கணக்காளர், நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம் ஒன்று அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகமை, தகமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பதவியொன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. சம்பளத் திட்டம்: 1005 — 40 x 5 — 50x10—1705 - இதரபடிகளும்

3. வயதெல்லை, 23 — 45

4. விண்ணப்ப முடிவு திகதி: 30. 04. 1990

விண்ணப்பங்கள் தலைவர் வடமராட்சி கிழக்கு, ப. நோ. கூ. சங்கம், மருதங்கேணி, தாளையடி என்ற விலாசத்திற்கு கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு, பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
வடமராட்சி, கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
மருதங்கேணி.

(சி-4305)


## மக்கள் முகம்

### புதியநிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஏப் 21

வரணி மாசேரி சனசமூக நிலையத்தின் 1990 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் : வே. முருகேசு காரியதரிசி. அருணாசலம்: உப. காரியதரிசி: சி. கணேச மூர்த்தி உபதலைவர்கள்(1). தேவராஜா (2) பா. இராமச்சந்திரன் தனாதிகாரி வீ. கதிர்காமநாதன் கணக்காய்வாளர் சி. செல்வராஜா போசகர் க. சுப்பிரமணியம்

நிருவாக சபை உறுப்பினர்கள்வீ. திருச்செல்வம் வீ, சிவநேசன் இ, இரவி பாலச்சந்திரன் எஸ், செல்வரத்தினம் வீ. ஐயாத்துரை. சா. கமலநாதன் சி. குமாரசாமி. (க)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை] கடற்புலி, தரைப்புலி

### கப்டன் குட்டி [தரன்] நாகராசா ஞானகுலசிங்கம்

தாய் முகம் பொலிந்தது 07-09-1966

தமிழ்முகம் மலர்ந்தது 02-05-1989

திதி: 22-04-1990 (ஞாயிறு)

தம்பியின் பாதையிலே தமிழீழம் அமைத்திடவே பொங்கி
எழுந்த பேரணியில் புலியெனவே வந்து நின்றாய்......
வெஞ்சமர்கள் பல புரிந்து வஞ்சகரை ஒழிப்பதையே
நெஞ்சினிலே பெருவடிவில் கொள்கையதாய் வளர்த்து நின்றாய்
அமைதியென்ற பேரினிலே அமளி பல செய்து வந்த அந்நியரை
அழித்திடவே எரிமலையாய்க் குமுறி நின்றாய்.........
தமிழீழ மண் காக்கும் தாளாத உணர்வுடனே தாயகத்தின்
விடியலுக்காய் வீரசொர்க்கம் விரைந்து நின்றாய்............

எண்ணத்தில் உனை வைத்தோம் - எம்
நெஞ்சினிலே உனை நிறைத்தோம்
கண்ணீரால் பூ செய்தோம் - உன்
காலடியிற் சூடுகின்றோம்.

குடும்பத்தினர்.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

[3321]


மட்டக்களப்பு - யாழ்ப்பாணம்:

# கல்வித் திணைக்களங்கள் இணைந்து கலாசார நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஏப் 21

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களங்கள் இணைந்து கலாசார நிகழ்ச்சிகளை பரிவர்த்தனை செய்யும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கின்றன.

மட்டக்களப்பு பிரதேச பாரம்பரிய நாட்டுக் கூத்துக்களை யாழ்ப்பாணத்தில் மேடையேற்றவும், யாழ்ப்பாண இசைநடன நிகழ்ச்சிகளை மட்டக்களப்பில் மேடையேற்றவும் இருமாவட்ட திணைக்களங்களும் ஒழுங்கு செய்துள்ளன

இதற்கு மாகாண சபை கல்வியமைச்சு செயலாளர் திரு. ஈ ஜே சற்குணராசா ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தார். (இ 3)

திறந்த பல்கலைக்கழகம்:

# தெரிவானோர் பதிவு மே 11

யாழ்ப்பாணம் ஏப் 21

இலங்கை திறந்த பல்கலை கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா பயிற்சி கற்கை நெறிக்கு தெரிவானவர்களுக்கான பதிவு எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி நடைபெறும்.

இந்தப் பதிவு யாழ் பிராந்திய நிலையத்திலேயே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1989 ம் ஆண்டு நடுப்பகுதியில் பிரஸ்தாப கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன அதற்கு 198 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 79 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான பதிவுகளே அடுத்த மாதம் 11 ஆம் திகதி மேற் கொள்ளப்படவுள்ளன. (இ-9)

# கல்லூரிப் படிப்பு முடிக்கும் மாணவர் பற்றி கருத்தரங்கு

## 28 இல் யாழ். பல்கலைக்கழகத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 21

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு இருக்கும் மாணவர்கள் எவ்வகையான கல்வியைப் பெறமுடியும் என்று கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு விளக்கும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற இருக்கிறது. 75 கல்லூரிகள் இதில் கலந்துகொள்கின்றன.

யாழ். மாவட்டத்தில் கல்லூரிப் படிப்பை முடித்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் மேற்கொண்டு கல்வி பயிலக்கூடிய வசதிகள் இருந்தபோதும் அவர்கள் போதுமான அளவு அவற்றைப் பயன்படுத்துவதில்லை.

இதனால் அவர்களுக்கு அதிபர், ஆசிரியர் ஆகியோர் மூலம் விளக்கும் வகையில் இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டி. எஸ். விஜயசேகரா, யாழ்பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் வி. ஆறுமுகம், கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் திரு. எஸ். ராஜேந்திரா, யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப இன்ஸ்ரிட்ரியூட் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். ஏ. பி. துரைரத்தினம் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் திரு கே. கருணாகரன், கல்வித் திணைக்கள முறைசாரப் பிரிவு கல்வியதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

### கிறிஸ்தவ சங்க தலைவர்

மானிப்பாய்.ஏப். 21

நவாலி கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளராக திரு. என். அன்புராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் 99 ஆவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது இவரது தெரிவு இடம்பெற்றது. (ப-90)

### சுதுமலையில்

மானிப்பாய்.ஏப் 21

அன்னை பூபதி நினைவாக சுதுமலையில் மக்களால் இம்மாதம் 18 ஆம் தேதிசுதுமலை அம்மன் கோவில் வீதியில் உண்ணா நோன்பு நோற்கப்பட்டது. (ப-90)

யாழ். லயன்ஸ் நடத்திய

# போதைவஸ்துஓவிய போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

யாழ்ப்பாணம் ஏப் 21

அண்மையில் யாழ் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்ட போதைவஸ்து ஓவியப்போட்டியில், போட்டிக்கான தலைப்பும், வெற்றி பெற்ற மாணவர்களும் அவர்களது பாடசாலைகளும் வருமாறு:-

1 "மனிதா மரணத்தை நீயாக நாடாதே" - செங்குட்டுவன். கொக்குவில் இந்துக் கல்லூரி.

2 "பெண்ணே நீயுமா! நீயுமா!" - தில்லைக்கரசி முத்துத்தம்பி மானிப்பாய் மகளிர் கல்லூரி.

3 "உயிர்த்துடிப்புக்கும் போதைவஸ்தா?" - எஸ். சசிதரன். கொக்குவில் இந்துக்கல்லூரி.

பரிசில்களை வழங்குவதற்கான விபரங்கள் கல்லூரி அதிபர்கள் மூலம் மாணவர்களுக்கு அறிவிக்கப்படும். (இ)

### சிற்றூர் கிளை

அம்பாறை ஏப 21

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் கிளை ஒன்று நிந்தவூரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர்ப்பகுதியைச் சேர்ந்த பிரபல முஸ்லிம் வர்த்தகப் பிரமுகரான ஜனாப். எஸ். எச். அகமது இக்கிளையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் திரு. காஷ்ட்றோ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அதிதியாகக் கலந்து கொண்டார். (க-14)

# கொக்குவில் இந்து: மதிய போசனம்

யாழ்ப்பாணம் ஏப் 21

"நீண்ட இடைவெளிக்குப் பின் இக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றிய விருந்துபசாரம் சிறப்பாக நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்வு கொள்கிறேன்.

கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியம் அண்மையில் நடத்திய மதிய போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. [illegible] மேற்கண்டவாறு கூறினார். [illegible] விருந்தினராகப் பங்கேற்ற தபாலதிபர் திரு. அ. குணபாலசிங்கம் பேசுகையில். கல்லூரி பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் ஒரு எடுத்துக்காட்டாக இக் கல்லூரி மாணவிகளது பாண்ட் வாத்தியக்குழுவின் சிறப்பான அணிவகுப்பே சான்றாகுமெனவும் குறிப்பிட்டார்.

இவரது பேச்சைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் மற்றும் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோரது உரைகளும் இடம்பெற்றன. (இ)


# கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

**A/L 90** கலை, வர்த்தகம்

**DAY CLASSES**

3 மாத கால முழுப்பாடத்திட்ட வகுப்பு

ஆரம்பம்: 25-04-90
புதன் 8.00 a.m,

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ வெளி மாவட்ட மாணவர்கள் நன்மை கருதி இவ் வகுப்பு ஆரம்பிக்கப்படுவதனால் வெளி மாவட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ முழுப்பாடத்திட்டமும் (Theory) ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
★ வினா-விடை வகுப்பு இலவசமாக நடைபெறும்.
★ ஒவ்வொரு பாடமும் வாராந்தம் 8 மணித்தியால வகுப்புகளாக நடைபெறும்

[சி 4307]

## அறிவித்தல்

இரசாயனவியல் - திரு. மகாதேவா அவர்களது வகுப்புகள் மீண்டும் ஞாயிறு 22 - 04 - 90 முதல் வழமை போல் நடைபெறும் என அறியத்தருகிறோம்.

★ Bond Institutes - யாழ்ப்பாணம்
★ Nagalingam Institute - திருநெல்வேலி
★ வாணி கல்வி நிறுவனம் - சுன்னாகம்

[சி-4312]

## வாக்காளர் இடாப்பு மூடும் காலம் நீடித்தல்

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தலுக்காக, வாக்காளர் இடாப்பு மூடும் காலம் 30- 06- 1990 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது வரை அங்கத்தவராக சேராமல் இருப்பவர்களை அங்கத்தவராக சேர்ந்து கிளைக் குழு தேர்தலில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்,
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்.
மருதங்கேணி.

(சி/4306)

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இராஜதுரை உதயணன்

மண்ணில்:- 17 - 06 - 1966

விண்ணில்:- 21 - 04 - 1985

தமிழ் மண்ணுக்காய் மரணித்த - மாவீரனே
தமிழ் மக்கள் சிந்திய செந்நீர் - கண்ணீரால்
நனைந்து கொண்ட தாயகத்தை மீட்டெடுக்க
நமது சுதந்திரக் கொடியைப் பறக்கவிட

அடிமைத் தனத்தின் விலங்கினை உடைத்தெறிய
அசைக்க முடியாத உறுதியுடைய செல்வமே - உதயணன்
நீ மறைந்து முடிந்த ஐந்தாண்டை நினைக்கும் போது
எம் உள்ளம் எல்லாம் குமுறுதைய்யா, என் செய்வோம்!

எம் கண்ணீரை மாலையாக்கி, உன்பாத மலருக்கு
எம் காணிக்கையாக்குகிறோம் - உதயணா உனக்கு
உன் ஆத்ம சாந்திக்காய் நாம் அனைவரும் - என்றும்
எல்லாம் வல்ல இறைவனை இங்கு இறைஞ்சுகின்றோம்

அப்பா, அம்மா, தம்பியர்,
தங்கையர், நண்பர்கள்.

திரு. பொ. இராஜதுரை,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை

( C/ 4297 )


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் அபிமானம் பெற்ற
நுரை வளத்துடன் கூடிய
மில்க்வைற் சிறிய நீலசோப் கட்டி
புதுப் பொலிவுடன் வருகிறது.
கட்டி ஒன்று - ரூ. 1/50 சதம்
50 கட்டிகள் கொண்ட கூடுக்கற்
ரூ. 67/- மட்டுமே
வியாபாரிகளுக்கு அரிய சந்தர்ப்பம்
50 கட்டி சுற்றிவரும் தாள்கள்
50 சேகரித்து ஒரு துவாய் அல்லது
ஒரு காந்தி சிலையை
உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்
மில்க்வைற்-யாழ்ப்பாணம்



# சஞ்சீவி

21—04—1990 சனிக்கிழமை



ஈதுல் - பிதர்
(றம்ழான் பண்டிகை)
வாழ்த்துக்களை எமது எண்ணற்ற
இஸ்லாமிய அபிமானிகளுக்குத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
''ஏந்தல் நபியின் ஏவல்கள்''
அரிய நூலும்,
புனித படத்துடன் கூடிய கலண்டரும்
25 மில்க்வைற் மேலுறைகள் அனுப்பி
எமது அன்பளிப்பாகப் பெற்றுக்
கொள்ளவும்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்


## மேதினத்தன்று ஓவியக்காட்சி விடுதலைப் புலிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21 எதிர்வரும் மேதினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்த உள்ளனர்.

காட்சியில் வைக்கப்படும் ஓவியங்கள் தொழிலாளர் தினத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கவேண்டும் என்றும் — கோண்டாவிலிலுள்ள முன்னணியின் செயலகத்தில் ஓவியங்களை எதிர்வரும் 30ஆம் திகதி 12 மணிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும் என்றும்— முன்னணியின் அமைப்பாளர் திரு. ராஜன் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் மூன்றுக்கு ரொக்கப் பணம் பரிசாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ҿ

## லோங் அடிகளார் நினைவாக மே 22 இல் முத்திரை வெளியீடு

### யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21 யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபரான மறைந்த கல்விமான் வண. பிதா. ரி. எம். எப். லோங் அடிகளின் சேவையைப் பாராட்டி நினைவுத் தபால் முத்திரை ஒன்றை அரசு வெளியிடவுள்ளது.

இவ்வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் மே மாதம் 22 ஆம் திகதி நடைபெறும்.

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் அலிக் அலுவிஹார முத்திரையை வெளியிட்டுவைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### சமயாசமய ஊழியருக்கு 200 சம்பள உயர்வு

திருகோணமலை, ஏப்ரல் 21 திருகோணமலைத் துறைமுக அதிகாரசபையில் பணியாற்றும் சமயாசமய ஊழியர்களுக்கு 200 ரூபா சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி துறைமுக அதிகாரசபைத் தலைவரை துறைமுகப் போக்குவரத்து அமைச்சர் ரூபா கருணாதிலக நேற்றுப் பணித்தார்.

திருகோணமலை துறைமுகத்தை அமைச்சர் கருணாதிலக துணை அமைச்சர் ஜனாப் எம். இ. எச். மஹ்ரூப்புடன் நேற்றுப் பார்வையிட்டார்.

திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ.எ)

### ● வவுனியா ஆஸ்பத்திரியில்

## சமையல் வேலையில் சிற்றூழியர் ஏனைய வேலைகள் பாதிப்பு!

வவுனியா ஏப் 21 வவுனியா ஆதார வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளுக்கு அங்குள்ள சிற்றூழியர்களே உணவு சமைக்கின்றார்கள். இதனால் வெளி நோயாளர் பகுதி உட்பட வேறு பிரிவுகளில் சிற்றூழியர்கள் பற்றாக்குறை காரணமாக சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு சமையல் வேலைகளுக்கென மூன்று சமையற்காரர் இருக்க வேண்டும். ஆனால் தற்போது ஒருவர் கூட இல்லை. இதனால் சிற்றூழியர்களே சமையல் வேலையையும் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனிடையில் 9 வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய இந்த ஆதார வைத்தியசாலையில் மூன்று வைத்தியர்கள் மட்டுமே பணிபுரிகின்றார்கள்.

ஆய்வு கூடப் பகுதியிலும் ஆட் பற்றாக்குறை நிலவுகிறது. (உ-164)


பார்வையற்றோர் பார்வைகுறைந்தோர்

கல்வி வசதி

* மேற்படி கல்வி வசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது.
* விடுதி வசதி, கல்வி, உணவு யாவும் இலவசம்.
* சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு விசேட உதவியாளர் உண்டு.
* பல்கலைக்கழகப் படிப்பு வரை கல்வி வசதி செய்து கொடுக்கப்படும்.
* ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிற்சி கொடுக்கும் திட்டம் உண்டு.


நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்
நவீல்ட் பாடசாலை,
விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்,
கைதடி.

[சி-4303]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் நேற்றுக் காலை நடைபெற்ற சுயதொழில் வாய்ப்புக்கான கடன் திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் கிளை முகாமையாளர் திருமதி க. துரைராஜா, திருமதி ஜே. கே. தோமசுக்கு முதலாவது கடனாக 5, 500 ரூபா பெறுமதியான மின்சார '' அவன் '' வழங்கும் போது எடுக்கப்பட்ட படம். கிளை அதிகாரிகள் ஏனையோரும் காணப்படுகிறார்கள். (அ-3)

## சுயதொழில் வாய்ப்புக் கடன் திட்டம் நேற்று அங்குரார்ப்பண வைபவம்

### யாழ். இலங்கை வங்கியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21 இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் நேற்று சுய தொழில் வேலை வாய்ப்புக் கடன் வழங்கல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிளை முகாமையாளர் திருமதி எஸ். துரைராஜா திருமதி. தோமஸ் என்பவருக்கு மின்சார ''அவன்'' ஒன்றை வழங்கி இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை வங்கியின் ஐம்பதாவது ஆண்டு விழாவையொட்டி இந்தக் கடன் வழங்கும் திட்டம் நாடெங்கும் அமுல் செய்யப்பட்ட போதும், இங்கு நிலவிய சூழ்நிலை காரணமாக வடக்கு கிழக்கில் இத்திட்டம் அப்போது செயற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒருவர் சுய தொழில் வேலை வாய்ப்புப் பெற 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 25 ஆயிரம் ரூபா வரையில் 19 சத வீத வட்டிக்கு கடன் பெற முடியும் என்று நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இந்தத் திட்டம் சுன்னாகம், மானிப்பாய் கிளைகளிலும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது (உ-3)

### விபத்துகள்

யாழ்ப்பாணம், ஏப் 21 கொக்குவிலில்நேற்றுநடந்த மோட்டார் சைக்கிள் – சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமுற்றார்.

சைக்கிளில் வந்த கொக்குவில்கிழக்கைச்சேர்ந்தபாபுஎன்பவரேகாயமுற்றவர் ஆவார்.

மல்லாகத்தில் இடம்பெற்ற மற்றொரு சைக்கிள்-மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி. சியான் (வயது 25) என்பவர் காயமுற்றுயாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-6)

### பருத்தித்துறையில் சுயதொழில் கடன்

யாழ்ப்பாணம் ஏப் 21 கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுய தொழில் உற்பத்திக் கடன் வழங்கும் திட்டம் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கத்தால் திரு. அருணாசலம் தர்மலிங்கம், திரு. சுந்தரமூர்த்தி இராமகிருஷ்ணன் ஆகியோருக்கு கடன்களுக்குரிய காசோலைகள் வழங்கப்பட்டன. (அ-7)

### இன்ரறக்ட் கழக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21 யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் வெள்ளி விழாத் தொடர்பான நிகழ்ச்சி ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு கல்லூரியின் 'பெற்ரோ' [illegible] பத்தில் நடைபெறும். (க)

### 3 ஆயிரத்து 675 குடும்பங்களுக்கு

## வடமராட்சியில் நிவாரணம் இன்று, நாளை கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ஏப் 21 இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையிலும் நெல்லியடிக் கிளையிலும் இன்றும் நாளையும் 3 ஆயிரத்து 675 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணமாக தலா ஆயிரம் ரூபா வழங்கப்பட இருக்கின்றது

இன்று பருத்தித்துறை கிளையில் நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

உடுத்துறை- 740
முள்ளியன்- 545

நாளை பருத்தித்துறையில் நிவாரணம் பெறுவோர்;-

மருதங்கேணி – 666
செம்பியன்பற்று- 452

இன்று நெல்லியடிக்கிளையில் நிவாரணம் பெறுவோர்:

கரணவாய் வடக்கு- 522
கரவெட்டி மத்தி- 196

நாளை நெல்லியடிக்கிளையில் நிவாரணம் பெறுவோர்:

| | |
|---|---|
| கரவெட்டி வடக்கு- | 56 |
| கரணவாய் தெற்கு- | 29 |
| கரணவாய் மேற்கு- | 08 |
| கரணவாய் கிழக்கு- | 25 |
| உடுப்பிட்டி- | 48 |
| உடுப்பிட்டி வடக்கு- | 17 |
| வல்வெட்டி- | 30 |
| கரணவாய் வடக்கு- | 37 |
| கரணவாய் மத்தி- | 23 |
| இமையாணன்- | 40 |
| கரவெட்டி மேற்கு- | 61 |
| கரவெட்டி மத்தி- | 25 |
| கரவெட்டி கிழக்கு- | 23 |
| துன்னாலை தெற்கு- | 29 |
| துன்னாலை கிழக்கு- | 42 |
| துன்னாலை மேற்கு- | 46 |
| அல்வாய் தெற்கு- | 18 |
| அல்வாய் கிழக்கு- | 17 |

(உ-7)

## வரி ஏய்ப்பால் அரசுக்கு 1,500 கோடி ரூபா நஷ்டம்!

கொழும்பு, ஏப். 21 வரி ஏய்ப்பு நடவடிக்கை காரணமாக அரசு தனது வருமானத்தில் ஆண்டு தோறும் ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாவை இழந்து வருகிறது.

இத்தகவலை உள்நாட்டு வருமான ஆணையாளர் திரு. ரி. இரத்னசுந்தரம் செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

பிரதான வரி ஏய்ப்பாளர்களாக இரத்தினக்கல் வர்த்தகர்களும் கைத்தொழில் அதிபர்களும் இருக்கின்றனர்.

கொழும்பில் உள்ள இரண்டு லட்சம் வர்த்தகர்களில் ஆக 50 ஆயிரம் பேரே வரிகளைச் செலுத்தி வருகின்றனர்.

வரி ஏய்ப்பாளர்களைப் பிடித்துத் தண்டிக்க புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது.

1988 இல் ஆயிரத்து 870 கோடி ரூபாவையும், 1989 இல் 2 ஆயிரத்து 460 கோடி ரூபாவையும் வருமான வரித்திணைக்களம் வசூல் செய்தது.

1990 இல் 3,040 கோடி ரூபாவை வருமான வரியாகத் திரட்ட வருமான வரித்திணைக்களம் நம்பிக்கை கொண்டுள்ளது.

-இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## மானிப்பாய், சுன்னாகம் வங்கிகளில் பணப்புழக்கம்

யாழ்ப்பணம், ஏப்ரல் 21 மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளைகளில் பணப்புழக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[illegible] இந்த வங்கிகளுக்கு பணம்எடுத்துச் செல்லப்படுவதில்லை. எனினும் அந்த வங்கிகளில் வைப்பிடப்படும் பணத்தில் இருந்தே பணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிராந்தியமுகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி தெரிவித்தார். (உ-3)

## கிராம சேவையாளர் பிரிவுகளில் மீண்டும் இணக்க சபைகள்

கொழும்புத்துறை ஏப் 21 சகல கிராம சேவையாளர்கள் பிரிவுகள் தோறும் மிக விரைவில் இணக்க சபைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கிராமங்கள் தோறும் எழும் மக்களின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு இணக்கசபைகள் மீண்டும் உருவாக்கப்பட உள்ளதாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இணக்க சபை ஒவ்வொன்றிலும் பதினொரு அங்கத்தினர்கள் செயலாற்றுவார்கள். கடந்த 1987ஆம் ஆண்டுக்கு முன் சகல கிராமங்களிலும் இணக்கசபைகள் உருவாக்கப்பட்டு அவை கிராம மட்டத்திலான பொதுவான குடும்ப ரீதியிலான பிணக்குகளைத் தீர்த்து வந்தன. [அ-30]

### கவிபுனை அரங்கு

யாழ்ப்பாணம் ஏப் 21 நல்லை ஆதினத்தில் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியர் அருளாணையின் வண்ணம் சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளைகௌரவ பொறுப்பில் வாரந்தோறும் நடைபெற்று வரும் முத்தமிழ் கவிபுனை அரங்கு இவ்வாரம் முதல் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நடைபெறும்.

## மரண அறிவித்தல்கள்

### வினாயகமூர்த்தி - செல்லச்சாமி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வினாயகமூர்த்தி செல்லச்சாமி காலமாகிவிட்டார். அன்னார் பாக்கிய லெட்சுமியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், சக்திவேல் (ஜெடா), நாராயணசாமி (ஜெடா), நித்தியானந்தசாமி [லண்டன்], ராசலெட்சுமி, தங்கலெட்சுமியின் தந்தையும், தர்மராசா, சிவானந்தராசா (சுவிற்சலாந்து), ஜெய கௌரி, சகுந்தலா (ஆசிரியை திருகோணமலை), தாமரைச்செல்வியின் மாமனாரும், தங்கவேல், இரத்தினவேல், ஆகியோரின் மைத்துனரும், ஜமுனாராணி, ஜெயராசா, குமரராசா, நந்தினி, சிவச்செல்வன், ஜெயம், பவதாரணி, வாகீசன், பாலக்குமார், பாலக்கிருஷ்ணா, பாலச்சந்திரன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் 20/4/90 மாலை 3 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(3327)

### திருமதி கந்தையா பொன்னம்மா

சுருவிலைப்பிறப்பிடமாகக்கொண்டவரும், மானிப்பாய் வாசியும், முன்னாள் பெல்மதுளை பிரபல வர்த்தகர் N. V. K. ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வேலாயுதம்-கந்தையாவின் அன்புமனைவி திருமதிபொன்னம்மா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர், தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அனலைதீவு வேலாயுதம், சிவகாமியின் அன்பு மருமகளும், கங்காலெட்சுமி, இந்திரபுஸ்பம், கலாநாதன் (West Germany), நந்தகுமாரன் (West Germany), சந்திரலெட்சுமி, சுதந்திரலெட்சுமி, நிரந்தரலெட்சுமி, சுதந்திரகுமாரன் [U.K], ஆகியோரின் அருமைத்தாயாரும், கனகசபாபதி(U.K), பரம்சோதி, கிருஷ்ணராஜா, பவானந்தன், விமலாதேவி (West Germany), கேதீஸ்வரி (W.G), ஆகியோரின் அன்பு மாமியாரும், அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரகத்தி, காலஞ்சென்றபொன்னம்மா, சிவகுரு, சபாபதி, கனகசபை, ஆகியோரின் மைத்துனியும், தெய்வானை, சீதையம்மா, மங்களம், காலஞ்சென்ற மாணிக்கம், வீரசிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈசன்(U.K), விஜி(U,K), விக்னா, சாந்தி, அழகன் [Swiss], பிரபாறாஜி, மயூரன், தீபன்(West Germany) றதீஸ்(W.G), சான்னி(W.G), தர்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிறு காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
வே. கந்தையா.

சந்தையடி ஒழுங்கை,
மானிப்பாய்.

(3331)

### திருமதி இராசையா தெய்வானைப்பிள்ளை

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி இராசையா தெய்வானைப்பிள்ளை அவர்கள் 18-04-90 புதன்கிழமை காலமானார்.

இவர் காலம்சென்ற பொன்னையா இராசையாவின் அன்பு மனைவியும், இராசேஸ்வரி, சிவபாதசுந்தரம் (London), பாலசுப்பிரமணியம் ((Germany), லோகேஸ்வரன் (London), யோகரத்தினம் (Germany), ஆகியோரின் தாயாரும், பொன்னுத்துரை (C.O), சந்திரவதனா (London), செல்வராணி, சத்தியவதி (இராமனாதன் இந்துமகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி; London) ஆகியோரின் மாமியாரும், காண்டீபன், சிவசுந்தர், சுதர்சன், பாலினி, பிரியா, தக்சி, மேனன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரி கண்ணாப்பிட்டி மயானத்தில் ஞாயிறு (22-04-90) காலை 10.00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
இ. சிவபாதசுந்தரம்

கல்வயல்,
சாவகச்சேரி.

(3329)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் சித்தன்கேணி
A/L DAY CLASS
(காலை 8-00 மணி — 1-00 மணி வரை)
பொருளியல் — கலாகரன்
அளவையியல் — கேசவன்
வர்த்தகம் — சிவா
கணக்கியல் — பிரபாகரன்
தமிழ் — தனி
இ. நாகரிகம் — செல்வி

சஞ்சீவி
சஞ்சிகை
21 - 04 - 1990 சனிக்கிழமை

நாவலர்-பண்டத்தரிப்பு
ஆண்டு 9, 10, & O/L
கணிதம் — திரு. ப: குணம்
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
திரு. G. ஈசன்
ஆங்கிலம் — திரு. தெய்வர்
தமிழ் — திரு. கணேஷ்
ச. கல்வி — திரு. செல்வா

## கருத்துக் கலசம்

மயூரா

### எழுத்துக்கு ஊக்கம்

தமிழ் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாணசபை நடைமுறைப்படுத்த இருக்கிறது. ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களில் ஒரு தொகுதியை மாகாணசபை வாங்கி, உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் நூல் நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் வழங்கும் தகுதியான நூல்களே மாகாண சபையால் வாங்கப்படும் நூல்களாகத் தெரிவுசெய்வதற்குக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் இந்தத்திட்டம் வரவேற்கப்பட வேண்டியது. தமிழ் நூலாசிரியர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைவது எழுத்தாளர்கள் தமது படைப்புகளை வெளியிட்டுப் பரப்புவதற்கு கைகொடுக்க வல்லது.

அச்சகச் செலவுகள் அதிவேகமாக உயர்ந்துவரும் காலம் இது. எழுத்தாளர் ஒருவர் தனது சொந்தத்தில் புத்தகம் வெளியிடுவது என்பது ஆளை விழுங்கும் வேலை. அதனால் தமது படைப்பை எப்படியும் நூலாக்கிவிட வேண்டும் என்று துடிப்பவர்கள் பலர் கடனாளிகளாக மாறித் தலையில் கை வைத்துக் கொண்டு கஷ்டப்படுவதும் உண்டு.

எழுத்தாளர்கள் எழுதுவது எல்லாம் நூல்களாக வெளிவரவேண்டும் என்ற நிலை மாறவேண்டும். சமூகத்தை நல்வழிப்படுத்தி, நல்ல பிரசைகளாக்கும் பெறுமதியான, தரமுள்ள நூல்களே அச்சாகும்நிலை உருவாக்கப்படவேண்டும். ஆக்க இலக்கியம் தொடக்கம் ஆராய்ச்சி நூல்கள் வரை தரமானவற்றை, பெறுமதியானவற்றையே அச்சிட வகைசெய்யும் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம். அவ்வாறான நூல்களின் விற்பனைக்கே அரசாங்கமும், வாசகர்களும் உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் குறிப்பாகத் தமிழகத்தில் இருந்து வெளிவரும் கடைத்தரப் பிரசுரங்கள் வாசகர் மத்தியில் பரவாமல் இருக்கக் கண்காணிப்புடனும் விழிப்புடனும் இருக்கவேண்டும். அதேபோல இங்கும் வேண்டாத குப்பைகள் நூலுருவம் பெற்று சமுதாயத்தை குறிப்பாக இளம் சந்ததியினரை கெடுத்துவிட அனுமதிக்கக் கூடாது. அறிவூட்டமான, ஆக்கபூர்வமான, நாட்டை மக்களை வளம்படுத்தவல்ல ஆராய்ச்சிகளை, அறிவியலால் பரப்ப, சமய வாழ்வுக்கு நெறிப்படுத்த வகைசெய்யும் தரமான நூல்கள் மட்டுமே வெளிவர அரசும் மக்களும் உறுதுணையாக இருக்கவேண்டும். எழுத்தாளர் முகம் பாராமல் நல்ல எழுத்துக்கு விளக்கம் தரவேண்டும்.

நல்லவற்றுக்கு,பயனுள்ளவற்றுக்கு பக்கபலமாக இருந்து உதவும், ஊக்கமளிக்கும் பொறுப்பு அரசுக்கும் மக்களுக்கும் (வாசகர்களுக்கும்) அரைஅரைவாசிப் பங்குண்டு. அப்போதுதான் நேரிய நெறிமுறைப்பட்ட அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்கலாம்.

★

# வரலாற்றில் முதலில் தோன்றிய இலக்கிய வடிவம் கவிதையே!

மனித ஆன்மாவின் தேவைகளை நிறைவேற்றுபவை இலக்கியங்கள்.

அவனுடைய உள்ளத்தோடு உறவாடி, உணர்வுகளை மீட்டி அவனை எழுச்சி கொள்ளவும் அமைதி கொள்ளவும் செய்யும் வல்லமை இலக்கியங்களுக்கு உண்டு.

எனவே, மனிதன் தோன்றிய நாள் முதலே இலக்கிய வடிவங்களும் தோன்றி விட்டன எனக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

### விலங்கின நிலையில்

விலங்கின நிலையில் இருந்த 'மனிதக் கூட்டம்', உணர்வு பூர்வமான உழைப்பினைச் செய்யக் கற்றுக்கொண்டதும் மனித நிலைக்கு மாறிற்று என அறிவியல் வல்லுநர்கள் நிறுவியுள்ளனர்.

மனித வரலாற்றின் தொட்டில் பருவமான அந்த அடிநாட்களிலேயே இலக்கிய வடிவங்களும் தோன்றி விட்டன.

மொழியில்லாத, எழுத்துப் பிறக்காத அந்த நிலையில், மனிதச் சிந்தனை மிகவும் குறைவாகவே இருந்தது.

வாழ்வதற்காக வேண்டிப் புவி இயற்கையுடன் அவன் இன்றும் நடத்திக் கொண்டிருக்கும் முடிவற்ற போராட்டத்தில் கிடைக்கும் அனுபவங்கள் சேரச்சேர மனித சிந்தனையும் அறிவும் சிறுகச் சிறுக வளர்கின்றன.

எனவே, அறிவு என்பது மனிதகுலம் பெறுகின்ற ஒரு விஷயமாகும்.

### இரட்டைக் குழந்தை

ஆனால் உணர்வு என்பது மனிதனோடு ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தை. அதனை மனிதனில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கவே முடியாது.

உணர்வையும் மனிதனையும் பௌதீக அளவில் பிரித்தால், இரண்டுமே வாழாது வெறும் சடப்பொருள்தான் மிஞ்சும்.

இலக்கியம் உணர்வுப் பசிக்குச் சோறு என்பதனால். மனிதன் தோன்றிய நாளிலேயே அதுவும் தோன்றிவிட்டது என்று கொள்ளலாம்.

மொழியும் எழுத்தும் மனித அறிவில் உதிப்பதற்குப் பல நாட்களுக்கு முன்பே, இயற்கையின் பல்வேறு நிகழ்ச்சிகள் உணர்வோடு விளையாடின.

### மூங்கில் புதரிடையில்...

மூங்கில் புதரிடையில் மெல்லிய காற்று ஊடுருவிச்சென்ற போது ஏற்பட்ட சிற்றொலி–

ஆதி மனிதனில் இதயத்துக்கு இனம் புரியாத ஓர் அமைதியைக் கொடுத்தது.

அதேபோல், திடுமென அதிரும் இடிமுழக்கம் அவனை அதிரவைத்தது.

இவைகள் என்ன, எப்படி ஏற்படுகின்றன என்றெல்லாம் அறிய இயலாத நிலையிலும், இவைகளை உணர அவனால் முடிந்தது.

### இலக்கியம் பிறந்தது

இங்கேதான் இலக்கியமும் பிறந்தது. இயற்கையின் இனிமையும் கடுமையும்தான் தொடக்க நிலை இலக்கியங்களாக இருந்தன.

மனித இன வளர்ச்சிப் போக்கில் இயற்கையை நகல் படுத்தத் தொடங்கினால் மனிதன் அதுவே இலக்கியப் படைப்பாக மலர்ந்தது.

குயிலின் கூவல் மனித உள்ளத்தைச் சொக்க வைத்தது.

குயில் கூவாத வேளையில் அதைப் போலவே அவன் கூவிப் பார்த்தான்.

இயற்கை அசலாக இருந்தது என்றால் அதன் நகலாக இலக்கியம் பிறந்தது.

இப்படித் தோன்றிய இலக்கியங்களில் முதலாவது கவிதையே என்பதில் ஐயமே இல்லை.

ஏனெனில் காற்றும், வானும், ஆறும், அருவியும், பறவையும், விலங்கினமும் ஏனைய இயற்கைப் பொருள்களும் எழுப்பிய பல்வகை ஒலிக்கலவைகள்தான், மனித உணர்வுகளை முதலில் தூண்டின. மனிதனிடம் இருந்து அதற்குச் சரியான மறு உணர்வு (Response) கிடைத்தது.

**- எம். கே. இராமசாமி எம். எஸ் ஸி -**

### உழைப்பே வாழ்வு

உழைப்பே வாழ்வாக இருந்த ஆதிநாட்களில், உழைப்பின் கடுமையை மறக்க அவன் முணுமுணுத்த ஒலிகளே, மனிதனின் முதற் கவிதைகள். அவைகளிலே சொற்கள் இல்லை. இன்றைய வரையறுப்புகளின் படியான இசை இல்லை.

ஆனாலும் மனித உணர்வின் வெளிப்பாடுகள், மனித உணர்வுக்கான வெளிப்பாடுகள் என்ற வகையில், அந்த முணுமுணுப்புக்கள் முதற் கவிதை என்ற அந்தஸ்தைப் பெறுகின்றன.

அந்தப் பண்டைய நிலையில் இருந்து, உழைப்பும் இலக்கியமும் இரண்டறக் கலந்து நின்ற நிலையில் இருந்து வாழ்க்கை வெகுதூரம் முன்னேறி விட்டது.

பல இலட்சக்கணக்கான ஆண்டுகளைத் தாண்டிச் சிக்கல்கள் மிகுந்த இன்றைய மனிதன் உருவாகி இருக்கிறான்.

மாற்றம் என்பது மனிதனுக்கு மட்டும் அல்ல. அனைத்துப் பொருள்களும் இடையறாது மாறிக்கொண்டே இருக்கின்றன என்பது அறிவியல் விதி. மாற்றம் ஒன்று மட்டுமே மாறாத தன்மை பெற்றது.

### சமுதாய வாழ்க்கை

சமுதாய வாழ்க்கை என்னும் நெடும்பாதையில் உருண்டு ஓடிவரும் கவிதை இலக்கியமும், தனது பிரதான இலக்காகிய மனிதனோடு சேர்ந்து மாறிக்கொண்டே வருகிறது.

தோன்றும் போது வெற்றொலியாக, இன்றைய வரையறுப்புக்கள் படி வெறும் இசையாக மட்டும் இருந்த கவிதையானது, மொழி பிறந்ததும் சொல் வடிவம் பெற்றது.

ஆற்று நீரில் படகோட்டியவனும், உரலிலே நெல் குத்தியவளும் தமது உழைப்பில் ஏற்படும் அசைவுகளுக்கு ஏற்பச் சொற்களைச் சேர்த்து சொல்லத் தொடங்கினர். பாட்டின் முதல் வடிவங்கள் தோன்றின.

### உற்பத்திக் கருவிகள்

மனித உழைப்பை எளிமைப்படுத்துவதற்காக உற்பத்திக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் முன்னேற்றம் ஏற்பட ஏற்பட உற்பத்தி பெருகியது.

மனித உழைப்பின் காலம் சுருங்கிய மனிதனுக்கு ஓய்வு கிடைக்கத் தொடங்கியது. இந்த ஓய்வு வேளைகளில், அவன் தன் உணர்வுகளோடு இசைந்த பாட்டுக்களைப் பாடினான்.

உழைப்பின் போது பிறந்த கவிதையை ஓய்வின் போது மேலும் செழுமையாக்கினான். உழைப்பில் இருந்து கவிதை பிறந்தது. உழைப்புத் துன்பத்தை மறப்பதற்கான கருவி என்ற நிலை மாறி, உணர்வுக்குக் காணிக்கையாகப் படைக்கப்படும் ஒன்றாகியது அது.

### கால வெள்ளம்

இருந்தாலும் கவிதையும் இசையும் ஒன்றாகக் கட்டுண்ட நிலையிலேயே இருந்தன.

கால வெள்ளத்தின் ஓட்டத்தில் இசையின் வகைகளும் நுணுக்கங்களும் வளர வளர இரண்டும் இருவேறு கால வடிவங்களாகித் தனித்தனியே வளர்ச்சிபெறத்தொடங்கின.

இரண்டுக்கும் தனித்தனி இலக்கணங்களும் தனித்தனி வளர்ச்சிப் போக்குகளும் ஏற்பட்டன.

மொழி ஏற்பட்டுக்கவிதைக்குச் சொல் வடிவம் கிட்டியதும் இசை தனது தனிவழிப் பயணத்தை மேற் கொண்டது.

### காலச் சோதனை

எந்த இறையனாரும் மொழி தோன்றுவது முன்பே இலக்கணத்தைத் தோற்றுவிக்கவில்லை.

பல்லாயிரம் கவிதை வடிவங்கள் பிறந்து உலா வந்த பிறகு, அவைகளில் மக்கள் ஆதரவைப் பெற்றுக் காலச் சோதனையில் தோன்றி நின்றவைகளின் பொதுப் பண்புகள் தொகுக்கப்பட்டு இலக்கணம் ஏற்பட்டது.

அந்த இலக்கணமும் கூட இரும்புச்சட்டமாக இருக்கவில்லை, இருக்கமுடியவில்லை. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப இலக்கண வரையறைகளும் மாறி வந்துள்ளன.

தொன்மையான தொல்காப்பியம் வரையறுப்புகளுக்கும் பிறகு வெகுகாலம் கழித்து வந்த பவணந்தியின் நன்னூல் கூறும் வரையறுப்புகளுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு என்பது, தமிழ் அறிந்த அனைவருக்கும் தெரியும். அதன் பிறகும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

தொல்காப்பியம் முதலாக இன்று பிறக்கின்ற, நாளை பிறக்க இருக்கின்ற கவிதைகள் ஈறாக, வளமான கவிதைச் செல்வம் தமிழில் உண்டு.

மனிதனுடைய அனுபவங்கள் அன்றாடம் பெருகிக் கொண்டிருக்கின்றன. அதற்கேற்ப அவனுடைய தேவையும் அதைத் தொடர்ந்து அவனுடைய படைப்புக்களும புதுப்புது வடிவங்களைப் பெற்று வருகின்றன; இனியும் பெற்று வரும். ★

# பிரபஞ்சத்தை நோக்கி ஒரு தொலைநோக்கி!

பிரபஞ்சத்தை ஆராயும் பணியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

மெஞ்ஞானிகள் தங்கள் மனக்கண்ணால் பிரபஞ்ச மர்மத்தைக் கண்டு பிடித்தனர்.

அதனை அவர்கள் வேதங்களாக, ஆகமங்களாக, போதனைகளாக நமக்கு விட்டுச்சென்றனர்.

ஆனால் இன்று விஞ்ஞானிகள் பிரபஞ்சமர்மத்தைக் கண்டுபிடிக்க அதிசக்திவாய்ந்த தொலைநோக்கியின் 'கண்'ணை நாடியுள்ளனர்.

இதற்காக 'ஹபிள் விண் தொலைநோக்கி' ஒன்றை கடந்த 12 ஆம் திகதி விண்ணுக்கு அனுப்ப அமெரிக்க விஞ்ஞானிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளும் தயாரான நிலையில் விண்ணுக்கு ஏவப்படுவதற்கு நான்கு வினாடிகள் இருக்கையில் தொலைநோக்கியைக்கொண்டு செல்லவிருந்த விண்கலத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் ஹபிள் தொலைநோக்கி இம்மாதம் 25 ஆம் திகதி காலை 8.29 மணிக்கு விண்ணுக்கு அனுப்பப்படவுள்ளது.

### 'ஹபிள்' பெயர் வரக் காரணம்

எட்வின் ஹபிள், அமெரிக்காவின் பிரபல வானவியல் நிபுணர். 1889 இல் பிறந்த இவர் 1953 இல் மறைந்தார்.

இப்பிரபஞ்சம் விரிந்து கொண்டு செல்கிறதா என்பது பற்றிய ஆய்வை நடத்தியவர் திரு. ஹபிள் ஆவார். 1920 இல் அவர் இந்த ஆய்வை மேற்கொண்டார்.

அதனால்தான் பிரபஞ்சத்தை ஆராயும் இவ்விண் தொலைநோக்கிக்கு அவரின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

கலிலியோவுக்குப் பிறகு பிரபஞ்சத்தை பெரிய அளவில் ஆராயும் பணியாக இது அமைய உள்ளது.

12 தொன் எடையுள்ள இத்தொலைநோக்கி விண்ணில் 15 முதல் 20 ஆண்டுகள் வரை சஞ்சரித்து பிரபஞ்சத்தின் மர்மம் பற்றிய தகவல்களை பூமிக்கு அனுப்பிக்கொண்டிருக்கும்.

பூமியில் இருந்து 380 மைல் தொலைவில் ஹபிள் தொலைநோக்கி உலகை வட்டமிட்டுவரும்.

**- பிரசாந்தி -**

இந்த அகண்ட பிரபஞ்ச வெளியில் காணப்படும் சகல பொருட்களையும் ஒன்றுகூட விடாமல் தொலைநோக்கியின் உதவியுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள கமரா படம் பிடித்து பூமிக்கு அனுப்பும்.

### பூமியில் இருந்து...

இவ்விண் தொலைநோக்கியை செயல்படுத்துவதற்கு கென்னடி விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தினால் இரண்டு ... படுத்தப்படும்.

பூமியில் இருந்து தினமும், 18 கொம்பியூட்டர்கள் மூலம் அனுப்பப்படும் 20 ஆயிரத்துக்கு அதிகமான வானொலி கட்டளைகளை ஹபிள் விண் தொலைநோக்கி பெறும்.

### கடமைகள்

இரண்டாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இந்



'ஹபிள்' தொலைநோக்கி

தப் பிரபஞ்சம் தோன்றியது என்று கூறப்படுகிறது.

இது உண்மைதானா?

பிரபஞ்சத்தின் வடிவம் என்ன? வேறு உயிரினங்கள் வாழ்கின்றனவா? — என்பன போன்ற தகவல்களை அறிந்து கொள்வதே ஹபிள் விண் தொலைநோக்கி அனுப்புவதன் நோக்கமாகும்.

20 ஆயிரம் லட்சம் ஒளி ஆண்டுகளைக் கடந்து சென்று பிரபஞ்சத்தில் காணப்படும் சகல பொருட்களையும் படம்பிடிக்கக்கூடிய சக்தி வாய்ந்த கமரா இத் தொலைநோக்கியில் பொருத்தப்பட்டுள்ளது.

கலிலியோ அன்று மண்ணிலிருந்து தொலைநோக்கி மூலம் பிரபஞ்சத்தை ஆராய்ந்தார். இன்று விண்ணில் இருந்து பிரபஞ்சத்தை 'ஹபிள்' தொலைநோக்கி ஆராயப்போகிறது. ★

## ரமழான் சிந்தனை

'நோன்பு சகல வணக்கங்களுக்கும் தலைவாசல்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஜ்ரத் உப்பாதா இப்னு ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- ஒருநாள் பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு உபதேசித்தார்கள்.

'ரமழான் நம்மை வந்தடைந்துள்ளது. இது அபிவிருத்திகள் நிறைந்த மாதம்; இம்மாதத்தில் இறைவன் உங்கள் பால் சிறப்பாக கவனஞ் செலுத்தி தனது அருள் மழையை பொழியச் செய்கின்றான்; பிரார்த்தனைகளை அங்கீகரித்துக்கொள்கிறான்; நல்ல காரியங்களில் உங்களுக்கிடையில் போட்டியிட்டு முன்னேறுபவர் யார்? என்பதை அவன் கவனிக்கிறான்; உங்களைப் பற்றி அவன் மலக்கு (வானவர்)களிடம் பிரஸ்தாபித்துப் பெருமை பாராட்டுகிறான்.



ஆகவே நீங்கள் நன்மையான கைங்கரியங்கள் புரிந்து அல்லாஹ்விடம் சமர்ப்பியுங்கள். இப்புனித மாதத்திலும் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை அனுக்கிரகத்தை அடையாமல் அப்புறப்பட்டிருப்பவன் துர்ப்பாக்கியவனாவான்.

—நால் தப்ரானி

## தெரியுமா சேதி?....

☐ விடுதலைப் போராட்டத் தலைவரை அவரது ஆலோசகரான 'கலாநிதி' 'தம்பி' என்று அழைப்பதில்லையாம். 'வீரமார்த்தாண்டன்' என்றுதான் செல்லமாக அழைக்கிறாராம். சுத்த வீரனுக்கு 'வீரமார்த்தாண்டன்' என்ற பெயர் பொருத்தமானது தானே!

☐ நளினமானவர்தான் இப்போது சபையை ஆளுகிறார். தமிழர் அமைப்போடு நெருக்கமாக ஒட்டி உறவாடுபவர் போல எல்லா மட்டப் பேச்சுக்களிலும் தலையை நீட்டி வருகிறார் இந்த நளினமானவர். ஆனால் தமிழர் தலைமைத்துவத்திடம் தாம் எதிர்பார்ப்பது போல இவரால் நல்ல பெயர் எடுக்க முடியவில்லை. வடமராட்சியில் 'சுதந்திர நடவடிக்கை'களுக்கு இவர் தளபதியாய்த் தலைமை வகித்துச் செய்த அட்டகாசத்தைத் தமிழர் தலைமை மன்னிக்கத் தயாரில்லை.

☐ நாட்டின் தலைவரை அமெரிக்கப் பேராசிரியர் அண்மையில் சந்தித்தார். இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவை மூடும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பேராசிரியர் கேட்டார். ஆனால் தலைவரோ ''நான் முடிவு செய்தால் ஒரே முடிவுதான். அதை மாற்றமுடியாது''– என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி விட்டார்.

''அப்படியானால் விளைவுகளை நீங்கள் எதிர்நோக்க வேண்டி வரும்'' என்று சாதுவாக மிரட்டல் விட்டாராம் பேராசிரியர்.

அதைக்கேட்டுக் கொதித்து எழுந்தார் நாட்டுத் தலைவர்.

''என்ன மிரட்டலா விடுகிறீர்கள்? உங்களால் என்ன செய்யமுடியும்? வேண்டுமானால் உதவிகளைக் குறைப்பீர்கள். இப்போதே உதவிகளை நிறுத்துங்கள். நாங்கள் தயார். எதிர்த்துப் பார்ப்போம்'' — என்று கொதிப்புடன் பாய்ந்தாராம்.

ஆனால் நிலைமையைப் புரிந்து கொண்ட பேராசிரியர் ஒருவாறு சமாளித்துத் தலைவருக்கு ஐஸ் வைத்து விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று.

வல்லரசை வெற்றி கொண்ட அணியோடு பேசுவதால் நாட்டுத்தலைவருக்கும் வல்லரசு ஒன்றுடன் மோதும் தைரியம் வந்துவிட்டது போலும்!

☐ பத்திரிகையாளர்களைக் கண்டால் சீறிவிழுவார் அந்த அம்மணி. தன்னை விட்டால் 'கலவி'யில் பெரிய ஆள் இல்லை என்ற மமதையோடு செயற்பட்ட அம்மணிக்கு இன்று பொறுப்பான பதவி இல்லை. ஓய்வு பெறப் போவதாகக் கேள்வி. அம்மணி போய் அழகர் வந்துவிட்டார். நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்களில் பத்திரிகையாளர்களும் அடங்குகிறார்களாம்!

ஒத்துழையாதவரை யார்தான் வரவேற்பர்?

- தக்ஷன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய குரல்கள்



## - ஆதிலட்சுமி இராசையா -

**பஸ்** நிலையத்திலிருந்து வீட்டுக்கு வந்து சேர்வதற்குள் உடம்பு முழுவதும் குளித்தமாதிரி வியர்த்துவிட்டிருந்தது இந்துஜாவுக்கு. தவணைப் பரீட்சை நேரமாதலால் திருத்துவதற்காக எடுத்துவந்த விடைத்தாள்கள் வேறுசுமையாய் அழுத்தின. எல்லாவற்றையும் மேசையில் தொப்பென்று போட்டாள். கழுத்துக்கு கீழே வியர்வை கசகசக்க... தலைமயிரை அள்ளிக் கொண்டைபோட்டுக்கொண்டாள்.

'முதலிலை இந்தச் சாறியை அவிழ்த்து எறியவேணும்... இதாலைதான் பெரிய உபத்திரவம்..' முணுமுணுத்தபடி கவுணுக்கு மாறினாள்.

'இஞ்ச நாங்கள் இருபத்துநாலு மணிநேரமும் சீலை கட்டிக்கொண்டிருக்கேல்லையே... இப்ப நீங்கள்தான் புதுப்பாஷன் ஒண்டு கண்டு பிடிச்சிருக்கிறியள்... கைதெரியக் கால்தெரியப் போட்டுக்கொண்டு... உதாலைதானே ஊர் உலகத்திலை நடக்காததெல்லாம் நடக்குது...' அவளுடைய தாய் தன் பாஷையில் நொடித்தாள்.

'அந்தக் காலத்திலை நீங்கள் நாலு சுவருக்குள்ளேயே உலகம் என்று வாழ்ந்தியள்... அந்தக்காலம்மாதிரியே இப்ப ஒருநாளைக்கு இரண்டுதரம்... பஸ் வழிய ஏறி இடிபட்டு இறங்கினால்தானே எல்லாம் புரியும்... சீ...என்ன வாழ்க்கையப்பா இது?... அடுத்தபிறவி எண்டு ஒன்று இருந்தால் மனிசப்பிறவியே எடுக்கக்கூடாது... அதிலும்... பொம்பிளையாகப் பிறக்கவே கூடாது...' சொல்லிக்கொண்டே கிணற்றடிக்கு முகம் கழுவப்போனாள் இந்துஜா.

அவள் முகங்கழுவிக்கொண்டு திரும்பிவந்தபோது குசினிக்குள் அம்மா சாப்பாடு போடுவது தெரிந்தது.

'எனக்கு இப்ப பசிக்கேல்லை...' என்றவள் 'நாளைக்கு றிப்போட்டுக்கு மாக்ஸ் குடுக்கவேணும்...... நான் பேப்பர் திருத்தப்போறன்... என்னை ஒருத்தரும் டிஸ்ரேப் பண்ணாதேங்கோ...' என்று சிவப்பு மைப்பேனையையும் விடைத்தாள்களையும் கையில் எடுத்துக்கொண்டாள்.

'சாப்பிடாட்டி இந்தா இந்தத் தேசிக்காய்த் தண்ணியை என்றாலும் குடியன்... வெறுங்குடலோடை எப்பிடித்தான் இருக்கமுடியுதோ உனக்கு?... எங்களுக்கு ஒரு நேரம் தின்னாட்டியே குடலைப் பிறாண்டும்...' அம்மா நீட்டிய ஜூசைக் குடித்துவிட்டுவந்தாள்.

வீட்டுக்குப் பின்னால் வியாபித்துப் படர்ந்துகிடந்த வேப்பமரத்தின் நிழலில் கதிரை ஒன்றைப் போட்டு அமர்ந்துகொண்டாள். வேப்பமரத்தின் சிலுசிலுவென்ற காற்று வெயிலுக்கு இதமாக இருந்தது.

இந்த வேப்பமரத்துக்கும் அவளுக்கும் வயது ஒன்றுதானாம்... அப்பா அடிக்கடி சொல்லுவார். அப்பாவை நினைத்துக்கொண்டபோது அப்பாவின் இழப்பின் துயர் நெஞ்சில் ரணமாய் வலித்தது.

தினமும் மத்தியானச் சாப்பாடு முடிந்தவுடன் இந்த மரத்துக்குக் கீழ்தான் அப்பா காற்றுக்காகப் படுத்திருப்பார். அந்த நேரங்களில் அவளும் அப்பாவுடன் சேர்ந்துகொண்டு பல விஷயங்களை அலசுவாள்.

அரசியல், சினிமா, விளையாட்டு என்று எல்லாத்துறைகளையும்பற்றி இருவரும் விவாதிப்பார்கள்.

அந்தக் காலத்து பொருட்களின் விலைகள்பற்றி... பத்துக் காசுக்கு ஒருசாக்கு சீனி வாங்கினதுபற்றி... கோயில் திருவிழாக்களில் ஒன்றை ஒன்று மிஞ்சும் போட்டியில் விடியவிடிய சின்னமேளம் பார்த்ததுபற்றி... மாணவப் பிராயத்தில் பத்துப் பதினைந்துபேர் சேர்ந்து கீரிமலைக் கடலில் நீச்சல் அடிப்பதுபற்றி... அப்போது சினிமாவில் கொடிகட்டிப்பறந்த கதாநாயகர்கள்பற்றி... அம்மாவைத் தான் காதலித்ததுபற்றி...அத்தனை பேருடைய எதிர்ப்புகளையும்முறியடித்து அம்மாவைக் கைப்பிடித்ததுபற்றி... நாள்முழுக்க அப்பா கதைகதையாகச் சொல்லுவார்...

அவருடன் எவ்வளவு நேரம்தான் பேசிக்கொண்டிருந்தாலும்... இன்னமும் கொஞ்சநேரம் பேசமாட்டாரா என்று மனம் ஏங்கும்–தவிக்கும்.

'வெறும் புத்தகப் படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு உதவாது இந்து... நாலு மனிசரோடை கலந்து பழகவேணும் பழகும்போதே முகத்தைப் பார்த்து மனிசரைக் கணித்துக்கொள்ள வேணும்... சந்தோஷம் வந்தா துள்ளிக்குதிக்காம துன்பம் வந்தா துவண்டுவிடாம வாழக் கற்றுக்கொள்ளவேணும்... அப்பதான் வாழ்க்கை வாழ்க்கையாக இருக்கும்...' ஒரு ஆத்மார்த்தமான சிநேகிதன் மாதிரி... அப்பா எப்படியெல்லாம் அட்வைஸ் பண்ணுவார்?... அந்த அப்பா இன்று உயிருடன் இல்லை.

அப்பா... அப்பா... என்று உதடுகள் துடிக்க – கண்கள் கலங்கின. சிறிய பெருமூச்சுடன் மரத்தை அண்ணாந்து பார்க்கிறாள் இந்துஜா. அப்பாவையே நேரில் பார்ப்பது மாதிரி ஒரு திருப்தி.

'அக்கா... அக்கா .. நீங்கள் இங்கையே இருக்கிறியள்...... நான் எங்கையெல்லாம் போய்த் தேடிப்போட்டு வாறன் தெரியுமே...' பிறேமி அவளுடைய தங்கை சிணுங்கிக்கொண்டுவந்து முன்னால் நின்றாள்.

'ஒரு இடத்திலை இருந்து ஒரு அலுவலை முழுசாச் செய்யவிடமாட்டாய்... எனக்குத் தெரியும்... உனக்கு இப்ப என்ன வேணும்?...... கெதியாய்ச் சொல்லு... எனக்கு இப்ப உன்னோட விளையாட ரைம் இல்லை... தலைக்குமேலை வேலை கிடக்குது...'

'என்ன மனிசரப்பா நீங்கள் எல்லாம்... எந்தநேரமும் 100பாகை சூயிலை கொதிச்சுக்கொண்டு... உங்களைத் தேடி யாரோ வந்துநிற்கினம்'

'என்னைத் தேடியோ?... யாரது?...'

'வேற ஆர்?... ஒரு ரண்டு கால் மனிசர்தான்... உங்களையே தான் தேடி வந்திருக்கு...'

'யாராக இருக்கும்?...' புருவங்களைச் சுருக்கிக்கொண்டு முன்னால் கேற்றுக்கு வருகிறாள் இந்துஜா.

உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஒருகணம் சில்லிட்ட அதிர்ச்சியில்... தன்னைச் சுதாகரித்துக்கொண்டு 'வாங்கோ... உள்ளே வாங்கோ சுரேஷ்...' கால்கள் நிலத்தில் முட்டாமல் பரபரத்தாள் அவள்.

'இருங்கோ சுரேஷ்... அம்மா... சுரேஷ் வந்திருக்கிறார்...' குசினிக்குள் நின்ற அம்மாவுக்கு குரல் கொடுத்தாள்.

சுரேஷ் இப்போதுதான் முதல்தடவையாக வந்திருக்கிறான்... அம்மா சுரேஷை ஏற இறங்க ஒருதடவை பார்த்தாள்.

'நீங்கள் இப்பிடித் திடீரென்று வருவியள் என்று நான் நினைக்கவே இல்லைச் சுரேஷ்...' என்றாள்.

'நானும் நினைத்திருக்கேல்லை இந்து... ஒரு பிரெண்டை அவசியமா மீற் பண்ணவேணும்... வந்தனான் அப்படியே உம்மையும் பாத்திட்டுப் போவம் என்றுதான் வந்தனான்..'

'அதுக்கென்ன... சொல்லிப்போட்டு வந்திருந்தால் ஏதாவது விசேஷமாய் செய்திருக்கலாம்...' அம்மாவிடமிருந்து தேனீரை வாங்கி சுரேஷின் முன்னால் வைத்தாள். அவன் தேனீரைக் குடித்தபடியே வீடு முழுவதையும் கண்களால் ஆராய்ந்தான்.

'இது பிறேமி... நான் சொல்லுவேனே...' பிறேமியை சுரேஷுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

'இது...அப்பா...' அப்பாவின் படத்தை வேதனையோடு காட்டினாள்.

'இவ எங்கட அக்கா... மரிபண்ணி அத்தான் வீட்டில இருக்கிறா...' சம்பிரதாயமாக அவள் எல்லாரையும் அறிமுகம் செய்துவைத்த பிறகு, அவன் மணிக்கூட்டைப்பார்த்தபடியே கேட்டான்.

'நாளைக்கு ஸ்கூலுக்கு போகவேணுமே...'

'நாளைக்கு எப்பிடியும் 'மாக்ஸ் லிஸ்ற்' கொடுக்க வேணும்...'

'நான் ஒரு பிரச்சினையை உம்மோட டிஸ்கஸ் பண்ண வேணும்... அது ஆறுதலாத்தான் பேச முடியும்... அதனாலதான் கேட்டனான்...'

'அப்ப லீவு போட்டு விடுறன்...'

சுரேஷ் அவளிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றதும் அம்மா சொன்னாள்

'நல்ல ஆளா... அமைதியாத் தெரியுது...'

'பாத்தியளே... ஒருநாளும் பழகிப்பாக்காம ஒருத்தரை விமர்சிக்கக் கூடாது என்று புரியுதுதானே...'

மீண்டும் வேப்பமரத்தடிக்கு வந்தாள் இந்துஜா. மனம் சுரேஷ் வந்துபோனதை ஒரு கனவு மாதிரிக் காட்டியது.

இவள் வெளியூர் ஒன்றில் படிப்பித்துக்கொண்டிருந்தபோது பாடசாலைக்கு முன்னால் 'மெக்கானிக் ஷொப்' ஒன்றைச் சொந்தமாக நடத்திக்கொண்டிருந்தான் சுரேஷ். அவனுடைய ஷொப்புக்கு முன்னால்தான் அவள் பஸ்ஸுக்காக நிற்பாள். அந்த நேரங்களில் அவனுடைய சுறுசுறுப்பும், வேலைகளை நுணுக்கமாக செய்து முடிக்கும் திறமையும் அவளைக் கவர்ந்தன.

ஒருநாள் அவனிடம் காசு மாற்றுவதற்காக அவள் 'ஹான்ட்பாக்'கைத் திறந்தபோது,

'என்ன புக் ரீச்சர் அது... குடுங்கோவன் படிச்சிட்டுத் தாறன்...' என்றான்.

'ஓ... அதுக்கென்ன...' அவள் புத்தகத்தைக் கொடுத்துவிட்டு வந்தாள். மறுநாள் 'இந்தாங்கோ ரீச்சர் புக்... இதுக்குள்ள இருந்த புதுக்கவிதை நீங்களா எழுதினது...' பஸ்ஸுக்கு நின்ற அவளிடம் கேட்டான்.

'ஓ...அதுவா?... உங்களுக்கு புதுக்கவிதை பிடிக்குமா?...'

'புதுக்கவிதையும் பிடிக்கும்... புதுக்கவிதை எழுதுறவங்களையும் பிடிக்கும்...' ஓரடி முன்னால் வந்து மெதுவாகச் சொல்லிவிட்டு கண்களால் சிரித்தான் அவன். அந்தச் சிரிப்புத்தான் அவர்களுக்குள் காதலை வளர்த்தது.

விஷயம் ஒருநாள் அம்மாவின் காதுக்கு எட்டியபோது எந்த விதமான மறுப்பும் இல்லாமல் அவள் உண்மையை ஒப்புக்கொண்டாள்.

'நீ ஒரு கிராட்யுவேற் ரீச்சர்... போயும் போயும் ஒரு கடைக்காறனைக் காதலிக்கிறன் என்கிறாயே...' அம்மா ஆவேசமாகக் கேட்டாள்.

'அம்மா அவர் கடைக்காறனா இருந்தாலென்ன... கள்ளக்கடத்தல்காறனாய் இருந்தால் என்ன?... வாழப்போறது நான்தானே... அது மட்டுமில்லை வாழுறதுக்கு மனசும் மனசும் தான் முக்கியம்... பதவிக்கும் பதவிக்குமே கலியாணம் நடக்கப் போகுது...'

'ஒரு பொம்பிளைப்பிள்ளை நாலு எழுத்துப் படிச்சால்... நல்லபடியாகத் தலைநிமிர்ந்து வாழும் என்று நான் நினைச்சன்... நீ இப்படிப் புத்திபேதலிச்சுப் போய்நிக்கிறியே . நீ படிச்சது உதுதானோ...' அம்மா பெருங்குரலில் அழுது தீர்த்தாள்.

அம்மாவின் கண்ணீர் மனதை உருகவைத்தது. என்றாலும் படிப்பறிவு என்பது மனிதர்களை பேதம்பிரித்து தீண்டாமல் ஒதுக்குவதற்காகத்தான் என்று நினைக்கும் அம்மாவின் அறியாமை அவளை வேதனைப்படவைத்தது. பிடிவாதமாய் சுரேஷைத்தான் கட்டிக்கொள்வேன் என்று அடம்பிடிக்க... அம்மாவின் பெத்த மனம் பித்தாகித் தளர்ந்துவிட்டது.

ஆனால் தன்னுடைய அக்காவுக்கு திருமணமான பின்பே தன்னுடை திருமணத்தை வைக்கலாமென்றான் சுரேஷ். காத்திருப்பது பெண்களுக்கென்ன கஷ்டமான காரியமா?...

'அக்கா! பேப்பர் திருத்தினது போதும்... நல்லா இருண்டு போச்சுது .. உள்ளே வாங்கோ... அந்தக் 'ஹீரோ' வரேக்குள்ளையே எனக்குத் தெரியும்... இனி இரண்டு மூன்று நாளைக்கு அக்கா நிஜ உலகிலை இருக்க மாட்டா என்று...' சுற்றிச் சுழன்றுகொண்டு வந்த பிறேமி கிண்டல் பண்ணினாள்.

'விடவிட உனக்கு வாய் நல்லா நீளுது... அடிதான் வாங்கப்போறாய்...' பொய்யாகக் கோபித்துக்கொண்டு உள்ளே வந்தாள் இந்துஜா.

மறுநாள் ஸ்கூலுக்கு லீவு போட்டுவிட்டு சுரேஸை சந்தித்தாள் அவள். அவன் உள்ளங்கையை வெறுத்துப்பார்த்தபடி இருந்தான்.

'ம்... என்ன விஷயம் சொல்லுங்கோ சுரேஷ்...' அவள் பரபரத்தாள். அவன் ஏனோ மௌனமாகத்தான் இருந்தான்.

'சுரேஷ்... என்னவென்றாலும் வாயைத்திறந்து சொல்லுங்கோவன்... சொன்னாத்தானே தெரியும்... உங்கட கஷ்ட நஷ்டங்களிலை பங்கு கொள்ள வேண்டியவள் நான்...' அவள் நெகிழ்ந்து போய்க் கூறினாள்.

'அக்காவை பொம்பிளை பார்த்து... இப்ப அந்த இடம் சரிவரும்போல தெரியுது...'

எவ்வளவு சந்தோஷமான நியூஸ்... இதைச் சொல்லுறதுக்கு ஏன் இத்தனை நேரமா பீடிகை போட வேணும்... பெரிய ஆள்தான்...'

'அங்கைதான் பிரச்சினையே தலைதூக்குது இந்து... அவங்கள் பெருமளவில் சீதனம் எதிர்பார்க்கிறாங்கள்... அந்தளவு குடுக்க எங்களாலை ஏலாது... ஆனா அக்காவுக்கு அந்த மாப்பிள்ளையை நல்லா பிடித்துவிட்டது... அவருக்கும் அக்காவைப் பிடித்துவிட்டது... எந்தவிதத்திலையும் இதை முடிக்கச்சொல்லி மாப்பிள்ளை கேக்கிறார் இந்து...'

'ம்... அவருக்கு கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையாமோ...' அவளுக்கு கோபம் வந்தது.

'எங்கட வீட்டிலை கொஞ்ச நாளா எனக்கு ஒரே கரைச்சல்... என்னை நம்பித்தானாம் அக்காவுக்கு கலியாணப்பேச்சையே ஆரம்பித்தவை... அக்காவின்ரை சீதனத்துக்கு குறையிற பணத்துக்காக எனக்கு பொம்பிளை பாக்க ஆரம்பித்திருக்கினம் இந்து...'

'தலைக்குமேலை வெள்ளம் போகமுதல் எங்கட விஷயத்தை சொல்லுங்கோ சுரேஷ்...' அவள் பதற்றத்துடன் கேட்டாள்.

'நான் அம்மாவோடை எல்லாம் கதைச்சுப்பார்த்தன்... என்னைப் படிக்க வைச்சபணமே அக்காவுக்குச் சீதனம்குடுக்கக் காணுமாம்... நான் தங்களுக்கு கை குடுப்பன் என்று நம்பித்தான் என்னை வளர்த்தவை... எனக்கு என்ன செய்யிறதென்றே புரியவில்லை...'

'இப்ப என்ன செய்யிறது சுரேஷ்...'

'உங்கட வீட்டுக்காரர் சம்மதிச்சா... உடனை நாங்கள் றிஜிஸ்டர்பண்ணிக்கொள்ளலாம்... உங்கட வீட்டிலை உமக்குத் தருகிற சீதனத்திலை பலன்ஸ்பண்ணி அக்காவின்ர கலியாணத்தை முடிக்கலாம்... என்று அம்மா சொல்லுறா...'

ஒருகணம் .. அவளுக்குள் ஆத்திரமும் ஆவேசமும் கொப்புளித்துக் குமுற... கல்யாணத்தை வியாபாரமாக்கி விலைபேசத் துணிந்துவிட்ட அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியில்தள்ள அவள் கரங்கள் துடித்தன. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் சொன்னாள்.

'எங்களுக்கு... திடீரென்று பணம் புரட்ட முடியாது...' அவளையும் மீறிக் குரல் கடுகடுத்தது... மனசு படபடத்தது.

'அப்ப... அப்பா அம்மா சொல்லுற பொம்பிளைக்குத் தாலி கட்டுறதுதான் சரி...' அவன் வலும் சிம்பிளாகச் சொல்லிவிட்டு அவளைப் பார்த்தான்.

'சுரேஷ்..' அவள் அழுகையில் துடித்த உதடுகளைப் பற்களால் அழுத்திக்கொண்டாள்.

'என்ரை நிலையிலை இருக்கிற யாரும் இந்த முடிவைத்தான் எடுப்பினம் இந்து... ஏதோ ஒருபக்கத்திலைகெட்ட பெயர் வாங்காம இந்தச் சமூகத்திலை வாழ ஏலாது... நீயே யோசித்துப்பார் இந்து'

அவள் மௌனமாக நின்றாள் .. தன்னைத் திடப்படுத்திக்கொள்வதற்கு சில நிமிட அவகாசம் தேவைப்பட்டது அவளுக்கு.

'நாங்கள் உண்மையாகவே ஒருத்தரை ஒருவர் நேசிச்சம் ஆனா வாழ்க்கையிலை இணைய முடியாமலிருக்கு... அதுக்காக நீயோ... நானோ வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளக்கூடாது இந்து உன்ரை நல்ல மனதுக்கு நிச்சயமாக உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும்...நீ சந்தோஷமா வாழவேணும்...... இது என்னுடைய விருப்பம் இந்து...

அவனுடைய பேச்சு எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவதுமாதிரி இருந்தது அவளுக்கு.

'பொம்பிளை பார்க்கவந்த இடத்திலை அக்காவுக்கு மாப்பிள்ளையை பிடித்துவிட்டது என்பதற்காக...இரண்டு வருஷமாய்க் காதலித்த ஒருத்தியை கை கழுவிவிட உங்களுக்கு எப்பிடி முடிஞ்சுது சுரேஷ்... எத்தனை கஷ்டங்கள் துன்பங்கள் வந்தாலும் காதலிச்சவளைக் கைவிடாமல் இருக்கிறதுதான் ஆண்பிள்ளைகளுக்கு அழகு... நீங்கள்... உங்களைப் போன்றவர்கள் வாழ்க்கையின் அவலட்சணங்கள்... சீதனம் என்கிற பேரிலை வாழ்க்கையை விபச்சாரக்களமாக்குகிறீர்கள்... உங்களையெல்லாம் மாலைபோட்டு மணவாளனாக்கிக் கொள்ளுற நேரம்... காலம்பூராவும் கன்னிகளாகவே வாழ்ந்திடலாம். கல்யாணத்துக்கு முன்பே உங்கட சுயஉருவத்தைக் காட்டினதுக்காக ரொம்ப தாங்ஸ்' அவள் அவனுடைய பதிலைக்கொஞ்சங்கூட எதிர்பார்க்காமல் வீதியில் இறங்கி நடக்கத் துவங்கினாள்.

(யாவும் கற்பனை) ★

சஞ்சீவி சிறுகதை

## பொது அறிவுப்போட்டி இல. 38

1. எலெக்ரோனிக் யுத்தத்தில் ஈடுபடும் நாடுகள் எவை? ... ... ... ... கியூபா–அமெரிக்கா / ரஷ்யா–ஜப்பான்.
2. ஒரு நாட்டின் தலைநகரம் மண்ணுக்குள் புதையுண்டு வருகிறது. அது எது...? ... ... ... பாங்கொக் / டோக்கியோ.
3. வாரத்தில் ஏழுநாட்கள் என்ற முறையைக் கொண்டுவந்தவர் யார்...? ... ... ... அலெக்சாந்தர் / நெப்போலியன்.
4. ரஷ்ய நாட்டு நாணயம் எது? ... ... ... ... ... ... ரூபிள் / பிராங்க்
5. கதகளி நாட்டியத்திற்கு பேர்போன மாநிலம் எது...? கேரளா / தமிழ்நாடு.
6. கடற்கரையில் மணலைக் குவிப்பது எது...? ... ... அலை / காற்று
7. சூரியனுக்குரிய நவமணி எது...? ... ... ... ... மாணிக்கம் / பவளம்
8. ''யாக்'' இன எருமைப்பாலின் நிறம் என்ன...? வெள்ளை / இளஞ்சிவப்பு.
9. இவருடைய பிறந்ததினம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது...? ... ... ... ... ... ... காந்திஜி / நேருஜி
10. இதுவும் பாட்டுப்பாடும்...? ... ... ... ... ... ... ... கொசு / குயில்
11. திரை உலகில் ஏழிசை மன்னர் என்று புகழப்பட்டவர் இவர்...? ... .. ... தியாகராஜபாகவதர் / டி. எம். சௌந்தரராஜன்.
12. தவளைகள் குதிக்கும் போட்டியை ஆண்டுதோறும் நடத்தும் நாடு எது...? ... ... ... ... சீனா / அமெரிக்கா.

பெயர்:- ..............................................

விலாசம்:- ..............................................

..............................................

பொது அறிவுப்போட்டி இல: 38
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

———— இங்கே வெட்டுக ————

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 2 – 05 – 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# பூமியைப் பாதுகாக்க...

● நாளை (ஞாயிறு) பூமி தினம்.

பூமியைப் பாதுகாக்க நாம் என்ன செய்யவேண்டும்?

நாளை உலகின் பல நாடுகளில் பூமியை அழிவில் இருந்து காப்பாற்ற மக்கள் இயக்கங்களை நடத்த உள்ளனர்.

அமெரிக்காவில் கான்ஸாஸ் நகரில் சூழல்பாதுகாப்புத் தொண்டர்கள் மரங்கள் மற்றும் மிருகங்கள் போன்று வேஷம் அணிந்து ஊர்வலமாக வருவர்.

இத்தாலியில் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் தொண்டர்கள் வரை வீதிகளில் படுத்து போக்குவரத்தால் சூழல்மாசு படுவதை உணர்த்துவர்.

பாகிஸ்தானில் பச்சைநிறப் பட்டியை கைகளில் அணிந்து பிரசாரம் செய்வர்.

ஜோர்தானில் விசேட முத்திரை ஒன்று வெளியிடப்படுகிறது.

பிரான்ஸில் சார்நிதி மேலாக பட்டங்களை பறக்கவிட்டு வளிமண்டலத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குவர்.

இப்படி உலகில் பல நாடுகள் எல்லாம் பூமி தினத்தைக் கொண்டாடப் போகின்றன.

## 'ஐசி'யின் மகத்துவம்

'ஐசி' யின் மகத்துவத்தை
அறியாதார் ஆருமில்லை
அன்னையர் பிள்ளைதன்னை
அன்புடன் வழியனுப்ப
'ஐசி' யைக் கொண்டுவந்து
அவரது பையில்வைப்பர்
பெண்டிலும் பிள்ளைதானும்
பிறவுள சொத்துயாவும்
'ஐசி'யின் பின்னால்தானே
அவசரம் ஆனபோதும்
'ஐசி'யை மறப்பாரில்லை
அன்புடன் கைப்பிடித்த
அழகிய மனைவிவந்து
அன்புள்ள அத்தான்நீங்கள்
யாரையும் மறந்திட்டாலும்
'ஐசி'யை மறக்கவேண்டாம்
ஆணையாய் கொள்ளுமென்பாள்
ஆருக்கும் இந்தநாளில்
ஆண்டவன் 'ஐசி' தானே
ஏஜென்சிக் காரன்கூட
எடுக்கிறான் 'ஐசி' தன்னை
வெளியினில் அனுப்புதற்கு
வேறு வேறு 'ஐசி' தானாம்
ஆளையே மாற்றிமாற்றி
ஆண்டையும் மாற்றிமாற்றி
கிழவனும் குமரனாக
கிடந்திடச் செய்யுமிந்த
'ஐசி'யைத் தொலைத்துவிட்டால்
ஐயகோ உயிரேபோச்சு
பேப்பரில் வருமென்றெண்ணிப்
பேய்மனம் பித்தாய்போச்சு
'ஐசி'க்கு அகிலமெங்கும்
அளவிலா மதிப்புஆச்சு.

— வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுநீதிகண்ட சோழனின் தீர்ப்பு தவறு; சென்னை மேல்நீதிமன்றத்தில் வழக்கு!

□ அந்த அரசனுக்கு அவன் ஒரே மகன்.

அவனுக்குப் பிறகு பட்டத்துக்கு வரப் போகிறவன் இவன்தான்.

இருந்தும், மகனின் தேர்ச் சக்கரத்தில் ஒரு கன்றுக்குட்டி ஓடி வந்து அகப்பட்டுக் கொண்டு உயிரை விட்டது என்பதற்காக, தன் மகன் மீது அரசன் தன் தேரைச் செலுத்தி அவனைக் கொல்கிறான்.

இப்படிச் செய்தவன் மனுநீதிச் சோழன் என்பது தெரிந்ததே.

இவன் செய்தது சரியா? தப்பா?

இக்கேள்வி கடந்தவாரம் சென்னையில் பட்டிமன்றம் ஒன்றிலும், சென்னை மேல் நீதிமன்றத்திலும் எழுப்பப் பட்டது.

முதலில் பட்டிமன்றத்தில் நடந்த வாதத்தை வாசியுங்கள்:

மனுநீதிச் சோழனின் அரசவைக்கு இந்த விஷயம் வந்தது.

கன்றுக்குட்டியைக்கொன்ற குற்றத்துக்கு வேறு தண்டனைகள் உள்ளன என்று அமைச்சர்கள் கூறினர்.

மனுநீதிச் சோழன் கேட்கவில்லை.

இடைச்சேரிக் கன்றுக்குட்டிக்கு மணித்தேரில் அரசகுமாரன் சென்ற தெருவில் என்ன வேலை? — என்று அமைச்சர்கள் கேட்டனர்.

'எதற்காகத் தேரில் இளவரசன் சென்றான்?'— என்று கேட்கிறார் அரசர்.

'கோவிலுக்குச் செல்ல'— என்று பதில் வருகிறது.

'கோவிலுக்கானால் ஏன் நடந்து செல்லவில்லை?' என்று சீறுகிறான் அரசன்.

'கன்றைப் பிரிந்து பசு எப்படிக் கண்ணீர் விடுகிறதோ, அதே மாதிரி என் மகனைப் பிரிந்து நான் கண்ணீர் விட வேண்டும். இக்குற்றத்துக்கு அதுதான் சரியான தண்டனை' என்கிறார் அரசர்.

இது சரியா, தப்பா?

பட்டிமன்றத்தின் நடுவர் புலவர் சுவாமிநாதன் தீர்ப்புக் கூறுகிறார்:

'கணவனை இழந்த கண்ணகி, பாண்டிய மன்னனிடம் தான் சோழநாட்டைச் சேர்ந்தவள் என்று கூறும்போது, மனுநீதிச்சோழன் பசுவுக்கு எப்படி நீதிவழங்கினான் என்பதை எடுத்துச் சொல்கிறாள்.

எப்பொழுது அவள் மனுநீதிச் சோழனை ஒரு முன் உதாரணமாகக் காட்டினாளோ, அதில் இருந்து மனுநீதிச் சோழன் செய்தது சரி என்றுதான் கொள்ள வேண்டும்'—

இப்படி நடுவரின் தீர்ப்பு அமைந்தது.

இனி சென்னை மேல்நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு பற்றிய விசாரணையைப் பார்ப்போம்.

டி. ஆர். சீனிவாசன் என்பவர் இந்த ரிட்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவில் கூறப்பட்டிருந்ததாவது;

'தேரில் அகப்பட்டு இறந்த கன்றுக்குட்டிக்குப் பதிலாகத் தனது மகன் மீது தேரை ஏற்றி மரணதண்டனையை நிறைவேற்றியதில் மனுநீதிச் சோழன் நீதியைச் சரியாகச் செய்யவில்லை.

எனவே 1988 இல் சென்னை மேல்நீதிமன்ற வளாகத்தில் நிறுவப்பட்ட மனுநீதிச்சோழன் சிலை உடனே அகற்றப்பட வேண்டும்.

பாடசாலை பாடவிதானத்தில் இருந்தும் இந்த அரசனைப் பற்றிய பாடம் நீக்கப்பட வேண்டும்'—

இப்படி ரிட்மனுவில் கோரப்பட்டிருந்தது.

மனுவை விசாரித்த நீதிபதி கே. பக்தவத்சலம் பின்னர் அதனை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கினார்.

அன்று மனுநீதிகண்ட சோழன் வழங்கிய தீர்ப்பு இன்று நீதிமன்றத்தில் வாதாடப்படும் விஷயமாகி விட்டதே! ★

## காந்திஜி ஒரு வியாபாரி?

□ காந்தியடிகள் புதுடில்லியில் தங்கியிருந்தார்.

அப்போது யாரோ ஒருவர் அவருக்கு ஐந்து றாத்தல் கோதுமை மாவை அனுப்பி இருந்தார்.

'மகாத்மாஜியின் சொந்த உபயோகத்திற்காக' என்று பார்சல் மீது அவர் எழுதியிருந்தார்.

காந்தியடிகள், அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமக்கு வந்த கோதுமை மாவை ஏலம் விட்டார்.

திருமதி பிரின்சிலால் நேரு, அதை நாற்பது ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார்.

பிறகு அவர் காந்தியடிகளைப் பார்த்து, 'இதை நான் என்ன செய்வது? என்று கேட்டார்.

அங்கிருந்த ஜி. டி. பிர்லா, 'இந்த மாவைக் கொண்டு ரொட்டி தயார் செய்து பாபுஜிக்கே அனுப்பி விடுங்கள்' என்று யோசனை சொன்னார்.

அதற்கு திருமதி நேரு. 'இது நல்ல யோசனைதான். ஆனால், பாபுஜி வியாபாரி



இனத்தவர் ஆயிற்றே! ரொட்டியையும் ஏலம் விட்டு, பணம் சம்பாதிக்க மாட்டார் என்று என்ன நிச்சயம்?' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

'மேதைகளின் நகைச்சுவை' என்ற நூலிலிருந்து.

## 14ஆவதாகப் பிறந்தவருக்கு 'பாரத ரத்னா' விருது

● பதினான்காவது குழந்தையாகப் பிறந்தவருக்கு 'பாரதரத்னா' விருது கிடைத்திருக்கிறது.

மலைக்காதீர்கள்! இந்தியாவின் சுதந்திர அரசியல் சாசனத்தைத் தயாரித்தவர் டாக்டர் அம்பேத்கார்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது சட்ட அமைச்சர் பதவியை இவர் வகித்தார்.

சமூக சீர்திருத்தத்துக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த டாக்டர் அம்பேத்கார், இந்துமதம் குறித்து பல சீர் திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

அரசுவட்டாரங்கள் அதற்கு ஆதரவாக இல்லை என்பதை அறிந்ததும், அவர் இந்து மதத்தை விட்டு பௌத்த மதத்தில் சேர்ந்தார்.

ஹரிஜன குடும்பத்திலே பதினான்காவது குழந்தையாகப் பிறந்த டாக்டர் அம்பேத்காருக்கு கடந்தவாரம் இந்திய அரசு 'பாரதரத்னா' விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

அம்பேத்கார் இறந்த பின்னரே இக்கௌரவம் கிடைத்துள்ளது. ★

# தாடியின் எழுச்சியும் வீழ்ச்சியும்!

□ மனிதன் தனது தாடியை வெற்றி கொண்ட காலம் இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன் எனலாம்.

ஆதிகாலக் குகை ஓவியங்களில் முற்றாகத் தாடியை மழித்த உருவங்களையே காணுகின்றோம்.

கடற்சிப்பிகளும் கூரிய சுறாமீன்பற்களுமே ஆதிமனிதனின் சவரப்பிளேட்டுகளாயின.

வரலாற்று வளர்ச்சியில் தாடியானது பல்வேறு உருவங்களையும், நீளங்களையும் கண்டிருக்கிறது.

எகிப்திய ஆடவர் தம் தாடியை செயற்கையாகச் சுருள் செய்வதிலும், சாயமூட்டுவதிலும், தங்கக்கவசமிடுவதிலும் ஆர்வம் காட்டினர்.

கிரேக்கர்கள் நெளிவான தாடியை விரும்பினர். குறுந்தாடி வைத்துக்கொண்டவர்கள் உரோமர்கள்.

தனிமனித வாழ்க்கையில் எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்படுவது போல தாடியின் வரலாற்றிலும் வளர்ச்சியும், வீழ்ச்சியும் காணப்பட்டு வந்துள்ளது.

மகா அலெக்சாந்தர் தனது போர்வீரர்களை தாடியை சவரம்செய்யும்படி கட்டளையிட்டது அழகுக்காகவோ, உடல்நலத்துக்காகவோ அல்ல, பகைவனுடன் போரிடும்போது தாடி அவன் பிடிக்குள்ளாகக் கூடாதென்பதற்காகவே.

13 ஆம் நூற்றாண்டுவரை தாடியற்ற முகங்களுக்கு உரோமாபுரியில் பெரும் புகழ் கிடைத்தது.

வீழ்ச்சியுற்ற தாடி 17 ஆம் நூற்றாண்டில் மீண்டும் எழுச்சிபெற்றது.

ஆங்கில நாட்டு ஆடவர் தமது தாடியைச் சுருள் செய்வதிலும், பசைபூசுவதிலும், வாசனையூட்டுவதிலும் அதிக நேரம் செலவிட்டனர்.

தான் தாடிவளர்க்க முடியாத பிரான்ஸ் நாட்டு லூயி மன்னன் தன் பிரசைகள் தாடி வளர்ப்பதைத் தடைசெய்தான். ரஷ்யாவின் மகா பீற்றர் தண்டனையும் விதித்தான்.

இவ்வாறு நலிவுற்ற தாடி இங்கிலாந்தின் கடற்போர்க் காலத்திலும், அமெரிக்க உள்நாட்டுப் போர்க்காலங்களிலும் செழிப்புற்று வளர்ச்சி கண்டதாக வரலாறு கூறுகிறது.

'கிலெட்' என்ற விற்பனையாளன் அமெரிக்க போர் வீரர்களுக்கு நாள்தோறும் சவரம் செய்யும்படி கிலெட் சவர அலகுகளைக் கொடுத்தான்.

அதன் பின் பல்வேறு வகையான பிளேட்டுகள் விற்பனைக்கு வந்தன. இத்துடன் தாடியின் கதையும் முடிந்ததெனலாம். வீழ்ச்சியுற்ற தாடி திரும்பவும் எழுந்திருக்கவேயில்லை.

—தகவல்: வி. எஸ். பி-

# பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

## உங்களுக்குத் தெரியுமா?

★ முதன்முதலாக விண்வெளிக்கு நாயை அனுப்பிய நாடு 'ரஷ்யா'.

★ ஜூலை மாதம் 4 ஆம் திகதி சுதந்திரதினம் கொண்டாடும் நாடுகள் ஆப்கானிஸ்தான், அமெரிக்கா, பிலிப்பீன்ஸ் ஆகியவையாகும்.

★ மலேரியாக் காய்ச்சல் வந்தால் உடலில் மண்ணீரல் பாதிக்கப்படுகிறது.

★ மின்சாரத்தின் வேகம் வினாடிக்கு 27 ஆயிரம் மைல்களாகும்.

★ மனித உடலில் உள்ள இரத்தத்தின் அளவு 200 அவுன்ஸ் ஆகும். ★

## நல்லாசிரியர் உருவாக்கும் வல்லவர்கள்

□ ஒரு மன்னன் தன் ஒரே புதல்வனை அறிஞரிடம் அழைத்து வந்தான்.

''அவனுக்கு இனி சகலமும் நீங்களே! இந்த உலகம் வியக்கும் ஒரு சாதனையாளனாக இவனை தாங்கள்தான் உருவாக்கித் தரவேண்டும்'' என்றான்.

மன்னன் மகனை மாணாக்கனாக ஏற்று, அவனை உலக மாவீரனாக உருவாக்கித் தந்தார் அந்த அறிஞர்.

அந்த மாணாக்கன்தான் உலகம் போற்றிய மாவீரன் அலெக்சாந்தர்.

அந்த அறிஞர்தான் உலக மகா அறிஞர் அரிஸ்டோடில்.

வல்லவர்கள் உருவாக நல்லாசிரியர்கள் அமைய வேண்டும் அல்லவா! ★

## 'கோர்பி' கூட்டும் செய்தியாளர் மாநாடு

□ அமெரிக்கப்பாணி ஜனாதிபதி பத்திரிகை அலுவலகம் ஒன்றை மாஸ்கோவில் திரு. கோர்பச்சேவ் திறந்திருக்கிறார்.

வாரம் இரு தடவை பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்படும்.



கோர்பச்சேவ்

எந்தக் கேள்வியையும் பத்திரிகையாளர் கேட்கலாம்.

அனைத்துக்கும் கோர்பச்சேவ் பதிலளிப்பார். ★

## நிஜமான உலகம் சொர்க்கத்தில்

□ கிரேக்க அறிஞர் பிளேட்டோ.

இவரின் வாதப்படி நிஜமான உலகத்தை இறைவன் படைத்தது சொர்க்கத்தில் தான்!

இங்கே மனிதர்கள் கண் எதிரில் காண்பது எல்லாம் அந்த நிஜ உலகத்தின் வெறும் நிழலைத்தான்.

எனவே இந்த மண்ணுலகும் மற்றும் இங்குள்ள கடலும், மலையும், செடியும் கொடியும், மனிதர்களும் நிஜத்தின் பிரதிபலிப்பே தவிர நிஜமில்லை என்றார் பிளேட்டோ. ★

# கலியுகத்தின் ஆயுள் 432,000 ஆண்டுகள்

● கலியுகத்தின் ஆயுள் தெரியுமா?

கலியுகம் 4 லட்சத்து 32 ஆயிரம் வருடங்களைக் கொண்டது.

த்வாபர யுகம் 8 லட்சத்து 64 ஆயிரம் வருடங்களைக் கொண்டது.

த்ரேதாயுகம் 12 லட்சத்து 96 ஆயிரம் வருடங்களைக் கொண்டது.

க்ருதயுகம் 17 லட்சத்து 28 ஆயிரம் வருடங்களைக் கொண்டது.

இந்த நான்கு மாசயுகங்களும் சேர்ந்த ஒரு மகாயுகம்.

ஆயிரம் மகா யுகங்களைக் கொண்டது பிரம்மாவின் ஒரு பகல்.

இதே மாதிரி ஆயிரம் மகா யுகங்களைக் கொண்டது அவருக்கு ஓர் இரவு.

அதாவது 432 கோடி ஆண்டுகள் கொண்டு பிரமாவின் ஒரு பகல். இதே அளவைக் கொண்டதுதான் அவரது ஓர் இரவும்.

— ஜெயேந்திர ஸ்வாமிகள்

# மறக்காதீர்கள்; மன்னியுங்கள்!

## அதிபர் புஷ் புத்திமதி

□ மறக்காதீர்கள்; ஆனால் மன்னியுங்கள்!

ஈஸ்டர் பண்டிகையின் போது அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்த உபதேசமே இது.

ஈஸ்டர் பண்டிகை மன்னிப்பதற்குரிய காலம்.

மன்னிப்பதில் நம்பிக்கை உள்ளவர்களில் நானும் ஒருவன்.

மனப்புண்ணை ஆறப்படுத்தும் காலமும் ஈஸ்டரே.

நாஸி படுகொலைகளைப் புரிந்ததற்காகக் கிழக்கு ஜேர்மனை மன்னிக்கவேண்டும்.

ஆனால் அதற்காக மறக்க வேண்டும் என்பது அல்ல.

இப்படி அதிபர் புஷ் கூறினார். ★

# குருஷேவின் சப்பாத்தை வைத்து ஐ. நா. நடத்தும் கண்காட்சி

● ஸ்ரீராமனின் பாதுகையை வைத்து அயோத்தியில் ஆட்சி நடத்தினான் பரதன்.

இது நாம் அறிந்ததே.

ஆனால் உலகத் தலைவராக இருந்த ஒருவரின் சப்பாத்துக்களை வைத்து கண்காட்சி ஒன்றை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நடத்துகிறது.

அது யாருடைய சப்பாத்துக்கள் என்பதை அறிய ஆவலாக இருக்கிறதா?

30 ஆண்டுகளுக்கு முன்னர்.....

சோவியத் தலைவராக இருந்தவர் நிகிடா குருஷேவ்.

அச்சமயம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் அவர் உரை நிகழ்த்தச் சென்றிருந்தார்.

ஐ. நா. சபையில் பேசிக்கொண்டிருந்தபோது குருஷேவுக்கு ஒரு கட்டத்தில் ஆத்திரம் வந்தது.

கால்களில் கிடந்த சப்பாத்துக்களைக் கழற்றி எடுத்து மேசைமீது அடித்தார்.

அந்தச் சப்பாத்து ஜோடி ஐ. நா. சபையின் ஓர் அறையில் பாதுகாப்பாக இருந்து வருகிறது.

ஐ. நா. சபையில் அமைக்கப்படும் கண்காட்சியில் இச்சப்பாத்துக்கள் வைக்கப்படுகின்றது.

விரைவில் இக்கண்காட்சி திறக்கப்பட இருக்கிறது. ★

## 'கல்கி' அவதாரம் எப்போது தோன்றும்?

□ திருமாலின் பத்தாவது அவதாரமான 'கல்கி' எப்போது அவதரிப்பார் என்பதை விஷ்ணு புராணம் இவ்வாறு கூறுகிறது.

சமூகத்தில் சொத்து மட்டுமே உயர் நிலையைக் கொடுக்கும். பொருட்செல்வம் மட்டுமே நற்பண்புக்கு மூலமாகும். காமம் ஒன்றே கணவன் – மனைவியை இணைக்கும் கட்டமாகும். பொய்மை வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணமாகும். பால் உணர்ச்சியே இன்பத்துக்கு ஒரே வழியாகும். வெளிப்படையான அலங்காரங்களே அகச் சமயமென்று குழப்புவார்கள் — இத்தகைய நிலை முற்றும் போது கல்கி அவதாரம் எடுப்பார்! ★

## கொம்பியூட்டருக்கு தடுப்பூசி!

□ கொம்பியூட்டர்களை தாக்கக்கூடிய 66 விஷக்கிருமிகள் (வைரஸ்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்கிருமிகள் தாக்குவதால் கொம்பியூட்டர்கள் பழுதடைகின்றன.

இக்கிருமிகள் தொற்றாமல் இருப்பதற்கான தடுப்பூசி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளது.

இது கொம்பியூட்டரைத் தாக்கும் அனைத்துக் கிருமிகளையும் அழித்துவிடக் கூடியது.

யூகோஸ்லேவியா நாட்டின் தலைநகர் பெல்கிரேட்டில் கொம்பியூட்டர் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

அங்கு கொம்பியூட்டருக்கான தடுப்பூசித் திட்டம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. ★

# கெரில்லாக்களைப் பாதுகாக்க உலகில் ஒரு 'போராட்டம்'!

● அபூர்வமான ஆபிரிக்கக் கெரில்லாக்களைப் பாதுகாக்கும் பணி வெற்றியளித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ரகக் கெரில்லாக்கள் உலகில் எண்ணூறுதான் உள்ளன.

இதில் அரைப்பங்குக்கு அதிகமானவை உகண்டா நாட்டில் உயரமான மலைப்புறங்களில் வாழ்கின்றன.

ருவாண்டா, ஸயாரோ நாடுகளில் இவை வாழ்கின்றன.

'பனிப்புகார்களிடையே கெரில்லாக்கள்' என்ற ஆங்கிலப்படம் வெளியானதைத் தொடர்ந்து ருவாண்டாவில் உள்ள கெரில்லாக்களைக் காண உல்லாசப் பயணிகள் அங்கு படை எடுத்தனர்.

இந்த மலை கெரில்லாக்களைப் பார்க்க உல்லாசப் பயணிகளுக்கு உகண்டா அரசு ஊக்கமளிப்பது இல்லை.

வெளிநாடுகளில் உள்ள மிருகக்காட்சிச் சாலைகளுக்கு ஏற்றுமதி செய்வது, சுட்டுக் கொல்வது போன்ற நடவடிக்கைகளால் கெரில்லாக்களின் எண்ணிக்கை குறைந்து வந்தது.

ஒரு கட்டத்தில் ஆக 150 கெரில்லாக்களே உகண்டாவில் இருந்தன.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதன் காரணமாக, இப்போது நான்கு வருடங்களில் 450 ஆக அதிகரித்து உள்ளது. ★

# கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான தூரம்!

□ கடவுளுக்கும் நமக்கும் இடையே தூரம் எவ்வளவு தெரியுமா?

தெரியாவிட்டால் சுவாமி சின்மயானந்தர் கூறியதை வாசியுங்கள் இதோ:–

என்னுடையது என்று எதையெல்லாம் நீங்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களோ அதையெல்லாம் வரிசையாக எழுதுங்கள்.

பேனா, புடவை, ரிப்பன், அழகு என்று எழுதிக் கொண்டே போங்கள். ஒன்றைக் கூட விடாதீர்கள்.

பட்டியல் எவ்வளவு நீளம் வருகின்றதோ, அவ்வளவு தூரம் தான் கடவுளுக்கும் நமக்கும் இடையே உள்ள தூரமாகும்.

பட்டியல் பெரியதாக இருந்தால் தொலைவும் பெரிது. குறைவானதாக இருந்தால் இடைவெளியும் சிறியதுதான்.

என்னுடையது என்கிற எண்ணம் குறையக் குறைய கடவுளை நாம் நெருங்குகிறோம் என்று அர்த்தம்' ★

# 'விண்வெளி'த் தக்காளிப்பழம் உடலுக்கு நல்லதா?

□ விண்வெளியில் ஆறு ஆண்டு காலம் சஞ்சரித்த ஒன்றரைக் கோடி தக்காளி விதைகள் அமெரிக்க நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டமை தெரிந்ததே.

அவ்விதைகளில் இருந்து முளைத்த தக்காளிச் செடிகள் இப்போது காய்க்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்கப் பாடசாலைத் தோட்டங்களில்

இத்தக்காளிப் பழங்கள் உடலுக்கு நல்லதா கூடாதா? என்ற வாதப் பிரதிவாதம் இப்போது அமெரிக்காவில் நடந்துகொண்டு இருக்கிறது.

பாடசாலைப் பிள்ளைகள் இத்தக்காளிப் பழங்களை உண்ணலாம்; பயப்படத் தேவை இல்லை'' — இப்படிக் கூறியிருக்கிறார் நாஸா பேச்சாளர் கென்னத் பெடேர்லன்.

''அப்பழங்களைச் சாப்பிட எனக்கும் ஆசையாக உள்ளது''— என்றும் அவர் கூறுகிறார்.

விண்ணில் அத்தக்காளி விதைகள் சஞ்சரித்தபோது அவை கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பது அமெரிக்க விவசாய நிபுணர்களின் கருத்து.

இத்தக்காளி விதைகள் 'சலஞ்சர்' விண்கலம் மூலம் 6. 04. 1984 இல் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி 'கொலம்பியா' விண்கலம் மூலம் அத்தக்காளி விதைகள் மீண்டும் பூமிக்குக் கொண்டுவரப்பட்டன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# இலங்கை பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படை ரீதியான பலவீனங்கள்

### வேலையில்லாத் திண்டாட்டம்

குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் வேலையின்மையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க தவறியமை கைத்தொழிற்துறையின் மோசமான செயற்பாட்டின் வெளிப்பாடாகும். தொழில் வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதில் கைத்தொழில் வளர்ச்சி சுறுசுறுப்பான பங்களிப்பை வழங்க தவறிவிட்டது.

1986இல் நாட்டில் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தோரில் 19 சதவீதத்தினர். மட்டுமே ஏதோ ஒரு வகையில் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாக காணப்பட்டனர் இப்பொழுது வேலை இல்லாதோரின் எண்ணிக்கை 12 இலட்சமாகக் காணப்படுவதாக அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது.

இது நாட்டின் மொத்த தொழிற்படையில் (Total Labour force) 18 – 20 சதவீதத்திற்குச் சமமானதாகும். வேலையற்றவர்களில் பலர் குறைந்தபட்சம் Minimum) இடைநிலைப் பாடசாலைக் கல்வியையாவது பெற்றவர்களாக இருந்தனர்.

எனவே அவர்களைப் பயிற்றுவிப்பது எளிதானதாகும். நவீன தொழில் முயற்சிச் சூழலுக்கேற்ப அவர்கள் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியவர்களுமாவார்கள்.

### மூலதனச் செறிவு

அத்துடன் வேலையற்ற இளைஞர்கள் ஏதோ ஒரு வகைக் கைத்தொழில், தொழில்நுட்ப, உயர் தொழில் வாய்ப்புக்களிலேயே பெரிதும் நாட்டமுடையவர்ளாகவும் உள்ளனர். கைத்கதாழில் வளர்ச்சி மட்டுமே இத்தகைய அவாவை பூர்த்தி செய்யும் வழிமுறையாகததும் இவ்வேலை வாய்ப்புக் அமையக் கூடியதாகும்.

மறுபுறத்தில் விவசாயத் துறை மூலம் குறிப்பாகப் பாசன வசதி கொண்ட நெற்செய்கை ஊடாகவே வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வு காணப் பல்லாண்டு காலமாக அரசாங்கங்கள் முயற்சித்து வந்துள்ளன.

மூலதனச் செறிவு (Capital Intensive) கொண்ட நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்திட்டங்களுக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. கடந்த தசாப்தத்தில் மகாவலி அபிவிருத்தி செயற்திட்டம் அரசாங்க முன்னோடித் திட்டமாக அமைந்தது.

எத்தகைய வேறு நலன்களைப் பெறுக் கொள்ள முடிந்த போதிலும் இத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள பாரிய தொகையுடன் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புக்களை ஒப்பிடும்போது சாதகமற்ற ஓர் முடிவையே காண முடிகின்றது.

1980 களின் பிற்பகுதியும் 1970 களின் முற்பகுதியும் இத் திட்டத்தின் நிர்மாணக் காலப்பகுதியாகும். இக் காலப்பகுதியில் பெருந்தொகையான வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன என்பது என்னவோ உண்மை தான் ஆனால் இவ்வாறு உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புக்கள் தற்காலிகமானவையாக மட்டுமே அமைந்தன. நிர்மாணச் செழிப்புக்காலம் முடிவடைந்ததும் இவ்வேலை வாய்ப்புக்களும் அருகி விட்டன.

### மகாவலி அபிவிருத்தித் திட்டம்

விரைவு படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செயற் திட்டத்தால் (The Accelarated Mahavely Development Programme) 1987 அளவில் 55000 வேலை வாய்ப்புக்கள் உருவாக்கபட்டிருந்தன. என உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

இத்திட்டத்திற்கு ஏற்பட்ட முதலீட்டுச் செலவீனம் 4400 கோடி ரூபாவாகும். இவற்றை ஒப்பிடும்போது மிக அதிகமான பணச் செலவைச் செய்தே புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடிந்தது என்பது தெளிவாகின்றது.

இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு ஒவ்வொன்றுக்கும் 8 லட்சம் ரூபா முதலீட்டுச் செலவீனம் ஏற்பட்டுள்ளது, அத்துடன் நாட்டில் வேலையற்றிருப்பவர்கள் என மதிப்பிடப்பட்டவர்களின் 5 சதவீதத்தினருக்குக் குறைவானவர்களுக்கு மட்டுமே இத் திட்டம் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கித் தந்துள்ளது. எனவே வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதில் மகாவலித் திட்டம் செலவு மிக்க ஒரு செயற்பாடாகவே அமைந்தது.

அதிகமான மூலதனச் செலவுகளை ஏற்படுத்துவதுடன் அமையாது நிலவளம் அருகிக் காணப்படும் நிலையானது நீர்ப்பாசனம். காணி அபிவிருத்தி குடியேற்றத் திட்டங்கள் என்பவற்றின் ஊடாக வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்குக் கடுமையான வரையறைகளை விதிப்பதாக உள்ளது.




பொருளாதாரத்திற்குத் தேவைப்படும் சுறுசுறுப்பை வழங்கக்கூடிய முன்னோடித் துறையாக கைத்தொழில் துறை அமையத் தவறுமாயின் எதிர்வரும் ஆண்டுகளிலும் வேலையின்மை அதிகரித்துச் செல்லுமென எதிர்பார்க்கலாம்.

### வெளிநாட்டு மூலவள இடைவெளி (FOREIGN RESOURCES GAP)

நீண்டகாலமாக தொடர்ச்சியாகக் காணப்பட்டு வரும் பாரிய அன்னிய மூலவள இடைவெளி அமைப்பு ரீதியான பலவீனத்தில் மற்றுமொரு முக்கிய வெளிப்பாடாகும்.

ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் மயமாக்கல் மிக ஒடுங்கிய தளத்தைக் கொண்டதாகவே வகுக்கப்பட்டுள்ளது.

அனேகமாக தைத்த ஆடைக் கைத்தொழிலைச் சார்ந்ததாகவே இக் கைத்தொழில் மயமாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆடைக்கைத்தொழில் குறைவான சேர்க்கப்படும் (Added Value) பெறுமதியை மட்டும் கொண்டிருப்பதனால் அன்னிய மூலவளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதனால் அதிகளவு பங்களிப்பினை வழங்க முடியாதுள்ளது.

1985–1988 காலப்பகுதியில் இறக்குமதிகள், சேவைகள் மூலதன மீளளிப்பு என்பவற்றை உள்ளடக்கிய வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் ஏற்றுமதிகள், சேவைகள் தனியாரின் பணம் அனுப்புதல் என்பவற்றை உள்ளடக்கிய வெளிநாட்டு பெறுவனவுகளைவிட ஆண்டு ஒன்றுக்கு 3300 கோடி ரூபாவால் (100 கோடி அமெரிக்க டொலர்) அதிகரித்துக் காணப்பட்டது. சராசரியாகப் பெறுவனவுகளின் 1.5 மடங்காகக் கொடுப்பனவுகள் அமைந்திருந்தன.

### பிறநாட்டுக் கடன்கள்

பிறநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த இடைவெளியின் பெரும் பகுதி நிரப்பப்பட்டது. இதனால் நாட்டின் தீர்க்கப்படாத பிறநாட்டுக் கடன்களின் அளவு 1988 இன் முடிவில் 16254 . 8 கோடி ரூபாவாக (கிட்டத்தட்ட 500கோடி அமெரிக்க டொலர்) அதிகரித்தது. இது அந்தஆண்டின் ஏற்றுமதி சம்பாத்தியங்களில் 3.5 மடங்காகும்.

உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதத்திற்குச் சமமானதாகும். தலைக்குரிய அடிப்படையில் பார்க்கும்போது 1988 இல் ஒவ்வொரு குடிமகனும் 12000 ரூபாவை தலைக்குரிய வருமானமாகப் (Per Capita Income) பெற்ற வேளையில் ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாவுக்குச் சமமான பிறநாட்டுக் கடன்கள் பெறப்பட்டிருந்தன.

ஏற்றுமதிகளைப் பெருக்கி உறுதியான அடித்தளமொன்றை நிறுவிக் கொள்வதை விடுத்து வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்வதனாலேயே தாராள மயமாக்கப்பட்ட பொருளாதாரம் தாக்குப்பிடித்து வந்தது.

1988 இல் கடன்சேவை சம்பாத்தியத்தின் 29 சதவீதம் வரை உயர்ந்திருந்தது. இத்தகைய போக்கு நீண்டகாலத்தில் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பிறநாட்டுக் கடன்கள் உதவிகள் என்பவற்றின் உட்பாய்ச்சலுக்கு சமாந்தரமாக அந்நிய மூலவளங்களின் பெரும்பகுதி கடன் தவணைப் பணம், வட்டி என்பவற்றுக்சாக (கடன் சேவை) வெளிநாடுகளுக்குச் செலுத்தப்படுகின்றன. வெளிநாட்டு உதவிக் கட்டுப்பாடுகளுக்கு ஏறத்தாழச் சமமான மட்டத்தைச் கொண்டதாகக் கடன் சேவைக் கட்டுப்பாடுகள் (Loan Service Control) தற்போது காணப்படுகின்றன. இவ்வகையில் வெளிநாட்டு உதவிப் பாச்சல் ஊடாக நாட்டின் வெளிநாட்டு மூலவளத்தின் நிகர அதிகரிப்பு மொத்தவெதுவாகக் குறைந்து சென்றுள்ளது.

### வெளிநாட்டுச் சொத்துக்கள்

நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பாரிய நெருக்குதல்களுக்கு உட்படுத்தப் பட்டமையால் தொடர்ச்சியாக நாலாண்டுகளாக (1985 – 1988) வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைதல் தவிர்க்க முடியாததாகி விட்டது.

1986 இல் எமக்கு நான்கு மாதங்களுக்குத் தேவையான இறக்குமதிகளைச் செய்வதற்குப் போதியதாக இருந்த மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1989 இன் ஆரம்பத்தில் 2½ மாதங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் அளவுக்கு வீழ்ச்சியுற்றது.

1989 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியிலும் வெளிநாட்டுச் சொத்துக்கள் மீதான நெருக்குதல் தொடர்ந்து நிலவியது போலத் தென்படுகிறது.

பேரண்டப் பொருளியல் (Macro Economic) சமமின்மைகளைத் திருத்துவதற்கு அரசாங்கம் தவறியமையைத் தொடர்ந்து சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் (I. M. F) வெளிநாட்டுக் கடன்களை வழங்குவதை இடைநிறுத்தம் செய்தது.

இதனால் எமது வெளிநாட்டு நிதி நெருக்கடி மேலும் மோசமடையும். இந் நிகழ்வுகள் அடிப்படையில் தொக்கி நிற்கின்ற அமைப்பு ரீதியான பலவீனங்களினதும் அரசியலில் காணப்படும் உறுதிப்பாடற்ற நிலையினதும் வெளிப்பாடுகளாகும்.

(முற்றும்) ★

- வே. சண் பி. பி. ஏ. (இலங்கை) -

# கிரிக்கெட் பிறந்த கதை!

பதினொரு முட்டாள்கள் ஆடுவதை பதினோராயிரம் முட்டாள்கள் வேடிக்கை பார்க்கின்றனர் என பெர்னாட்ஷா ஒருமுறை கிரிக்கெட் ஆட்டத்தை பற்றி கூறினார்.

ஷா கூறியது எந்த அர்த்தத்தில் என்றாலும் மிகப்பெரிய ரசிகர் கூட்டத்தை கட்டிப்போட்டு வைக்கும் ஆற்றல் கிரிக்கெட்டுக்கு உண்டு என்பதை அவர்கூற்றே நிரூபிக்கிறது.

உலகமெங்கும் விளையாடப்படும் கிரிக்கெட் இன்று நமது நாட்டில் நகரங்களில் மட்டுமன்றி சிறுசிறு கிராமங்களிலும் பேரார்வத்துடன் ஆடப்பட்டு வருகிறது.

மிகப்பெரிய ரசிகர் கூட்டங்களை வைத்திருக்கும் சினிமா நட்சத்திரங்கள் கூட தாங்கள் கிரிக்கெட் வீரர்களின் ரசிகை என்று கூறிக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறார்கள்.

இப்பேர்ப்பட்ட கிரிக்கெட் விளையாட்டு தோன்றி வளர்ந்த கதை தெரியுமா உங்களுக்கு.

### தாயகம்

கிரிக்கெட் ஆட்டத்தின் தாயகம் இங்கிலாந்து.

இந்த விளையாட்டு 12 ஆம் நூற்றாண்டில் ஆடப்பட்டதற்கு சரித்திர பூர்வ ஆதாரங்கள் உள்ளன.

இங்கிலாந்தின் பிரபுக்கள் தங்கள் உடலில் வெய்யில் பட வேண்டும் என்பதற்காக ஆடத்துவங்கியஆட்டம் இது.

ஏறக்குறைய 17 ஆம் நூற்றாண்டு வரை இத்த விளையாட்டு ஒரே மாதிரியாகத் தான் ஆடப்பட்டு வந்தது.

1120 – 30 இல் ''லைப் ஆப் குத்பர்ட்'' என்ற நூல் இங்கிலாந்தில் எழுதப்பட்டது.

அதில் கிரிக்கெட் பற்றி எழுதப்பட்டுள்ளதாவது;–

''குத்பர்டின் மகன் விளையாடிக் கொண்டிருந்தார் வளைந்த மட்டையை வைத்து ஒரு பந்துடன் தன் சகதோழர்களுடன் ஆடிக் கொண்டிருந்தார்'' என்று அதில் எழுதப்பட்டுள்ளது. அதற்கான படமும் போடப்பட்டு உள்ளது.

அப்போதைய கிரிக்கெட் ஸ்டம்ப் இரண்டு குச்சிகள் தான்.

இரண்டு குச்சிகளுக்கும் மேலை ஒரு சவுக்கு கட்டை பந்து வீசுபவர்கள் மேல் நோக்கி வீசக் கூடாது, கீழே உருட்டித்தான் (அண்டர் ஆர்ம்) வீச வேண்டும்.

அப்போதிலிருந்தே இங்கிலாந்தில் பரபரப்பாக கிரிக்கெட் ஆட்டங்கள் பரவ ஆரம்பித்து விட்டன. 17 ஆம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவையும் இந்த ஆட்டம் கவர்ந்தது.

### முறையான கிரிக்கெட்

ஆனால் தற்போதைய முறையான கிரிக்கெட் ஆட்டத்துக்கு வித்திட்டவர் என்றால் அது சர். டபிள்யூ. ஜி. கிரேஸ்.

1780 இல் இங்கிலாந்தில் தொழிற்சாலைகள் சட்டம் சனிக்கிழமைகளில் அரைநாள் ஓய்வு அளித்தது.

இதுதான் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. அப்போதுதான் முதன் முதலாக பந்து உயரே தூக்கி வீச அனுமதிக்கப்பட்டது.

அரைக்கால் சட்டையும் முழு வெள்ளை கை சட்டையும் அப்போது வீரர்கள் அணிந்திருந்தனர்.

1785 இல் முதன் முதலாக மூன்று ஸ்டம்புகள் அனுமதிக்கப்பட்டன. முதல் கிரிக்கெட் சட்டம் நடைமுறைக்கு வந்ததும் அப்போதுதான் 1847 இல் முதல் இங்கிலாந்து கிரிக்கெட் அணி உருவாக்கப்பட்டது.

அப்போது கிரிக்கெட் ஆடுபவர்கள் கறுப்பு தோல் சப்பாத்தும் நீளமான தலைப்பாகையும் கழுத்தில் கைக் குட்டையும் கட்டி இருக்க வேண்டும் என்று சட்டம் உருவாக்கப்பட்டது.

1864 இல் 15 வயது இளைஞராக டபிள்யூ. ஜி. கிரேஸ் கிரிக்கெட் ஆட வந்தார்.. அதிலிருந்து 40 ஆண்டுகள் கிரிக்கெட் வளர்ச்சிக்கான பணிகளில் பெரும்பான்மையான இடத்தை கிரேஸ் பெற்றுக் கொண்டார்.

1870 இல் கிரேஸ் 5 சதங்கள் அடித்தார். 1885 இல் முறையான மெல்போர்ன் கிரிக்கெட் கமிட்டி (எம்.சி.சி.) உருவாக்கப்பட்டது. நடைமுறை சட்டங்கள் இயற்றப்பட்டன. ★




## உலவிப் போக வந்தாயோ...?

உலக மெங்கும் கதிர்வீசி
உயர்ந்த அழகில் வருமதியே!
இலங்கு முந்தன் நல்லுருவில்
இயன்ற புதுமைகள் கண்டிடுவோம்!

பாலர் நாங்கள் களிகொண்டே
பாட்டுப் பாடி மகிழ்ந்திடுவோம்
நிலவா முந்தன் நல்லொளியில்
நாங்கள் மூழ்கி களித்திடுவோம்!

சோலையில் உன்னொளி வீசிடவே
சுந்தரப் 'பூ' முகை தானவிழும்
நீலக் கவிஞர் நிறவண்டும்
நெருங்கி அங்கே விருந்துண்பார்!

பாலுந் தேனும் புளித்திடவே
பாட்டு ராகம் பயின்றிடுவார்
கோலப் பறவை கேட்டங்கே
கொள்ளை இன்பில் உறங்கிடுமாம்!

உலகில் இறைவன் உன்னொளியை
ஒன்றாய்த் திரட்டிப் பந்தாக்கி
நீலவானில் உருட்டி விட
தண்ணொளி வீசி வந்தாயோ?

நிலவுத் தமிழின் தேனினிமை
நினைவில் தோன்ற நீயிங்கே
உலவிப் போக வந்தாயோ
உண்மை அறியோம் சொல்லாயோ?

- செல்வி பூங்கொடி அருளம்பலம்

# கார்ல்மார்க்ஸ் வாழ்வில்....

இன்று மனித இனம் தலை நிமிர்ந்து வாழ வழி வகுத்துத் தந்த கார்ல்மார்க்ஸ் அன்று எத்தனையோ இன்னல்களில் சிக்கினார்.

வறுமை அவரை வாட்டி எடுத்தது. இல்லாமை அவரைப் பிழிந்தெடுத்தது.

1862 – ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டிலே ஒரு பிரபல வழக்கு நடைபெற்றது. அதில் நடந்த வாதப் பிரதிவாதங்களைப் பற்றியும், சட்டப் பிரச்சினைகள் பற்றியும் சிறந்த நூல் ஒன்றை வெளியிட கார்ல் மார்க்ஸ் விரும்பினார்.

அப்படிப்பட்ட வழக்குச் செய்திகளை உள்ளது உள்ளபடி எழுதித் தருவதுதான் மக்களுக்குப் பயன்தரும் என்பது அவர் கருத்து.

ஆனால் அன்[illegible] நிலைமையில் காகிதம் [illegible]க் கூட மார்க்ஸிடம் பணமில்லை.

உள்ளம் எழுதத் தூண்டியது. பொருளாதாரம் கையைக் கடித்தது. என்ன செய்யலாம் என்று சிந்தித்தார்.

சட்டெனத்தான் வைத்திருந்த மழைக்கோட்டை விற்றார். காகிதம் வாங்கினார். அல்லும் பகலுமாக அந்த அரிய நூலை எழுதினார்.

வறுமை அப்படி வாட்டியும் அந்த அரிய நூலை எழுதத் தம்மிடம் இருந்த மழைக் ''கோட்'' உதவியதே என்று எண்ணிப் பெருமை கொண்டார் கார்ல் மார்க்ஸ்.

தத்துவம் பிறக்க அந்த [illegible] காரணமாக இருந்தது.

# குழந்தைகளுக்கு தீங்கு இழைப்பவர் யார்?

நமது குழந்தைகளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார் என்று பெருமைப்பட்டுக் கொள்கிற பெற்றோர் உண்மையில் குழந்தைகளுக்குத் தீங்குதான் இழைக்கிறார்கள்.

குழந்தை நடக்கப்பழகின உடனேயே அம்மாவுக்கு ஒத்தாசை செய்ய விரும்புகிறது.

இரண்டு வயதுக் குழந்தை தாயாருடன் கடைக்குப் போகவும், சிறிய பொருட்களைத் தூக்கிக்கொண்டு வரவும் ஆசைப்படுகிறது.

தோய்த்து வைத்த துணிகளை ரகவாரியாகப் பிரிக்கிறது. அப்போது அதற்குரிய நிறங்களையும் வடிவங்களையும் பிரித்தறியும் பயிற்சி கிடைக்கிறது.

குழந்தைகளுக்கு அந்த வாய்ப்புக்களை அளியுங்கள்.

ஐந்து, ஆறு வயதுக் குழந்தைகளுக்கு எளிய உத்தரவுகள் புரியும். சிறிய வேலைகளைச் செய்யவும், பாத்திரங்களைக் கழுவவும், கடைகண்ணிக்குப் போய் பத்திரிகை அல்லது சிறிய பொருட்களை வாங்கி வரவும், அருகில் உள்ள நண்பர்கள் வீட்டுக்குப் பொருட்களைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வரவும் அல்லது அவர்களிடம் இருந்து பொருட்களை வாங்கி வரவும் பயிற்சி கொடுங்கள்.

தமது பொம்மைகள், புத்தகங்களை, துணிகளை அடுக்கி ஒழுங்காக வைக்கவும் பழக்குங்கள்.

ஏழு வயதுச் சிறுவன் அல்லது சிறுமி ஓரளவு வீட்டுப் பொறுப்புக்களை ஏற்க முடியும்.

உணவு பரிமாறுதல், தம்பி, தங்கைகளுக்கு விளையாட்டுக் காட்டுதல், உணவூட்டி விடுதல், தூங்கப் பண்ணுதல் ஆகிய பணிகளில் அவர்களை ஈடுபடுத்துங்கள். அவர்களுக்குச் சரியாகச் செய்ய வருகிற எல்லா வேலைகளையும் அவர்களுக்குக் கொடுங்கள்.

ஒரு குழந்தையை விட ஒரு காரியத்தைப் பெரியவர்கள் நன்றாகவே செய்து முடிக்க முடியும்.

அதற்காக உங்கள் குழந்தை செய்ய வேண்டிய காரியத்தை நீங்களே செய்து விடாதீர்கள். அல்லது அது செய்து வைத்த காரியத்தை மீண்டும் செய்யாதீர்கள்.

உதாரணமாக, அதன் சாப்பாட்டுத்தட்டை அது சரியாகக் கழுவவில்லை என்று உங்களுக்குப் பட்டால், அதைச் சுட்டிக்காட்டி மீண்டும் கழுவச் செய்யுங்கள்.

'நீ ஒன்றும் செய்ய வேண்டாம். போ'— என்று குழந்தையை விரட்டிவிட்டு நீங்கள் அத்தட்டைக் கழுவாதீர்கள். இது குழந்தையின் மனதில் ஒரு பற்றாக்குறை உணர்வை உண்டாக்கி, தன்னம்பிக்கையைச் சிதைத்துவிடும். ★

## சமையல் செய்வோம்

### வெள்ளரிக்காய் பச்சடி

**தேவையான பொருட்கள்:**

வெள்ளரிப்பிஞ்சு – ¼ கிலோ
வெங்காயம் – சிறிதளவு
பச்சை மிளகாய் – 3
உப்பு – அளவாக
தேசிக்காய் – பாதி
தேங்காய்துருவல்-சிறிதளவு
கொத்தமல்லி – சிறிதளவு

வெள்ளரிக்காயைத் தோல் நீக்கி, பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயம், மிளகாயையும் நறுக்கிக் கொள்ளவும்.

பின் கொத்தமல்லி, உப்பு, தேங்காய்த்துருவலையும் அரைத்து, வெள்ளரிக்காய், வெங்காயம் என்பவற்றுடன் சேர்த்து தேசிக்காய் விட்டுச் சோற்றுடன் பரிமாறலாம். விரும்புகிறவர்கள் இப்பச்சடி



யுடன் சிறிது தயிரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இப்பச்சடி, சூடான இந்தக் காலத்தில் உடலுக்கு குளிர்ச்சியை உண்டாக்கும். ★




## பல் வியாதியைத் தடுக்க...

எலுமிச்சை இலையுடன் நார்த்தை, வில்வம், மகிழம், கருவேற்பிலை ஆகியவற்றைச் சேர்த்து நிழலில் உலர்த்தி, இடித்து, கருக்கு உமியுடன் சேர்த்து பல்துலக்கி வந்தால் பல்வியாதிகள் அணுகாது.

டாக்டர் என். கே. சண்முகம்

## இரும்புச்சத்து உணவு எது?

உடலில் இரும்புச்சத்து குறைந்தால் ரத்தசோகை ஏற்படும்.

பருப்பு வகையில் கொண்டக் கடலையில் தான் அதிக இரும்புச் சத்து உள்ளது. அதற்கு அடுத்தபடி பாசிப் பயறு, மற்றும் வெல்லம், முருங்கைக்காய், முருங்கைக் கீரை, முளைக்கீரை, முந்திரிப் பருப்பு, பேரீச்சம்பழம், கொய்யாப்பழம், ஈரல், எருமைப்பால் ஆகியவற்றிலும் இரும்புச்சத்து அதிகம் உள்ளது.

இவற்றை உணவில்அதிகம் சேர்த்து வந்தால் ரத்த சோகை நோய் வருவதைத் தடுத்து விடலாம்.

- ஜ. இந்திராணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திரைப்படத்துக்கு வசனம் எப்போது அவசியமாகிறது?

குடும்பநலம் பற்றி விளக்கும் படவரிசையில் இந்தியாவிலேயே சிறந்த படமாக 'சத்தியா ராகம்' என்ற தமிழ்ப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படத்தை இயக்கியவர் பிரபல டைரக்டர் பாலுமகேந்திரா.

பாலுமகேந்திரா பேட்டி ஒன்றில் படத்தயாரிப்புப் பற்றிக் கூறுவதை இனி வாசியுங்கள்:

**முக்கியத்துவம் எதற்கு?**

எனது படத்தில் உரையாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது இல்லை.

எவது முதல் படமான 'கோகிலா'வில் இருந்து இதனைக் கடைப்பிடித்து வருகின்றேன்.

படத்தில் வரும் ஒரு காட்சியை ரசிகர்கள் வசனமின்றி விளங்கிக்



அர்ச்சனா

கொள்ளக்கூடியதாகவே தயாரித்து வருவது எனது பாணி.

இதனை நான் வசனத்தை எழுதும்போது முக்கியமாகக் கவனித்துக் கொள்வேன்.

நான் ஒரு கமிராமானாக இருப்பதால் இந்த நடைமுறையைக் கையாளுவதாக எண்ணக்கூடாது.

சினிமா என்பது கண்ணால் பார்த்து விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு மீடியம் ஆகும்.

**கண்ணால் பார்த்து...**

ரசிகர் ஒருவர் படத்தில் வருவதைக் கண்ணால் பார்த்து விளங்கிக் கொள்ள முடியாத நிலை வரும்போதுதான் நான் வசனத்தின் துணையை நாடுகின்றேன்.

கமிரா முன் நின்று வரிக்கணக்காக வசனங்களைப் பேசும் ஒரு நடிகரால் எனது படத்தில் நடிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

வசனங்கள் பேசி முடித்த பின்னரும் எனது கமரா ஓடிக்கொண்டே இருக்கும்.

அப்படி எடுக்கப்பட்ட காட்சிகளையும் நான் உபயோகித்து வருவது உண்டு.

**இன்றைய படங்கள் வானொலி நாடகங்கள்**

இன்று இந்தியாவில் திரையிடப்படும் 99 சதவீதமான படங்கள் 'வானொலி நாடகங்களை' படமாக்கியதாகத்தான் அமைகின்றன.

அதனால்தான் எமது திரைப் படங்களை வானொலியில் ஒலிபரப்புச் செய்ய முடிகிறது.

வானொலியில் கதைவசனத்தைக் கேட்டவுடன் காட்சி மனக்கண்முன் தோன்றுகிறது.

வசனங்கள் குறைவான படத்தை வானொலியில் ஒலிபரப்பினால் அந்த மனக்கண் காட்சி ஏற்படுமா?

கண்ணால் காட்சிகளை விளங்கிக் கொள்ளவேண்டிய ஒரு படத்தை வானொலியில் ஒலிபரப்பி விளங்க வைக்கமுடியாது.

**சினிமா – நடிப்பு அல்ல!**

சினிமா என்பது நடிப்பல்ல; அது இயற்கையான பழக்க வழக்கங்களை சித்தரிப்பதேயாகும் – இந்தக் கோட்

**பாலுமகேந்திரா விளக்கம்**

பாட்டை கொண்டுள்ள டைரக்டர் கூட்டத்தை சேர்ந்தவன் நான்.

ஒரு சில கலைஞர்களே தங்கள் சொந்த ஆளுமையை விட்டுக் கொடுத்த பாத்திரத்தின் தன்மையாக மாறிவிடுகின்றனர்.

**அர்ச்சனா பற்றி...**

அவர்களில் ஒருவரே நடிகை அர்ச்சனா ஆவார்.

பாத்திரத்தின் தன்மையை ஒரு கலைஞர் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்போதுதான் அவரால் அந்த 'பாத்திரம்' ஆக மாறமுடியும்.

இதனைப் பூரணமாகப் புரிந்து கொண்டவர் அர்ச்சனா.

பூனாவில் பிரபல இயக்குநர் சத்யஜித்ரேயின் கீழ் படித்தவன் நான்.

சினிமாவில் தனக்கு அக்கறை ஏற்படுத்தியவர் ஜோன் போர்ட் என்பவர்தான் என்று ரே ஒப்புக்கொண்டார்.

*1950 – 60களில் பிரெஞ்சு சினிமாவில் ஏற்பட்ட புதிய கலை என்னை ஈர்த்தது.*

இப்படி பாலுமகேந்திரா பேட்டியில் தெரிவித்தார்.

பாலுமகேந்திராவின் கொள்கை சினிமாவில் கமரா பேசவேண்டும்; வெறும் வசனங்கள் மட்டும் பேசக் கூடாது என்பதே! ★

# 'அந்த நாள்' புதுமை விரும்பி டைரக்டர் பாலச்சந்தர்

'குழந்தை' பொம்மை ஒன்றினுள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது.

அதனைக் காரில் கொண்டு செல்கிறார்கள்.

காரில் உள்ளவர்களுக்கு 'பொம்மை'க்குள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கும் சங்கதி தெரியாது...

படத்தின் ஆரம்பம்முதல் இறுதி வரை இத்திகில் நீடிக்கிறது.

படம் பார்ப்பவர்களை எல்லாம் 'சஸ்பென்ஸ்'ஸில் வைக்கும் இப்படம் இன்று, நேற்று தயாரிக்கப்பட்டதது அல்ல.

அந்தநாளில் இப்படம் வெளிவந்தது.

ஆம்! 'அந்த நாள்' படம் மூலம் தமிழ்த் திரையுலகில் புதுமைசெய்த டைரக்டர்தான் பொம்மையை 'பொம்மை' என்ற பெயரிலேயே வைத்து திகில் படம் ஒன்றையும் தயாரித்தார்.

அவர்தான் கடந்தவாரம் அமரரான வீணைமேதை எஸ். பாலச்சந்தர் அவர்கள்.

'நானும் பொம்மை, நீயும் பொம்மை நினைச்சுப் பார்த்தால் எல்லாமே பொம்மை' —என்ற பாடல் அப்படத்தின்மூலம் பிரசித்திபெற்றது. பாடலை இயற்றி, இசையமைத்து அதைப் பாடியவரும் அவரே!

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் திரைப்படத்தில் பாடல்களே இல்லாத 'அந்தநாள்' படத்தையும் 'பொம்மை' திகில் படத்தையும் எடுத்து, புதுமைகளைப் புகுத்த முயன்றார்.

அவரின் முயற்சி அன்று அவ்வளவாக வரவேற்கப்படவில்லை.

அதனால் அவர் திரைப்படத் துறையை கைவிட்டார்.

அவரின் நாட்டம் வீணைத்துறையில் சென்றது.

வீணை வாசிப்பில் காயத்ரி பாணியை அறிமுகஞ்செய்துவைத்தார்.

வீணையுடன் அவரின் ஆர்வம் நிற்கவில்லை.

1927 இல் பிறந்த பாலச்சந்தர் தனது ஐந்து வயதிலேயே கஞ்சிரா வாத்தியம் வாசிப்பதில் சிறந்து விளங்கினார்.

மிருதங்கம், சித்தார், புல்புல் தாரா, தபேலா ஆகிய வாத்தியங்களைக் கையாளுவதிலும் அவர் வல்லுநராகத் திகழ்ந்தார்.

இசை மேதையான அவரைத் தேடிப் பல விருதுகள் சென்றன. அவற்றில் ஒன்று, இந்திய அரசு வழங்கிய 'பத்மபூஷண்' விருதுமாகும்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் இசைப் பேராசிரியராக கடைசிக் காலத்தில் பணியாற்றிவந்தார்.

அங்கு இசைவகுப்புக்களை நடத்தச்சென்ற இடத்தில் பாலச்சந்தருக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

அமரரான அவர், திரைப்படத் துறையிலும் இசைத்துறையிலும் என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய சாதனைகளைப் புரிந்திருக்கிறார். ★

வெள்ளித்திரையில்


"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period – Months காலம் – மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | - | *7% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ஈ. கருணரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ன.
A.I.B. (Lond.). பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்
இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.
61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நற்பாக்கியங்களை அருளும் புனித இரவு 'லைலத்துல் கத்ர்'

'நிச்சயமாக நாம் அதை மேன்மையான இரவில் இறக்கினோம். மேலும் மகத்தான இரவு என்னவென்று எது உங்களுக்கு அறிவித்தது. மகத்தான இரவு ஆயிரம் மாதங்களை விட மேன்மை நிறைந்தது. அவ்விரவில் வானவர்களும், ஜிப்ரீயில் (அலை) அவர்களும் தங்கள் இரட்சகனின் ஆணையைக் கொண்டு ஒவ்வொரு காரியத்திற்காகவும் பூமியின் பக்கம் இறங்குகின்றனர். அவ்விரவின் அதிகாலை தோன்றும் வரை சாந்தி நிலவி இருக்கும்'—

(அல்குர் ஆன் 97) இது இறைமறையாம் புனித திருக்குர்ஆனின் தொண்ணூற்று ஏழாவது அத்தியாயமான மகத்தானது என்னும் பொருள்படும் 'அல்கத்ரு' சூராவின் மணிமொழியாகும்.

இந்த இரவின் மகத்துவத்தையும், மாண்பையும் பற்றி இறுதி நபி ரசூல் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து இருப்பதாவது:- ரமழானின் இறுதிப்பக்கத்தில் ஒற்றைப் பட்ட எண்ணுள்ள இரவுகளில் மகத்தான இரவை நீங்கள் தேடிப்பிடித்து இறை வணக்கத்தில் ஈடுபட்டு ஜய சீலர்கள் ஆகுங்கள் — என்பதாகும்.

மனிதன் செய்த பாபப் பிணிகளைக் கரித்து எரிக்கும் சிறப்புத் தங்கிய மாதம் புனித ரமழான் மாதமாகும். ரமழான் என்பதன் பொருள் கரித்தல் அல்லது எரித்தல் என்பதாகும்.

### மகத்துவம்

இந்த மாதத்தின் இருபத்தேழாம் இரவையே லைலத்துல் கத்ரு இரவு என அழைக்கிறோம். இந்த இரவின் மகத்துவத்தைப் பற்றியே மேலே காட்டிய இறை வசனமும், இறைத்தூதரின் மணிமொழியும் எடுத்துக் காட்டுகின்றன.

நிச்சயமாக அதனை (திருக்குர் ஆனை) மகத்தான இரவிலே இறக்கினோம்' என்று இறை மறையின் மூலம் இறைவன் கூறுகின்றார். இதன் பொருள் என்னவென்றால் 'லெளஹுல் மஹ்பூல்' என்ற பலகையில் இருந்து முதல் வானத்தில் உள்ள 'பைத்துல் இஜ்ஜத்' என்ற புனிதமான இடத்திற்குத் திருக்குர்ஆன் முழுமையாக இறக்கப்பட்டது. இது நடந்தது புனிதமான லைலத்துல் கத்ரு இரவிலே தான். அதன் பின்னர் சிறிது சிறிதாகத் தேவைக் கேற்ப ஜிப்ரீயில் (அலை) மூலம் ரசூல் (ஸல்) அவர்களுக்கு இருபத்துமூன்று வருடங்களாக அருளப் பட்டது. இதனையே இறைவன் தனது வான் மறை மூலம் எமக்குச் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறான்.

மகத்தான இரவு ஆயிரம் மாதங்களை விட மேலானது என்பதன் கருத்து என்ன?

இந்தப் புனிதமான இரவில் செய்யப்படும் வணக்கங்களுக்கும், நற்கருமங்களுக்கும் ஆயிரம் மாதங்களைவிட மேலான காலங்கள் செய்யப்படும் வணக்கங்களுக்கும், நற்கருமங்களுக்குமான சன்மானத்தை வழங்குகிறான். இது இறுதி நபி ரசூல் (ஸல்) அவர்களது உம்மத்துக்களுக்கு இறைவன் அருளிய அருட்கொடைகளும் மகத்தானதாகும்.

### உளத் தூய்மை

அந்த மகத்துவமான இரவில் உளத்தூய்மையுடன், உண்மை விசுவாசத்துடன் இறை வணக்கத்தில் ஈடுபடும் இறையன்பர்களின் சமூகத்திற்கு மலக்குகள் தோன்றி முசாஹபா (கைலாக்கு) செய்கிறார்கள். உண்மை விசுவாசிகளை அணுகி அவர்களுக்கு ஆசீர்வாதம் புரிகிறார்கள். அன்றைய இரவில் புரியும் வணக்கங்களுக்கும், நற்கருமங்களுக்கும் அளப்பரிய பலனும், மதிப்பும் நிச்சயமாக உண்டு.

சூரியன் மறைந்தது முதல் வைகறைப் பொழுது வரை வானவர் ஜோன் ஹசரத் ஜிப்ரீயில் (அலை) அவர்களது தலைமையில் பல இலட்சக் கணக்கான மலக்குகள் உலகைச் சுற்றி வருவதுடன் இறைவணக்க வழிபாடுகளில் ஈடுபடுவோருக்குச் சாந்தியும், சலாமும் வணங்குகின்றனர்.

இம்மகத்தான இரவில் அடியார்கள் இறைவனிடம் கேட்கும் கோரிக்கைகளை இறைவன் அங்கீகரித்து அருள் புரிகிறான். இவ்விரவு முழுவதும் சாந்தியும், சமாதானமும் நிரம்பி இருக்கும்.

லைலத்துல் கத்ரு இரவின் அமல்கள் 'யார் லைலத்துல் கத்ருடைய இரவின் பயனை இழந்து விடுகிறாரோ, அவர் சகல நற்பாக்கியங்களையும் இழந்து துர்ப்பாக்கியவானாகவே இருப்பான்' — நபிகள் நாயகம் (ஸல்)

எனவே இந்தப் புனிதமான லைலத்துல் கத்ரு இரவிலே கண் விழித்து நல்ல அமல்களைச் செய்வோமாக! ★

**- எம். எஸ். சித்திக் -**

---

# தேவனை உண்மையாக நேசிப்பின் இன்னல்கள் எம்மை அணுகா!

கிறிஸ்து ஏன் இத்தகைய கொடிய மரணத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்? வேதனையையும், பாடுகளையும் அவர் இவ்வளவாகத் தம் மீது சுமந்து அதை நமக்காக ஏற்றுக்கொள்ள என்ன காரணம்? லூக்கா 7: 11 - 15 இல் ஒரு சம்பவம் காணப்படுகிறது.

நாயின் என்னும் ஊரில் ஒரு விதவைத்தாய் - தன் மகனை இழந்து விட்டாள். ஒரேமகன். மரித்துப் போன அவனை அடக்கம் செய்ய ஜனங்கள் கொண்டு வருகின்றனர்-

அவளோ அழுது புலம்புகிறாள் - இயேசு இதைக் காண்கிறார் - லூக்கா இங்கே சொல்கிறார். (7 ; 13 இல்) கர்த்தர் அவளைப் பார்த்து மனதுருகி 'அழாதே' என்று சொல்லி அவள் மகனை உயிரோடெழுப்புகிறார்- இங்கு கிறிஸ்து அந்தத் தாயின் மேல் ஏற்பட்ட மன துருக்கத்தால் செயல்பட்டார்.

### இரக்கம்

அந்த மகன் எதற்குரியவன்? இறந்தபின் கிடங்கில் போட்டு மூடப்படவேண்டியவன், அவனை மரணக்கட்டுகள் சூழ்ந்துவிட்டது. இனி அவன் பிரேத கிடங்குக்குச் சொந்தமானவன் - அவன் தாயால் என்ன செய்ய முடியும்? சொந்த ஜனங்களால் என்ன செய்யமுடியும்? அடக்கம் செய்து விட மட்டுமே முடியும்? ஆனால் இயேசு இதைக் காண்கிறார்-

ஏற்கனவே கணவனை இழந்தவள் - இப்போது மகனையும் இழந்துவிட்டாள். ஒரே மகன் - இனி அவள் வாழ்க்கை தனிமை. அவள் கைவிடப்பட்டவள்- திக்கற்றவள் - அவள் ஒரு கண்ணீர் நிறைந்த சோகக்கதை. இவைகளைச் சிந்தித்து உணர்ந்த ஆண்டவர் அவளைத் திடப்படுத்த விரும்புகிறார். இப்போது மகனைப் பார்க்கிறார். உயிரற்ற உடல் இன்னும் சொற்ப நேரத்தில் மரணக் குழிக்குள் போடப்படவேண்டியவன்- அவனால் அந்த மரணக்கட்டை அறுக்க முடியாது. ஏன்? எந்த மனிதனாலும் அதைச் செய்யமுடியாது? ஆம் அவனுக்கு வேண்டும் விடுதலை? யார் கொடுப்பார்? இயேசு ஒருவரால் மட்டும் தான் கொடுக்க முடியும்.

### கலங்காதே!

இயேசு சொல்கிறார் 'வாலிபனே எழுந்திரு' ஆம்! சகோதரனே! சகோதரியே! நீ கைவிடப்பட்டு, திக்கற்றவனாய் தனித்து நிற்கிறாயோ? கலங்காதே! ஆண்டவர் உன்மேல் மனதுருகி 'அழாதே' என்று சொல்லும் சத்தம் இன்று உனக்காக! நீ எந்தக் கட்டுக்களால் கட்டப்பட்டிருக்கிறாய்? தேவனைத் தேடமுடியாமல் உன்னைத் தடுக்கும் கட்டுகள் தான் என்ன? நீ அதில் இருந்து விடுபடமுடியாமல் உலக கவலை, உலக இன்பம் என்ற கட்டுக்களில் சிக்கி தவிக்கின்றாயோ? திகைக்காதே! இதோ இன்று 'எழுந்திரு' என்று ஆண்டவர் சொல்லும் சத்தம் உனக்காக நீ மரணக்குழிக்கு அல்ல ஆண்டவருக்குச் சொந்தமானவன்'



இன்று நீங்களும் நானும் கிறிஸ்துவின் மரணத்தின் அடிப்படை நோக்கத்தை உணர்ந்து கொண்டு விட்டோமா? பாவம் என்னும் கட்டுகளில் வீழ்ந்த எமது பரிதாபத்தை ஆண்டவர் கண்டார், மனதுருகினார். இதற்காக சிலுவை மரணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

### யார் காரணம்?

அன்று இயேசுவின் சிலுவை மரணத்துக்கு யார் காரணம் என்று கேட்டால் நாம் இன்று உடனடியாக யாரைச் சொல்லுவோம்? எமக்கு மற்றவர்களை விட முதல் முதல் ஞாபகத்துக்கு வருபவன் அவருடைய சீடனாகிய யூதாஸ் என்பவன் தான்.

இவன் செய்த காரியத்தை பார்க்கும்போது இவன் ஒரு துரோகி. அவருடன் வாழ்ந்தவன். அவருக்குப் பின் சென்றவன். அந்த இயேசுவை ரோம ஆட்சியாளருக்கு எவ்வித கூச்சம், பயம் இன்றி முத்தமிட்டு காட்டிக் கொடுக்கிறான். ஆண்டவரை கட்டிப்பிடித்து 'ரபீ' என்று கூறி அணைத்து முத்தமிட்டான் என்று வேதம் கூறுகிறது.

'முத்தம்' எதற்கு அடையாளம்? ஒரு அன்பின் சின்னம். உறவின் ஆரம்பத்திற்கும், அதனைத் தொடரவும் பயன்படும் இந்த முத்தம் இங்கு யூதாசினால் வேறு நோக்கத்திற்காகாகப் பயன்படுகிறது.

நண்பனே! அன்று ஒரு யூதாஸ் இருந்தான். அவன் இன்று இல்லை. மறைந்து விட்டான். ஆனால் இன்று யூதாஸ் யார்? இன்றும் ஆண்டவரை சிலுவை மரத்துக்கு அழைத்துச் செல்பவர் யார்?

வேறு யாருமல்ல! ஆண்டவரை அன்பு செய்வது போலவும், அவரைத் தேடுவது போலவும் நடித்து வெறுமனே ஆலயம் சென்று வருகிறோமே, அந்தப் பொய் வாழ்க்கை வாழ்ந்து அவர் சத்தியங்கட்கு செவிகொடுக்காமல் எம் மனதைக் கடினப் படுத்தி விட்டு ஒரு சம்பிரதாயத்துக்காக நாம் அவரைத் தேடினால் அன்று கட்டிப் பிடித்து முத்தம் செய்து அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது!

ஆம்! இன்று நம் உள்ளத்தைத் தொட்டுப் பார்ப்போம். நான் ஆண்டவரை உண்மையாய் நேசிக்கிறேனா? அது உண்மையானால், இன்று நாம் எந்தக் கட்டுகளில் இருந்தாலும் தேவன் எம்மை விடுப்பார்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ★

**- பெஞ்சோ பொன்னையா -**

---

## நினைவுகள்

உனது
நினைவுகளுக்குத்தான்
எத்தனை சக்தி
மனது
இறக்கை கட்டிக்
கொண்டு
பறக்கிறது!

**- வேலணையூர் தாஸ்**

---

## "எயிட்ஸ்"

கலியுக இராமர்கள்
சிவப்பு வெளிச்சத்தில்
தேடிய ஒப்பந்தங்களால்
வைரசுக் கிருமிகள்
உடல் தேசமெங்கும்
அரசு செலுத்த
வெண்குருதி
துணிக்கைகள்
சரணாகதி
அடைகின்றன!

**- கோவளா. பாபு**

---

## பறவைகள் பலவிதம்

பருவம் வந்து
என்னை
ஆக்கிரமித்தபோதுதான்
பைங்கிளியின்
பார்வை வலை ஒன்றில்
விழுந்தேன்.
நாட்கள் நகர்ந்தது
பைங்கிளியோ
என்னை விட்டுப்
பறந்தாள்.

தேடினேன்,
காண முடியவில்லை......
அந்த வேளை
ஒரு பூங்குயில் மட்டும்
என் முகாரி ராகத்தை
மோகனமாக்க
முற்பட்டது
மறுத்தேன்.....
பெண்மையை
வெறுத்தேன்.

என் உணர்வுகள்
நாளுக்கு நாள்
செத்து, மடிந்து
கொண்டு போனது
இதயத்தில் பூகம்பமாய்
பைங்கிளி
அவள் நின்றாள்.

எதிரே
பைங்கிளி
பவனி வந்தாள்
சுமங்கலிக் கோலத்தில்...!
நம்ப முடியவில்லை
விழிகளை அகட்டி
உற்று நோக்கினேன்.
அவள் தான்!

என் கருகிய இதயத்தை
அதிர்ச்சிப் புயல் வந்து
தாக்கியது—
அந்த, சுடு மணலிலையே
உறங்கினேன்
நிரந்தரமாகவல்ல......
சற்று நேரத்திற்குப் பின்
விழித்தேன்,
எதிரே பூங்குயில்
கண்ணீர் வடித்தபடி...!
அப்பதான் நினைத்தேன்
பறவைகள் பலவிதம்
என்று!

**- கரணவாயூர் ரவிச்சந்திரன்**

---


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வருத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.
சந்தை...பாடசாலை...கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480



இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்.

**பஜாஜ் பயணம் கோடி பெறும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் ஸ்தம்பித்துள்ள கட்டட நிர்மாணத்துறைப் பணிகள்

இலங்கையின் ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் வடக்கு - கிழக்கில் சொற்பமான நிர்மாண வேலைகளே கடந்த காலத்தில் இடம்பெற்றிருந்தன.

அரசு திணைக்களம் என்றாலும் சரி அல்லாவிடினும் சரி, சராசரியாகக் கட்டடம் நிர்மாணிக்கும் ஒருவரால் ஒரு நிதி ஆண்டில் 5 கோடி ரூபா தான் செலவழிக்கப்பட்டிருக்கும்.

கட்டடத்தொழில் கடந்த சில தசாப்தங்களாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

### தட்டுப்பாடு

பிந்திய 1970 களிலும் முந்திய 1980 களிலும் கொழும்பில் கட்டடங்கள் கட்டுவதில் காணப்பட்ட வேகமும் மத்திய கிழக்குத் தொழில் வாய்ப்பும் இப் பிராந்தியத்தில் உள்ள திறமையான தொழில் நுட்பவியலாளர்களை இழுத்தெடுத்தன.

இதனால் காலியாகக் கிடந்த திணைக்களங்கள் அன்றாட அடிப்படையில் கருமங்களை மேற்கொண்டன.

பொறியியலாளர்களின் அசமந்தப்போக்கு, ஒப்பந்தக்காரர்களுக்குப் போதிய தகவல்களைக் கிடைக்காமற் செய்தது.

கூலி மற்றும் பொருட்கள் பற்றிய காலந்தப்பிய மதிப்பீடுகளால் திட்டங்களுக்குக் குறைந்த ஒதுக்கீடுகளே கிடைத்தன.

இன்னொரு பக்கத்தில், ஒப்பந்தத்தை எடுப்பதற்காக ஒப்பந்தக்காரர்கள் குறைந்த தொகைக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தனர்.

### முறையான மதிப்பீடு

முறையான மதிப்பீடுகள் நடத்தப்படாததால் குறைந்த தொகை கேள்விப்பத்திரகாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இது தரமற்ற நிர்மாண வேலைகள் இடம்பெறவும் வேலைகள் தாமதமாகவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

நிர்மாண வேலைகளை நிறைவேற்றும் இறுதித் திகதிகள் தவறுவது, நிதி ஒதுக்கீடுகள் பாவிக்கப்பட முடியாத நிலைமையை ஏற்படுத்துகிறது. இதனால் இப்பிராந்தியத்திற்குக் கிடைக்க வேண்டிய தேசிய ரீதியான பங்கு தவறி விடுகின்றது.

வடக்கு - கிழக்கில் நிர்மாணத்துறையைப் பற்றிய துக்ககரமான நிலை இதுதான்.

### 1983 க்குப் பின்னர்

இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து 1983 க்குப் பின்னர் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புத் தேடி வேறு இடங்களுக்குச் செல்லவே, நிர்மாணத்துறை முடங்கியது.

அக்காலத்தில் பல கட்டடங்கள் குறிப்பாக அரசுக் கட்டடங்கள் சேதமடைந்தன;

பல பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பல கட்டடங்களை மீண்டும் நிர்மாணிக்க இன்று திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்டபடி புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் இடம்பெற வேண்டுமானால் அடுத்த தசாப்தத்துக்குள் கோடிக்கணக்கான ரூபா நிர்மாணத்துறையில் செலவிடப்பட வேண்டும்.

நிர்மாணத்துறையில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரின் ஒத்துழைப்பும் இதற்குத் தேவை.

நிர்மாணத்துறை இத்துறையில் எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகள் குறித்து இக் கட்டுரை ஆராய்கிறது.

> வடக்கு - கிழக்கு அபிவிருத்தி வேலைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.
>
> ஆனால் அவற்றைப் பயன்படுத்தி அபிவிருத்தி வேலைகளைச் செய்துமுடிக்க போதிய ஒப்பந்தகாரர்கள் இல்லை.
>
> இதனால் வளர்ச்சிப் பணிகள் தாமதமாகின்றன.
>
> முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் அங்கு நடந்த கருத்தரங்கு ஒன்றில் இப்படி குறைபட்டுக்கொண்டார்.
>
> இந்த நிலையில் வடக்கு - கிழக்கில் ஸ்தம்பித்துள்ள, வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான கட்டட நிர்மாணத் துறைக்கு புத்துயிர் கொடுப்பதற்கு தேவைப்படும் வழிவகைகளை இச்கட்டுரைத்தொடரில் கட்டுரையாளர் ஆராய்கிறார்.

### ஒப்பந்தக்காரர்கள்

இப்பிராந்தியத்தில் 200க்கு அதிகமான கட்டட ஒப்பந்தகாரர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் தனிநபர் ஒப்பந்தகாரர்களே. திட்டங்களை நிறைவேற்ற இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை உபயோகிக்கின்றனர்.

சுமார் 40 நடுத்தர ஒப்பந்தகாரர்களும் உள்ளனர். இவர்களில் இரண்டு, மூன்றுபேர் பங்குதாரர்களாகச் சேர்ந்து தொழில்புரிகின்றனர்.

இவற்றை விட சுமார் 15 வரையறுக்கப்பட்ட நிறுவனங்களும் கட்டட நிர்மாணத்துறையில் ஈடுபடுகின்றன. இந்த நிறுவனங்கள் பொறியியலாளர்களையும் மேற்பார்வையாளர்களையும் முழுநேரத் தொழில்புரிய வைத்திருக்கின்றன.



பெரும்பாலான கட்டட நிர்மாண வேலைகள் அரசாங்கத் திணைக்களங்களில் இருந்தே வருகின்றன. அந்த திணைக்களங்கள் நிர்மாண வேலைகளை மேற்பார்வையிட சொந்தமாக பொறியியலாளர்களை வைத்திருக்கின்றன.

தொழில்நுட்பப் பிரிவுகள் இல்லாத திணைக்களங்கள் மேற்கொள்ளும் நிர்மாண வேலைகளை கட்டடத் திணைக்களம் மேற்பார்வை செய்கின்றது.

வெகுசில நிர்மாணத் திட்டங்கள்தான் தனியார் துறையினரால் நிர்வகிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன.

சில நிர்மாணத் திட்டங்கள் மட்டுமே தனியார்துறை நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன.

திணைக்களங்கள் கேள்விப்பத்திர தஸ்தாவேஜுகளைத் தயாரிக்கின்றன.

மாதிரி அமைப்புத் தயாரிப்பில் கட்டடத் திணைக்களம் சம்பந்தப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் மட்டுமே தனியார் ஆலோசகர்கள் மாதிரி அமைப்பைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டனர்.

பொருட்கள் உள்ளூரில் வாங்கப்படுகின்றன. அரசு கூட்டுத்தாபனத்தில் இருந்து சிமெந்து வாங்கப்படுகிறது. ஏனைய கட்டடப்பொருட்கள் தனியார் துறையினரிடம் இருந்து பெறப்படுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் குறிப்பாக மின் உபகரணங்கள் போன்றவை கொழும்பில் வாங்கி இப்பிராந்தியத்துக்குக் கொண்டுவரவேண்டியுள்ளது.

நிர்மாணத் துறைக்குத் தேவையான மரங்கள், பலகைகள் தனியார் துறையினரிடமிருந்தே வாங்கப்படுகின்றன. தரக்கட்டுப்பாடு என்பது எள்ளளவும் கிடையாது.

தரக்கட்டுப்பாடு எப்போது கையாளப்படுகிறது என்றால் வேலைத் தலத்தில் நிர்மாண வேலைகள் மேற்பார்வையிடப்படும் சமயத்தில்தான்.

கட்டடம் ஒன்று கட்டுவதற்கான தேவை அடையாளங்காணப்பட்ட பின்னர், நிர்மாண வேலைகளை மேற்கொள்ளப்போகிறவர், அதற்குத் தேவையான முதலீட்டை ஒழுங்கு செய்கிறார்.

நிதிகொடுப்பவரை அணுகு முன்னர், கட்டடத்தை நிர்மாணிக்க ஏற்படும் செலவு பற்றிய மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது.

தேவையான முதலீட்டை ஒழுங்கு செய்தவுடன் கேள்விப்பத்திர தஸ்தவேஜுகள் தயாரிக்கப்படுகின்றன. ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்படுகிறது,

செயற்படுத்தப்படும்போது இந்த நடைமுறை பல காரணிகளால் தாமதமாகின்றது.

அவற்றில் சில வருமாறு:

★ திட்ட நிர்வாகம் இன்மை.

★ போதுமான நிதி கிடைக்காமை.

★ கேள்விப்பத்திரம் வழங்குவதில் உள்ள தாமதம்.

★ பொருட்கள் கிடைக்காமை.

★ போதுமான தொழிலாளர் இன்மை.

தரமற்ற கட்டட நிர்மாண வேலைகள் கீழ்க்கண்ட காரணங்களால் இடம்பெறுகின்றன:

★ போதுமான விவரங்கள் ஒப்பந்தத்தில்கூறப்படாமை.

★ வேலைத்தலத்தில் ஒழுங்கற்ற மேற்பார்வை மேற்கொள்ளப்படுவது.

★ பயிற்சி பெறாத தொழிலாளரை வேலைக்கு அமர்த்துவது.

★ தரம் குறைந்த பொருட்களைப் பாவிப்பது.


★ நிர்மாண நடைமுறைகளை புறக்கணிப்பது.

★ ஏனைய ஒழுங்கற்ற நடவடிக்கைகள்.

(வளரும்)

**- இ. த. இராமச்சந்திரன் -**
Bsc. Hons., C.Eng., M-I. Mech. E
இயக்குநர்; வடக்கு - கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் (NEED)

## சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 112
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........
விலாசம் ..........

### போட்டி இல: 112

**இடமிருந்து வலம்:**

1. இவரைப் பலர் கடவுளாக வணங்குகிறார்கள் 6. முருகனுக்கு மாமன் இவர் 7. பொறுமை குழம்பி விட்டது 9. குன்று 10. அழகிய இடம் குழம்பி விட்டது. 13. பகிர்ந்து கொடு 14. பெரியவர்களால் கூறப்படுவது 15. தேவலோக மரம் 16. மன அமைதி 18. திருமணம் நடைபெறும் இடம் 19. வேகம் மாறி விட்டது 21. உலக நதிகளில் ஒன்று 22. சந்தேகம் மாறிவிட்டது.

**மேலிருந்து கீழ்:**

1. நல்லூரை ஆண்ட கடைசி மன்னன் 2. இப்படியும் சுவர்க்கம் உண்டு 3. முனிவர் 4. பாடல்களால் போடப்படும் மாலை 5. வெண்மை நிறத்துக்கு இதனை ஒப்பிடுவர் 8. காயம் 9. பிள்ளை 11. பிடிவாதம் 12. இது வந்தால் பத்தும் பறந்திடும் என்றார் ஔவையார் 13. கதிரவன் 14. மணிமேகலையில் வரும் ஒரு பாத்திரம் 15. கமலம் 16. முழுமை 17. குழந்தை குழம்பி விட்டது 20. ஊழ்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 25 - 04 - 1990

# வளரும் இளம் மிருதங்கக் கலைஞர்!

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பார்கள். இதை மெய்ப்பிப்பது போன்று செல்வன் சச்சிதானந்தம் சஞ்சயனின் மிருதங்க அரங்கேற்றம் அமைந்திருந்தது.

கச்சேரி நின்னுகோ வர்ணத்துடனேயே களைகட்டிவிட்டது. ஆதி தாளத்தில் 'தனியாவர்த்தனம்' இடம்பெற்றது. பிஞ்சு விரல்கள் பஞ்ச நடையை நறுக்குத் தெறித்தாற் போல தாளலயம் பிசகாது மிருதங்கத்தில் வாசித்தமை அற்புதமாக அமைந்திருந்தது.

> செல்வன் சச்சிதானந்தம் சஞ்சயனின் மிருதங்க அரங்கேற்றம் அண்மையில் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. அது பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

நாத வெள்ளத்தில் சபையோர் நிச்சயமாக மெய்மறந்திருப்பர்.

இவ்வாத்தியத்தில், இவ்வாத்தியத்திற்கே உரிய நடையில் சொற்களை வாசிக்கும் போது பதப்பட்ட ஒரு வித்துவானின் நளினம் இயல்பாகவே அமைந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆதிதாளம் கண்ட நடையில் அமைந்திருந்த ராகம்-தாளம் - பல்லவி மிருதங்க வாத்தியத்தில் பல்லவிக்குப் பொருத்தமான சொற்கட்டுகளை மூன்று காலங்களிலும் மிகவும் லாவகமாக மீட்டியமை வருங்கால இசை உலகிற்குதான் ஒரு பொக்கிஷம் என்பதை நிருபிப்பது போல அமைந்திருந்தது.



செல்வன் சஞ்சயன்

வர்ணம் தொடக்கம் மங்களம் வரையிலான நாதம் செறிந்த சீரான வாசிப்பு வித்துவான் க. ப. சின்னராசா அவர்களிற்கே உரித்தான, தனித்துவமான பாணியாகும். இச்சிறுவனின் வாசிப்பில் அச்சொட்டாக அப்படியே குருவின் சாயல் படிந்துள்ளது.

எதிர்காலத்தில் கற்பனை செறிந்த லயச் செறிவான வாசிப்பிற்கு நல்ல அத்திவாரத்தை ஆசான் வழங்கியுள்ளார். ஆகையால் எதிர்காலத்தில் மிருதங்க வாசிப்பில் சஞ்சயன் ஒரு 'மணி'யாகத் திகழ்வதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அன்று நிகழ்ந்த இசை அரங்கில் திரு. வர்ணகுலசிங்கம் இராமேஸ்வரன் (வாய்ப்பாட்டு). பிரம்மஸ்ரீ வெங்கடேசசர்மா (வயலின்) வித்துவான் ந. சிதம்பரநாதன் (கஞ்சிரா) இச்சிறுவனுடன் இணைந்து மூன்று மணி நேரம் இசையை வழங்கினார்கள். ★

**- எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் -**
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

# இருண்ட உலகில் வாழ்ந்துகொண்டு ஒளிதரும் கவிதை யாத்த மில்ரன்!

சுவர்க்கலோகத்திலுள்ள ஈடன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் இன்பமாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஒருநாள் ஏவாள் கணவரை நோக்கி மரத்தில் உள்ள அழகான பழத்தைப் பிடுங்கித் தருமாறு வேண்டுகிறாள். ஆதாம் மறுக்கிறான், காரணம், அது கடவுளால் விலக்கப்பட்ட மரம்.

சாத்தான் பாம்பு வடிவில் சென்று ஏவாளைத் தூண்டுகிறான். ஏவாளின் பிடிவாதத்தைச் சகிக்கமுடியாத ஆதாம் அப்பழத்தைப் பிடுங்கி மனைவியிடம் கொடுக்கிறான். முதலில் ஏவாளும் பின்னர் ஆதாமும் பழத்தை உண்கின்றனர்.

இதனால் கடவுளின் கோபாவேஷத்துக்கு ஆளாகின்றனர். தம்பதிகளைக் கடவுள் சபிக்கிறார், 'இவ்வளவு காலமும் இன்ப வாழ்க்கை வாழ்ந்து வந்த நீங்கள்! பூமியில் சென்று நெற்றிவியர்வை நிலத்தில் விழும்வரை உழைத்து உண்ணுங்கள்'

சாத்தானைச் சுவர்க்கத்திலிருந்து பாதாளம் வரை விழச் செய்தார் இறைவன்; அவன் செய்த தீச் செயலுக்காக—

இதை அழகாகச் சித்தரிக்கிறார் ஆங்கிலக் கவிஞர். ஜோன் மில்ரன், சுவர்க்க இழப்பு (Paradise lost) என்னும் நூலில்.

### ஒழுக்க வாழ்வு

கிறிஸ்தவ சமயத்தில் அசையாத நம்பிக்கையும், நல்லொழுக்க வாழ்வும் அவரின் கவிகளை வளம்படுத்தின.

Pusitom — அதாவது மத ஒழுக்கங்களில் சிறிதும் வழுவாமலிருக்கும் தன்மையும். காமத்தை உணர்த்தும் சொற்களையும் பாவிக்காது மிக உயர்ந்த ரகக் கவிதைகளைப் பாடியவர் மில்ரன்.

வில்லியம் ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாகத் தொகையான ஆங்கிலச்சொற்களைப் பாவித்துள்ளார். சுவர்க்க இழப்பு, சுவர்க்க மீட்பு, கவலைத் தெய்வத்துக்கும் மகிழ்ச்சித் தெய்வத்திற்கும் பாடல்களை இயற்றியுள்ளார். மேலும் சாம்சன் (Samson) பற்றிய நாடகமும் எழுதியுள்ளார்.

### ஆங்கிலக் கவிஞர் வரிசையில்

மில்ரன் சீராகப்பாடசாலை சென்று கல்வி கற்றவர். பின்னர், கலாசாலை சென்று படித்து எம். ஏ. பட்டமும் பெற்றவர்.

அவரின் கடும் படிப்பினால் 50 வயதுக்கு முன்னர் கண் பார்வையை இழந்தார். அதனையும் ஒரு பாட்டில் சித்தரித்துள்ளார்.

'எனது வாழ்க்கையின் அரைவாசி முடியுமுன்னரே எனக்கு உலகம் இருண்டு விட்டது' என்று கவலையாகப் பாடியுள்ளார்.

மேலும் — 'கற்சுவர்கள் ஒரு சிறைச்சாலையை உண்டாக்குவதில்லை. இரும்புச் சட்டங்களும் ஒரு கூண்டை அமைப்பதில்லை. எமது மனமே சுவர்க்கத்திலிருந்து நரகத்தையும் நரகத்திலிருந்து சுவர்க்கத்தையும் உருவாக்குகிறது' — என்று கூறுகிறார் மில்ரன்.

### ஷேக்ஸ்பியர் பற்றி

ஷேக்ஸ்பியர் இறப்பதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பே மில்ரன் பிறந்தார். சேக்ஸ்பியர் மேல் அளவு கடந்த மதிப்புக் கொண்ட மில்ரன் அன்னாரைப் புகழ்ந்தும் ஒரு கவி இயற்றியுள்ளார்.

அதில் — அரசர்களும் சேக்ஸ்பியரின் கல்லறையில் உறங்குவதற்குப் போட்டி போடுவார்கள் — என்று மிகைபடக் கூறுவது மில்ரனுக்கு சேக்ஸ்பியரில் உள்ள பெருமிதத்தைக்காட்டுகிறது.

மில்ரன் லத்தீன் மொழியிலும் கவிதைகள் புனைந்துள்ளார். கற்பனைத்திறனும் (Allusions) இதிகாசங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டுவதிலும் மில்ரனுக்கு நிகரானவர்கள் யாருமில்லை என்று சொன்னால் மிகையாகாது.

அவரின் காலம் கி. பி. 1608 — கி. பி. 1674.

கண்பார்வை இழந்த பின்னரும் பாடல்கள் யாத்துள்ளார். அவற்றை எல்லாம் அவரின் மகளே தந்தையார் சொல்லச் சொல்லப் புத்தக வடிவில் அமைத்துள்ளார்.

மில்ரனின் கவிதைகளை நன்றாகக் கற்றோரே படித்து அனுபவிக்கமுடியும். துளிகூட நகைச்சுவை இருக்காது அவரின் கவிதைகளில்!

'ஓ! மில்ரனே! நீர் இப்பொழுது உயிருடன் இருக்க வேண்டும். இங்கிலாந்து தேசம் உமது சேவையை நாடி நிற்கிறது. தேசம் குழப்பமடைந்து முன்னேற்றமில்லாது நிற்கிறது. அதன் புகழ்பாட யாரும் இல்லை...'

என்று வேட்ஸ்வேர்த் என்ற பிற்காலப் புலவர் பாடுகின்றார். ★

**- மானியூர் சி. குமாரசாமி எம். ஏ. -**

# மண்ணவர் விடுதலைக்கு உழைத்த தொண்டர்நாயகன் அப்பரடிகள்!

''அழிதகவில்லா அரன் அடியாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்(கு) இருள் நீங்கும்''
— திருமந்திரம் (1828)

சமுதாயத்தில் தீமைகள் மிகுந்த மக்கள் மாக்களாய் இருள் வசப்பட்டு இருக்கும் வேளையில் இறைவன் தம் எல்லையற்ற கருணையால் நல்லோர் சிலரைத் தோற்றுவிக்கிறான்.

அவர்கள் மண்ணவர் மத்தியில் அவர்களைப் போலவே வாழ்ந்து, துன்பங்களில் உழன்று, அருந்தவத்தால் விடுதலை பெற்றுத், துயரத்தில் மூழ்கியிருக்கும் மக்களுக்கும் நல்லவழி காட்டுகிறார்கள்.

தாம் வீடுபெற நின்றதற்கு இணங்க, பிறரையும் விலங்கியலிலிருந்து விலக்கி வீடுபேறு எய்த வழிவகுக்கிறார்கள். அப்படி மண்ணவர் விடுதலைக்காகப் பணி புரிந்த பெருந்தொண்டர்களின் நாயகம் எனத் தக்கவர் திருநாவுக்கரசு நாயனார்.

வேதநிந்தனை, இறை மறுப்பு பழைமை எதிர்ப்பு ஆகியவற்றுடன் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று அரசியலாதிக்கத்தால் அறிவு மயங்கி, அறனல்லாதவற்றைப் புரிந்த சமணர்கள், பண்டைத் தமிழரின் தொன்மை நெறிக்கு மாறான கருத்துக்களைப் பரப்பினர்.

அவர்களது புத்தி ஜீவிகள் தமிழ்கற்று புதிய இலக்கிய இலக்கணங்கள், தருக்கநூல் முதலியவற்றின்மூலம் விவேகிகளைத் தம்பால் ஈர்த்தனர்.

அப்பரும் அவர்களது பள்ளியில் கற்றுத் தருமசேனர் என்ற பெயருடன் அறிவுலகில் செல்வாக்குப் பெற்றிருந்தார். காலம் மாறியது.

உண்மை ஞானம் எது? வெறும் புத்தக அறிவு எங்கு கொண்டு செல்லும் என்ற வினாக்களுக்கு விடைதேடி, நாவுக்கு அரசரானார் அதனால் தொன்று தொட்டு அருட் புலவர்களால் பாடப்படும் மதிப்புப் பெற்றார்.

அப்பரின் குருபூசைத்தினமாகிய இன்று, அவரது பாடல்களைப் படிப்பதுடன், அவற்றை ஆய்வு நோக்கில் பார்ப்பதும், காலத்தின் தேவை எனலாம். ★

**- ஆ. சபாரத்தினம் -**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளியாகியுள்ளது
**விஞ்ஞானம்**
(மீட்டல் பயிற்சி)
ஆக்கம்:
J. R. சூரி
ஆண்டு 11 'இயற்கை சமநிலை'
ஆண்டு 10 'ஆவர்த்தன இயல்புகள்'
'குருதிச் சுற்றோட்டம்'
ஆண்டு 9 'வளி', 'மண்'

சஞ்சீவி
# சஞ்சிகை
21 - 04 - 1990 சனிக்கிழமை

**டெல்ரா கல்வி நிலையம்**
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
ஆண்டு 11, 10, 9 வகுப்புகள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R. சூரி |
| கணிதம் | — திரு. செல்வா, மதி |
| ஆங்கிலம் | — திரு. பிறிட்டோ |
| தமிழ் சமயம் | — திரு. கணேஷ், ஈசன் |
| சமூகக்கல்வி | — திரு. திருக்குமார் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |

# சோவியத் அதிபரின் "பெரஸ்ரொய்க்கா"வுக்கு சவால்விடும் லித்துஏனிய சுதந்திரபிரகடனம்

## மற்றொரு செக்கோஸ்லோவேக்கியாவாக மாறுவதைத் தடுப்பதில் அமெரிக்கா தீவிரம்

சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் ஒன்றான லித்து ஏனியாவில் உருவாகி உள்ள நெருக்கடி, தீர்வு எதுவும் ஏற்படாத நிலையில் 5 வாரங்களைத் தாண்டி விட்டது.

சோவியத் யூனியன் பல வழிகளாலும் லித்து ஏனியாவை மிரட்டிப் பணிய வைக்க முயன்றது. ஆனால் இவற்றை எல்லாம் லித்து ஏனியத் தலைவர்கள்பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. கடந்த மார்ச் 11 ஆம் திகதி லித்து ஏனியா நாடாளுமன்றத்தினால் வெளியிடப்பட்ட சுதந்திர பிரகடனத்தை வாபஸ்பெறப் போவதில்லை என்று சோவியத் தலைமைப்பீடத்துக்கு இவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

கடைசியாக கடந்த வெள்ளிக்கிழமை சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் (Mihail Corbachev) லித்து ஏனியத் தலைவர்களுக்கு 2 நாள் அவகாசம் கொடுத்திருந்தார். 2 நாட்களுக்குள் சுதந்திர பிரகடனத்தை வாபஸ்பெறவேண்டும் தவறினால் சோவியத் யூனியன் லித்து ஏனியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. இந்தக் காலக்கெடுவும் தற்போது எந்த வித சலசலப்பும் இன்றிச் கழிந்துவிட்டது. முன்னாள் சங்கீத ஆசிரியரான லித்து ஏனியா குடியரசு ஜனாதிபதி லான்ஸ் பேகிஸ் (Lands Begis) சோவியத் யூனியனின் மிரட்டல்களை பாரதூரமாகக் கருதியதாகத் தெரியவில்லை.

லித்து ஏனியப் பிரச்சினை தொடர்பாக சோவியத்யூனியன் லித்து ஏனியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று ஜனாதிபதி லான்ஸ் பேகிஸ் திரும்பவும் திரும்பவும் வலியுறுத்தி வருகிறார்.

இதிலிருந்து சிறிதாவது அவர் அசைந்துகொடுக்கும் அறிகுறி எதுவும் இதுவரை இல்லை. லித்து ஏனியத் தலைவர்கள் சுதந்திர பிரகடனத்தை வாபஸ்பெற்று விட்டு பேச்சுவார்த்தைக்கு வரட்டும் என்று மறுபுறத்தில் சோவியத் யூனியன் பிடிவாதமாக நிற்கிறது.

லித்து ஏனியத் தலைவர்கள் சுதந்திர பிரகடனம் செய்த மறுகணமே சோவியத் யூனியன் இராணுவ நடவடிக்கை மூலம் லித்து ஏனியாவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால் அது சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் 'பெரஸ் ரொய்க்கா'வை (PeresTroika) குழிதோண்டிப் புதைப்பதாக முடிந்திருக்கும்

அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் பாரிய சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் அதிபர் கோர்பச்சேவின் திட்டமே 'பெரெஸ்



கோர்பச்சேவ்

ரொய்க்கா' என்று அழைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே சோவியத் யூனியனில் பல கட்சி முறைக்கு கோர்பச்சேவ் அனுமதி அளித்திருந்தார். லித்து ஏனியாவில் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் இந்த அடிப்படையிலேயே பல கட்சிகள் போட்டியிட்டன. பிரிவினைவாதக் கொள்கையைக்கொண்ட சயூடிஸ் பொப்பியூலர் புரொண்ட் (Sajudis Popular Front) தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஆட்சிப் பீடமேறி இருவாரங்களில் (மார்ச் 11) அது லித்து ஏனியாவை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தது.

### சோவியத் யூனியன் படை எடுக்குமா?

லித்து ஏனிய நெருக்கடியை 1968இல் செக்கோஸ்லோவேக்கிய நெருக்கடியுடன் அரசியல் அவதானிகள் ஒப்பிடுகின்றனர்.

செக்கோஸ்லோவேக்கிய நெருக்கடியில் முதல் அரைவாசிக்கட்டம் இருந்த நிலையே தற்போது லித்து ஏனிய நெருக்கடியிலும் காணப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர்.

அப்போதைய செக்கோஸ்லோவேக்கியப் பிரதமர் அலெக்சாண்டர் டுப் செக் (Alexander Dubcek) செக்கோஸ்லோவேக்கியாவில் அரசியல் சீர்திருத்தங்கள் கோரி போர்க்கொடி உயர்த்தினார். இந்தப் பிரச்சினையில் அலெக்சாண்டர் டுப் செக்குக்கும் அப்போதைய சோவியத் அதிபரும்ஜோசப் ஸ்ராலினின் பின் கடும் போக்காளராகக் கருதப்பட்டவருமான லியோனிட் பிரஸ்னேவுக்கும் இடையில் எந்த ஒரு சமரச முயற்சியும் சாத்தியமாகாத நிலையில் வார்ஸா நாடுகளின் படை எடுப்பு இடம்பெற்றது.

இதனால் லித்து ஏனிய பிரச்சினையிலும் சோவியத் யூனியனின் பொறுமை ஒரு வரையறைக்குள்தான் என்று நம்பப்படுகிறது.

### பிரிவினைவாத இனவாத கிளர்ச்சிகள்

சோவியத் யூனியனின் 6 குடியரசுகளில் தற்போது பிரிவினைவாதக் கிளர்ச்சிகள் அல்லது இனவாதக் கிளர்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. லித்து ஏனியப் பிரச்சினையில் விட்டுக்கொடுத்தால் அது ஏனைய குடியரசுகளுக்கும் ஊக்கம் அளிப்பதாக அமையும் என்று சோவியத் தலைமைப்பீடம் கருதுகிறது.

சோவியத் யூனியனுக்கு உடனடிப் பயமுறுத்தலாக இருந்துவரும் மற்றைய



இரு பால்டிக் குடியரசுகள் எஸ்தோனியாவும் (Estonia) லத்வியாவும் (Latvia) ஆகும்.

இந்த இரு குடியரசுகளில் இருந்தும் ஏற்கனவே சுதந்திரப் பிரகடனப் பயமுறுத்தல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

சமீபத்தில் இந்த இரு குடியரசுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் பிரிவினைகோரும் சக்திகளே வெற்றிபெற்று ஆட்சியை அமைத்துள்ளன.

லத்வியா குடியரசின் நாடாளுமன்றம் எதிர்வரும் மே 3 ஆம் திகதி கூடுகிறது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் சுதந்திர பிரகடனத்துக்கு ஆதரவாகக்கிடைப்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது என்கிறார் லத்விய ஜனாதிபதி அனெரோலி கோர்வுநோவ்ஸ் (Anatoly Gorvunovs)

எஸ்தோனியா ஏற்கனவே சோவியத் கம்யூனிட்ஸ் கட்சியுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டுவிட்டது.

உடனடி சுதந்திரப் பிரகடனம் என்ற கொள்கையில் இருந்து சிறிது விலகி 1940ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த சுதந்திரத்தை அடைவதற்கான காலம் ஒன்றை (Transitional Period) எஸ்தோனிய ஜனாதிபதி அறிவித்துள்ளார். சோவியத் யூனியனைப் பொறுத்தவரை இந்த மூன்று பால்டிக் குடியரசுகளையும் ஒரே கண்நோட்டத்துடனேயே அது நோக்கிறது.

அப்போதைய சோவியத் அதிபர் ஜோசப் ஸ்ராலினுக்கும் நாஜிஜேர்மன் தலைவர் அடோல்ப் ஹிட்லருக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்பாட்டுக்கு அமைய இந்த மூன்று நாடுகளும் 1940 ஆம் ஆண்டு சோவியத் யூனியனுடன் பலவந்தமாக இணைக்கப்பட்டன. 1940 ஆம் ஆண்டு இணைப்பு சட்டவிரோதமானது என்பதே இந்த மூன்று குடியரசுகளின் வாதம் ஆகும்.

சோவியத் யூனியனுடன் தற்போது தகராறில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய சோவியத்குடியரசுகள் ஜோர்ஜியா (Georgia) மோல்டாவியா (Moldavia) உக்ரெய்ன் (Ukrainne) ஆகும். இவற்றில் ஜோர்ஜியாவிலும் மோல்டாவியாவிலும் பிரிவினை கோரி ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. உக்ரெய்ன் குடியரசில் அரசியல் சீர்திருத்தங்கள் கோரி பலமான குரல் எழுப்பப்பட்டுவருகிறது.

### சோவியத்யூனியன்பிடி இறுகிறது

லித்து ஏனியாமீது பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ள சோவியத்யூனியன் சிறிது சிறிதாக லித்து ஏனியா மீதான தனது பிடியை இறுக்கிவருகிறது.

லித்துஏனியாவைதரையால் இணைக்கும் 80 மைல் நீள



லான்ஸ் பேகிஸ்

மானபோலந்து–லித்து ஏனிய எல்லையைசோவியத்யூனியன் மூடிவிட்டுள்ளது. சோவியத் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பி. அதிகாரிகளும் சோவியத் பொலீஸாரும் லித்து ஏனியாவின் தொழிற்சாலைகள், அணுசக்தி மின் உற்பத்தி நிலையம், அரசாங்க அலுவலகங்கள், எல்லைக்காவல் நிலையங்கள் ஆகியவற்றைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளார். சோவியத் அதிபரின் குறுகியகால காலக்கெடுக்களின் மத்தியில் லித்துஏனியத் தலைவர்களைப் பயமுறுத்தும் விதத்தில் சோவியத் டாங்கிகள், ஜெட்டுகள் அடிக்கடி லித்து ஏனியாவில் காணப்படுகின்றன.

சோவியத் இராணுவத்தில் இருந்து களவாக தப்பிவந்த லித்துஏனிய வீரர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியாக சோவியத் பொலீஸார் தற்போது லித்துஏனியாவில் தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். இது மட்டுமே தற்போது அங்கு சிறு சலசலப்பை ஏற்படுத்தி வருகிறது

சுமார் 40 லட்சம் பேரைக் கொண்ட சோவியத் இராணுவத்தில் 50 ஆயிரம்பேர் லித்து ஏனியர்கள் சமீபத்தில் சுதந்திர பிரகடனத்தின் பின் இவர்களில் 1,500 பேர் சோவியத் இராணுவத்தில் இருந்து விடுபட்டு லித்துஏனியாவுக்குத் தப்பிவந்துவிட்டனர். இவர்களைக் கைதுசெய்து இராணுவச் சட்டத்தின் கீழ் கடும் தண்டனை விதிக்கப் போவதாக சோவியத் யூனியன் தற்போது அறிவித்துள்ளது.

### அமெரிக்காவுடனான உறவில் நெருக்கடி

லித்துஏனிய நெருக்கடி சர்வதேச அரங்கிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. லித்துஏனியா மீது சோவியத் இராணுவத் தலையீடு இருக்கக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கோரியுள்ளார். மே 30 ஆம் திகதிக்கும் ஜூன் 3 ஆம் திகதிக்கும் இடையில் கோர்பச்சேவ் – புஷ் சந்திப்பு நிகழும்போது லித்துஏனிய விவகாரம் முக்கியமாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. லித்துஏனியா மீது சோவியத் யூனியன் இராணுவ நடவடிக்கை எடுத்தால் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுகளுக்கும் மற்றும் சோவியத் – அமெரிக்க வர்த்தகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் முயற்சிகளுக்கும் குந்தகம் ஏற்படலாம் என்று அமெரிக்கா மறைமுகமாக எச்சரிக்கை செய்து வருகிறது.

லித்துஏனியா மீதான சோவியத் யூனியனின் ஆதிக்கத்தை அமெரிக்கா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. 1922 ஆம் ஆண்டு அமெரிக்கா லித்துஏனியாவை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரித்திருந்தது.

ஒரு வருடத்துக்கு முன் சீனாவில் தியன் அன் மென் சதுக்கத்தில் சீன மாணவர்களின் கிளர்ச்சியை சீன இராணுவம் அடக்கியபோது அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட நெருக்கடியைவிட மிக மோசமான நெருக்கடியை லித்துஏனிய விவகாரம் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

சோவியத் யூனியனால் தற்போது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடை லித்து ஏனியாவை இக்கட்டான நிலைக்குள் தள்ளலாம்.

சோவியத் குடியரசுகளில் லித்துஏனியா இயற்கையாகவே வளம் குறைந்த குடியரசு ஆகும். லித்துஏனியா 37 லட்சம் குடிசனத்தைக்கொண்டது. தனக்குத் தேவையான உணவுவகைகளை ஓரளவு உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இக்குடியரசு இருந்தாலும் எரிபொருள், இயற்கை வாயு, டிராக்டர், பருத்தி, உலோகவகைகள் ஆகியவற்றுக்கு நூற்றுக்கு நூறு வீதம் இது சோவியத் யூனியனிலேயே தங்கி இருக்கிறது. லித்து ஏனியாவின் சீனித் தேவையிலும் 58 சத வீதம் சோவியத் யூனியனிடமிருந்தே வருகிறது.

இப்பொருள்களை சோவியத் யூனியன் மானிய விலையில் லித்துஏனியாவுக்கு இது வரை கொடுத்து வந்தது. மானிய விலையில் கொடுத்தும் 230 கோடி டாலர்களை லித்துஏனியா சோவியத் யூனியனுக்கு இன்னும் வர்த்தகக் கடனாகச் செலுத்தவேண்டி இருக்கிறது.

சோவியத் யூனியனின் பயமுறுத்தல்களைச் சமாளிக்கும் நோக்குடன் லித்துஏனியா, லத்வியா, எஸ்டோனியா ஆகிய மூன்று பால்டிக் குடியரசுகளும் பால்டிக் கவுன்சில் ஒன்றை உருவாக்கி உள்ளன.

இவை எதுவும் சோவியத் யூனியனின் திட்டங்களைத் தடுத்துவிடக் கூடியவை அல்ல.

சர்வதேச நிர்ப்பந்தம் ஒன்றே மற்றொரு செக்கோஸ்லோ வேக்கியாவாக லித்துஏனியா மாறுவதைத் தடுக்க முடியும். ★

# இலங்கை கிரிக்கெட் துறைக்கு பெருமை சேர்க்கும் துலிப் மெண்டிஸ்

☐ ஒஸ்ரேலேசியா கிண்ணத்துக்கான ஷார்ஜா கிரிக்கெட் போட்டி இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

ஷார்ஜா கிண்ணப்போட்டிகள் 1981 ஆம் ஆண்டு ஆரம்பமாகின.

அன்று தொடக்கம் ஷார்ஜா கிரிக்கெட் வீரர் நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் சிறந்த வீரர்களுக்கு சன்மானம் வழங்கப்பட்டு வருகிறது.

1981 ஆம் ஆண்டில் இருந்து இச் சன்மானம் வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த ஆண்டு இலங்கை வீரரான துலிப் மெண்டிஸுக்கு வழங்கப்பட உள்ளது.

இவ்விருதைப் பெறும் முதல் இலங்கையர் என்ற பெருமையும் துலிப் மெண்டிஸுக்குக் கிடைக்கிறது.

அதுமட்டுமல்ல, இலங்கையின் மிகவும் செல்வந்த கிரிக்கெட் வீரர் என்ற பெயரும் அவருக்குக் கிடைக்கிறது.

சன்மானமாக 35 ஆயிரம் அமெரிக்க டாலர் அவர் பெறுகிறார். இலங்கைப் பணத்தில் இது 14 லட்சம் ரூபாவுக்குச் சமமாகும்.

இச் சன்மானத்தைக் கடந்த காலங்களில் பெற்ற வீரர்கள் விவரம் வருமாறு;

1982 — சுனில் கவஸ்கர், இன்ரிகாப் ஆலம், நாஸர் முகமட், சுபாஷ் குப்தே.

1983 — ஜி விஸ்வநாத் ஸஹீர் அப்பாஸ், அலிமுடீன் ராம்சுந்த் தேசாய்.

1984 — பி. எஸ். பேடி,



துலிப் மெண்டிஸ்

இம்ரான்கான், சலிம் துர்ராணி.

1985— வாஸிம் பாரி, செய்யத் கிர்மாணி, குல் முகமது, ஏக்நாத்ஸோல்கர், கிளைவ லொய்ட்.

1986— திலிப் வெங்சாகர், ஜவாட் மியான்ட்டாட், வாஸிர் முகமட், விஜே ஹஸாரி.

1987— முதாஸ்ஸர் நஸார், கபில்தேவ், முஷ்தாக் அலி, முஸ்டாக் முகமது.

1988 — ரவி சாஸ்திரி, மோஷின்கான், பி. எஸ். சந்திரசேகர், மூனிர்மாலிக்.

1989 — அப்பாஸ் [illegible], சலாஹுதீன் அஹ்மத். ★

# உலகில் 11 கோடி வீரர் உதைபந்தாட்டத்தில்!

● சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் 11 கோடியே 70 லட்சம் உதைபந்தாட்ட வீரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

இவர்களில் அரைப்பங்கினர் ஆசியாக்கண்டத்தில் உள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் பிளேற்றர் தெரிவிக்கிறார்.

இந்த எண்ணிக்கையில் இராணுவம், பொலீஸ் மற்றும் ஆயுதபடைகளில் உள்ள உதைபந்தாட்ட வீரர்கள் அடங்கவில்லை.

ஆசியாக்கண்டத்தில் 5 கோடி 40 லட்சம் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட வீரர்கள் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோர் சீனாவிலும் இந்தியாவிலும் உள்ளனர்.

ஆனால் எதிர்வரும் ஜூன் மாதம் ரோமில் நடைபெற உள்ள 24 நாடுகள் பங்குபற்றும் உலக உதைபந்தாட்டக் கிண்ணப் போட்டியில் ஆசியாக்கண்டத்தில் இருந்து ஆக இரண்டே இரண்டு உதைபந்தாட்டக் கோஷ்டிகள் பங்குபற்ற உள்ளன.

ஆனால் 2 கோடி 80 லட்சம் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட வீரர்களைக் கொண்ட ஐரோப்பாக் கண்டத்தில் இருந்து 14 நாடுகள் உலக கிண்ணப் போட்டிகளில் பங்குபற்ற உள்ளன.

ஒரு கோடி 60 லட்சம் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட வீரர்களைக்கொண்ட தென் அமெரிக்காவில் இருந்து நான்கு நாடுகள் பங்குபற்றுகின்றன.

அவற்றில் ஒன்று தற்போதைய உலக சம்பியனான ஆர்ஜென்ரீனாவும் ஒன்றாகும்.

ஒருகோடி 15 லட்சம் உதைபந்தாட்ட வீரர்களைக் கொண்ட மத்திய அமெரிக்கா, வட அமெரிக்கா மற்றும் கரிபியன் தீவுகளில் இருந்து அமெரிக்காவும் கோஸ்டரிக்காவும் உலக கிண்ணப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

ஆபிரிக்கக் கண்டத்தில் 50 லட்சம் உதைபந்தாட்ட வீரர்கள் உள்ளனர். ஆனால் உலக கிண்ணப் போட்டியில் எகிப்தும் கமரூனுமே பங்குபற்றுகின்றன. ★



## பொது அறிவுப் போட்டி இல: 37
பரிசு பெற்றவர்

முதலாவது பரிசு:
செ. சூசையா,
26, தண்ணீர்த்தாங்கி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
ஒரே ஒரு சரியான விடையே கிடைத்ததால் முதலாவது பரிசு மட்டுமே வழங்கப்படுகிறது.

**பொது அறிவுப் போட்டி இல: 37 சரியானவிடைகள்**
1. மார்கரட் தாட்சர் 2. லித்துவேனியா 3. டொல்பின் 4. தென்றல் 5. இந்தியா 6. சிரபுஞ்சி 7. பாரதிதாசன் 8. கீதை 9. நெப்போலியன் 10. அமெரிக்கா 11. எய்ட்ஸ் 12. தாஜ்மகால்.

## பாரிய இயந்திராதிகளுக்கு விற்பனை முகவர்கள் தேவை

★ நாம் இறக்குமதி செய்யும் சர்வதேசப் புகழ்மிக்க பின்வரும் வகைகளைச் சார்ந்த பாரிய இயந்திராதிகளுக்கு,

**யாழ்ப்பாணம்**
**திருகோணமலை**
**மட்டக்களப்பு**

★ ஆகிய பட்டினங்களில் விற்பனை முகவர்கள் தேவை.

★ எல்லா வகையான Caterpillar மண் அகற்றும் எந்திரம். மின்சார ஜெனரேற்றர்கள், Hyster மற்றும் Nissan பாரம் உயர்த்தும் ட்ரக்குகள், Hamm வீதி றோலர்கள், Wellux மின்சார ஜெனரேற்றர்கள், Timberjack, Scania ட்ரக்குகள், ட்றெயிலர்கள், பஸ்கள், Lincoln வெல்டிங் உபகரணம் முதலியன.

★ விற்பனை முகவர்களாக இருக்க விரும்புபவர்கள் பட்டினத்தில் போதிய அலுவலக இடவசதி, காட்சியறைகள், பணியாளர் போக்குவரத்து வசதி என்பன கொண்ட பிரபல வர்த்தகர்களாக இருக்க வேண்டும். இயந்திராதிகளைப் பராமரித்து சிறு சிறு பழுது பார்ப்பதற்கான வசதிகள் இருப்பது விரும்பத்தக்கது. ஏப்பிரல் 30ஆந் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்.

முகாமைப் பணிப்பாளர்,
யுனைட்டட் ட்றாக்டர் அன்ட் எக்குயிப்மென்ட் லிமிடெட்,
447, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org